Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 16/50

දිනමුරසු වාරමලර්

மார்ச். 03 - 09, 2005

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NAT… முரசு 60



## மூன்றாண்டு கால மௌன யுத்தம்

— எக்ஸ்ரே ரிப்போர்ட்

## சங்கர மடத்துக் கிங்கரர்கள்

பாகம் 9

## ஜே. வி. பி + பொ. ஐ.மு + இ.தொ. கா
## புதிய அரசியல் குழப்பங்கள்

# ஆன்மீகம்

## ஆண்டவனுக்குப் பயந்து வாழும்போது நாடு நன்மை அடையும்

இப்போது எங்கு பார்த்தாலும் எவர் வாயிலிருந்தும் பேசப்படுவது சுனாமி பற்றிய பேச்சுக்களே. கடந்த 2004.12.26க்கு முன்னர் சமாதானம் பற்றியே சகல இடங்களிலும், சகலரது வாயிலிருந்தும் பேசப்பட்டது.

சமாதானப் பேச்சுக்கு அத்திவாரம் இதயசுத்தியோடு உறுதியாக இடப்படாததனால் அது சஞ்சலத்துக் குள்ளானது. போராட்ட சூழலில் புதையுண்ட பொருளா தாரத்தைக் கட்டி எழுப்ப முடியாதபடி முட்டி மோதிய முரண்பாட்டுக் குழுக்களால் நாடு விக்கித் தவித்த வேளையிலேதான் இயற்கை அனர்த்தம் சுனாமியாக வந்து சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மனித நேயம் மறைந்து, புனிதம் கெட்டு, மதக் கோட்பாடுகள் மழுங்கடிக்கப்பட்டு, இறை நம்பிக்கை அற்று அநாகரீகம் அத்துமீறி நடக்கும் இக் கலியுகத்தில் இப் பேரழிவு ஏற்பட்டிருப்பது அனேக மக்களின் அறிவுக் கண்களைத் திறந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். ஆண்டவனுக்குப் பயந்து அனைவரும் வாழ முற்படும்போது நாடு நன்மையடையும்.



## சமாதானத்தைத் தேடுவோம்

"ஐயோ! கடல்கள் கொந்தளிக்கிறது போல கொந்தளிக்கிற அநேக ஜனங்களின் திரளும், பலத்த தண்ணீர்கள் இரைகிறது போல....(ஏசா 17:12)

அன்பானவர்களே! நீங்கள் கடலைக் கவனித்துப் பார்த்திருக்கிறீர்களா? அவ்விதமாகப் பார்த்திருப்பீர்களேயானால் ஒரு காரியத்தைக் கண்டிருப்பீர்கள். அது எப்பொழுதும் தளம்பிக்கொண்டே இருக்கும். ஆனால் சிலவேளைகளில் கடல் எவ்வித சஞ்சலமும் இன்றி அமைதியாக இருப்பதைப் போல காட்சியளிக்கும். ஆனால் அது உண்மையாக அமைதியாய் அல்ல. அமைதி போலக் காணப்பட்டாலும் அது ஆழத்தில் தளம்பிக்கொண்டுதான் இருக்கும். இன்று அநேக கிறிஸ்தவர்களைக் கவனித்துப் பார்த்தால் இவ்விதமான ஒரு கடலைப் போலத்தான் அவர்களுடைய வாழ்க்கையும் காணப்படுகின்றது. இதே விதமான வாழ்க்கைதான் இஸ்ரேல் மக்களிடத்திலும் காணப்பட்டது. சாப்பாடு இல்லாவிட்டால் முணுமுணுப்பு, தண்ணீரில்லாவிட்டால் அதற்கொரு முணுமுணுப்பு, அது மாத்திரமல்ல. விதம் விதமான சாப்பாடு இல்லை என்ற சஞ்சலிப்பு, நடந்தாலும் திருப்தியில்லை. ஓடினாலும் திருப்தியில்லை. அருமையான சகோதரனே! சகோதரியே! உன் வாழ்வை சற்று சிந்தித்துப் பார். உன் வாழ்வில் காணப்படும் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை விட்டுவிடத் தீர்மானம் செய். சமாதானத்தை உன் வாழ்வில் நீ காண்பாய்.

-ஆர்.பாலசந்திரன், அல்மா சீட்டன், கந்தப்பளை.

## ஹஜ்ஜின் மகிமை

விண்ணில் மலக்குகள் தலாப் செய்யும் பைத்துல் மஃமூரைப் போன்று, அதற்கு நேராகி மண்ணில் முதன்முதலாக அமைக்கப்பட்ட வணக்கத் தலமே புனித கஃபாவாகும்.

இக் கஃபாவை வசதிபடைத்த முஸ்லிம்கள் பிரதி வருடமும் குறிப்பிட்ட காலத்தில் மக்கா சென்று தரிசித்து, செய்கின்ற வணக்கம்தான் ஹஜ்.

ஹஜ்ஜுக் கடமை மனித வாழ்வில் அளப்பரிய மகத்துவங்களை மண்டியிடச் செய்ய வல்லதாகும். இக் கடமையை உரிய காலத்தில் பேணுதல் உயரிய பலன்களைத் தரும்.

புனித ஹஜ்ஜுக்காக வெளிக் கிளம்புகிறவர்களுக்கு கஃபாவில் மேன்மையான தானங்களும் உயர்வான பதவிகளும் ஈமானையும் இஹ்லாஸையும் பெற இலகுவான வழிகளும் அங்கு கிடைக்கின்றன.

"ஒருவர் எவ்வித குற்றமும் புரியாமல் நிறைவேற்றிய ஹஜ்ஜுக்கு அல்லாஹ்விடம் அவருக்கு சுவர்க்கமேயன்றி வேறு பிரதிபலனில்லை" என்று நபி அவர்கள் நவின்றுள்ளார்கள்.

-எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.601



பரிசுக்குரிய கவிதை

### மறக்க மாட்டேன்

என்னை வளர்த்த
குடும்பத்தாரை
கடலம்மா காவு கொண்டு விட்டாள்.
மிஞ்சிய மனிதர்களும் அனாதை!
நானும் அனாதை!
கொடுக்கும் நிவாரணங்களில்
ஒரு குடையாவது தந்தீர்களே!

-என்.றம்ஸான், யாழ்ப்பாணம்.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### சமதர்மம்

அகதியான
பூனைக்குக் குடை
மனிதனுக்குக் கூடாரம்
சுனாமியைப் போல்
பேதங்களில்லாத
சம நிவாரணங்களோ?

-யூதாசீக், குச்சவெளி.

### ஏதாச்சும் தர்ரீயளா?

பக்கத்தில் இடமிருக்கு வர்ரீயளா
பசியாற ஏதாச்சும் தர்ரீயளா?

-புதியவன், கொழும்பு.

### குடை மட்டுந்தான்

வீடிழந்த மக்களுக்கே கூடாரம்
உனக்குக் குடை மட்டுந்தான்.

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### குளுகுளுப்பு

வெய்யிலில் நா(ய்)ன் படாத பாடுபட்டு
வந்து குந்தியிருக்கிறன்
குடை நிழல் குளுகுளுப்பாயிருக்கு.

-மூதூர் மனு மிக்கேல்.

### குடைக்குள் பூனை

பாலையும் மீனையும்
பகிர்ந்தளிக்க
பூனைக்கு நிழல்போட்ட அறை
புரிகிறதா...? சுனாமி
நிவாரணப் பங்கீடு போல.

-எஸ்.பி.பாலமுருகன்.

### பவுசு

சுனாமிக்கு பவுசு - வந்தால்
எங்கள் வீட்டுப் பூனையும்
குடை பிடிக்கும்.


-எம்.ராமமூர்த்தி, வெலிமடை.

### இன்றைய நிலையை.....

ஏழைகளின்
நிழலில்
குளிர்காயும் இன்றைய
கனவான்களின்
நியதியை
படம் மூலம் புடம் போட்டுக்
காட்டும் தைரியம்
தினமுரசுக்கன்றி
வேறு யாருக்குண்டு?

-மீராமுகைதீன் ஹாலித், ஏறாவூர் - 03ஏ.

## கவிதைப் போட்டி இல.604



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 09.03.2005.

கவிதைப் போட்டி இல.604
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### துக்க அனுஷ்டானம்

மானிடரின் கலாசார சீர்கேடோ
என்னவோ!
ஆங்காங்கே இயற்கையின்
சீற்றம்
பழக்க தோசமோ என்னவோ!
மனிதப் படுகொலைகளில்
இன்னும்
மாற்றங்கள் தென்படவில்லை.
வசந்தம் தொலைத்த பிரபஞ்சம்
இது
தாங்கலையே மனசு
"துக்கம் அனுஷ்டிக்கிறேன்"
இந்த
கறுப்புக் குடையின் நிழலில்.

-எம்.பி.எம்.அன்ஸார், மூள்ளிப்பொத்தானை.

### ?

அன்று
காதலியின்
எண்ணங்களுக்காக
காதலனது - குடைக்குள்
மழை!
இன்று
தினமுரசு வாசகர்
எண்ணங்களுக்காக
எந்தக் - குடைக்குள்
பூனை - ?

-மு.சரவணன் காமாட்சி, கொழும்பு - 12.

### சுனாமி எலிகள்

விரித்த குடையின்
நிழலில்
எலி பிடிக்கும் பூனை
குவிந்த சுனாமி
உதவிகளில்
குழி பறிக்கும் எலிகள்

-அ.சந்தியாகோ, கண்டி.

**கவிதைகள் அனுப்பி பாராட்டுப் பெறும் வாசகர்கள்**

1. ஏ.எஸ்.எம்.ரவூப் - கொழும்பு - 15
2. ஏ.எம்.எப். பர்மினா - புத்தளம்
3. காமீம் செய்னுலாப்தீன் - கிண்ணியா - 05
4. றெ.பி.மரியடினேசன் - மன்னார்
5. க.மலர்ராஜன் - திருகோணமலை
6. பெருமாள் சுந்தர் - பொகவந்தலாவை
7. எம்.மபாஸ் அஹ்மத் - ஓட்டமாவடி - 01
8. தெ.லோஜனா - கொழும்பு - 06
9. மு.ப.நுஸ்ஹா ஷிஃபா - காத்தான்குடி - 05
10. புதியவன் - கொழும்பு.

# உங்கள் பக்கம்

## பதுரியாச் சந்தி வீதியில் அவலம்

கொழும்பு, மட்டக்குளி - பதுரியா சந்தியில் நீர்க் கசிவு ஏற்பட்டுள்ளது. பாதையின் கீழே நீர்க் குழாய்கள் உடைந்ததால்; இந்த நிலை ஏற்பட்டுள்ளது. வீதியில் நீர் நிறைந்துள்ளதால் வாகனங்கள் செல்லும்போது பாதையில் செல்வோர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

இப் பகுதியில் மாநகர சபை அங்கத்தவர்கள் இருந்தும் பாராமுகமாக இருக்கின்றனர்.

மட்டக்குளி - பதுரியா சந்தி என்பது ஒரு பிரதான வீதிகள் சந்திக்கும் 100 வருடங்கள் பழைமை வாய்ந்த சந்தியாகும் இந்தச் சந்தியில் நீர் நிறைந்து தேங்குவதால் கிருமிகள் அதிகரித்துள்ளன. இதனால் நோய் தொற்றும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இரண்டு வாரங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் விடப்பட்டுள்ளது. நீர் விநியோக சபைக்கு அறிவித்தும் எந்தப் பலனும் கிட்டவில்லை. அதிகளவில் வாகனங்கள் செல்லும் இப் பாதையில் நீர் தேங்கி நிற்பதால் தற்போது வீதி பழுதடைந்து குழிகள் காணப்படுகின்றன. பாரவூர்திகள், கொள்கலன்கள் அதிகம் செல்லும் பாதை இது. இப் பாதையினூடாக வத்தளை - நீர்கொழும்பு செல்ல முடியும். எனவே மாநகர சபையும் நீர் விநியோக சபையும் ஒன்றிணைந்து நீர்க் குழாய்களையும் இப் பாதையையும் திருத்தி அமைக்குமாறு வேண்டுகிறேன்.

-ஏ.எஸ்.எம்.ரவூப், மட்டக்குளி, கொழும்பு - 15.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -4-514282
தொலை நகல் (Fax):-4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசக[ர்] சாலை




அன்புடன் ஆசிரியர் அவர்கட்கு.
தினமுரசு தாங்கி வரும் படைப்புக்கள் அத்தனையும் முத்துக்கள். மாற்றுக் கருத்துக்களை கொண்ட ஒரேயொரு தமிழ்ப் பத்திரிகை என்றால் அது தினமுரசுதான்.

அதிகளவு விடயங்களும் கட்டுரைகளும் கொண்ட அற்புதமான இந்த இதழ். மிகவும் சிறிய எழுத்து வடிவம் கொண்டதால் பல சிறப்பான கட்டுரைகளையும் கவிதைகளையும் முக்கிய விடயங்களையும் பாதியில் விட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு தொடர்ந்து உன் சேவை தொடர வாழ்த்துக்கள்.

-யோஸ் ஏப்ரகாம், திருகோணமலை.

### பணி தொடரட்டும்!

தமிழால்
தமிழுக்கு
சேவை புரிந்து!
தமிழால்
தமிழருக்கு
உழைத்து!
தமிழருக்காக
தமிழால்
தலை நிமிர்ந்து
நடை போடும்
தினமுரசே!
வாழ்க, வளர்க....!
உன்...
தமிழ்ப் பணி
தடையின்றி
தொடர்ந்திட
வாழ்த்துவதில்
வளமடைகின்றான் - இந்த
தமிழின் மகன்....

கா.சுபாஷ், டிக்கோயா.

### அருமைக் காதலன்

வியாழன் தோறும் எம் கைகளில் கிடைக்கும் என் அன்புக் காதலன் முரசே! இனிமையான ஆக்கங்களையும், ஆக்கபூர்வமான, ஆணித்தரமான கருத்துக்களையும் பக்கச் சார்பற்ற செய்திகளையும் சுமந்து வாரம் தோறும் கிடைக்கும் தினமுரசே! நீ எந்நாளும் எம் கையில் கிடைக்க வேண்டும். உன் சேவையைக் கண்டு நான் இன்புற வேண்டும். முரசே! உன்னில் இருந்து வரும் அத்தனை தகவல்களும் மூளைக்குச் சிந்தனையை ஊட்டக் கூடியவைதான். நீ இளைய நெஞ்சங்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளாய். முரசு வாழ்க! பல்லாண்டு வாழ்க. என் அடி மனதில் எழும் அன்பான வாழ்த்துக்கள் இவை. தொடரட்டும் உன் சேவைகள்.

-முல்லை ரஸீஹா, கொத்தாந்தீவு.

# இடையுமில்லை, இறுதியுமில்லை! பொதுக்கட்டமைப்பும் இல்லை!

## தமிழ்த் தலைமையின் தகிடுதத்தங்களால் நிவாரணங்களும் இல்லையா?

"வடக்கு, கிழக்கில் கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண, மீள்கட்டுமாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு எவ்வித காலதாமதமுமின்றி உடனடியாக அரசுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பொன்றினை ஏற்படுத்தப் புலிகள் முன்வர வேண்டும்" என்று வடக்கில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுவரும் சர்வதேச தொண்டர் நிறுவனமொன்றினைச் சேர்ந்த செல்வி லிண்டா பீற்றர்சன் என்ற பெண்மணி தெரிவித்தார். வடக்கு, கிழக்கே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாலும் மக்களின் அவலங்களையும் துயரங்களையும் நேரில் பார்த்தவரென்ற வகையிலும் இவ்வாறு கூறுகிறேனென்று அந்தச் சமூக சேவகி குறிப்பிட்டார். இது குறித்து வட பகுதி பிரஜைகள் குழுவின் முக்கியஸ்தரான எஸ்.அருந்தவநாதன் கருத்துத் தெரிவிக்கையில் :

"ஆளும் கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி., பொதுக்கட்டமைப்புக்கு விரோதமான கருத்துக்களைத் தெரிவிப்பதாலும் அரச நிறுவனங்களில் ஊழல் நிறைந்திருப்பதோடு, மந்தகதியில் செயற்பாடுகள் இடம்பெறுவதாலும் பொதுக் கட்டமைப்பில் புலிகள் பங்குகொள்வதில் அர்த்தமில்லையென்று புலித்தேவன் குறிப்பிட்டுள்ளார். கிட்டத்தட்ட பத்துக்கு மேற்பட்ட சுற்றுப் பேச்சுவார்த்தைகளை அரசின் சமாதான செயலகத்துடன் நடத்திய புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், திடீரென நம்பிக்கையிழந்ததாகக் கூறுவது வெறும் சாட்டுப் போக்குப் போலவே தென்படுகிறது. முழு நாட்டிலும் எழுபது சதவீதமான பாதிப்பு வடக்கு, கிழக்கிலேயே ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் கூறுகின்றனர். இந்த நிலையில், ஊழலையும் ஜே.வி.பி.யையும் சாட்டிக்கொண்டு தமிழ் மக்களின் துயர்துடைக்கும் பணிகளிலிருந்து புலிகள் விலகுவது தவறானதாகும். அதுவும் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை பற்றியும் பொதுக்கட்டமைப்புப் பற்றியும் புலிகளுடன் பேசத் தயாரென ஜே.வி.பி.யின் அழுத்தங்களையும் மீறி, ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில், புலிகள் ஒதுங்குவது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும். புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் இறுதித் தீர்வினை அரசு வழங்குமென்ற நம்பிக்கை இல்லாததால் இடைக்காலத் தீர்வு பற்றியே அரசுடன் பேசுவோமென்று முன்னர் குறிப்பிட்டிருந்தார். இறுதித் தீர்வை அரசு தராதென்று நம்பிக்கையிழந்து பேசிய பிரபாகரன், இடைக்காலத் தீர்வை மட்டும் அரசு தருமென்று எப்படி நம்பிக்கை கொள்கிறாரென்று கேள்வியெழுப்பிய சில ஊடகங்கள், இந்த முரண்பாட்டை எடுத்துக் காட்டி, புலிகள் என்றுமே இணக்கத்துக்கு வரமாட்டார்களென்று விமர்சித்திருந்தன. இப்போது இறுதியுமில்லை. இடைக்காலமுமில்லை; பொதுக் கட்டமைப்புமில்லை. தமிழ் மக்களுக்குக் காலங்காலமாகத் துன்பங்களே தஞ்சமாவெனக் கேள்வி எழுப்பப்படுகிறது" என்று சொன்னார்.

## மட்டக்களப்பில் மாவீரர்களுக்கு சுனாமிப் பேரலை வீடுகள்

மட்டக்களப்பில் சுனாமிக் கடற் பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பத்தாயிரம் வீடுகளை உடனடியாகக் கட்டிக் கொடுக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக அரசாங்கம் அறிவித்த கையோடு, புலிகள் தமக்கு வேண்டியவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான அழுத்தங்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கி வருவதாக மட்டக்களப்புத் தகவல்கள் கூறுகின்றன. சுனாமியால் பாதிக்கப்படாத பலரின் பெயர் விபரங்களைச் சம்பந்தப்பட்ட கிராம சேவகர்களூடாக உறுதிப்படுத்தி உரிய அதிகாரிகளிடம் புலிகள் கையளித்துள்ளனர். இவ்வாறு 2367 விண்ணப்பங்கள் இதுவரை கையளிக்கப்பட்டுள்ளதாகத் தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத மட்டக்களப்பு செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

புலிகளூடாகப் புதிய வீடுகள் கோரி விண்ணப்பித்தவர்களில் பெருந்தொகையானோர் மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களென்றும் அந்த அதிகாரி கூறினார். மட்டக்களப்பு ஆனைப்பந்தி கடற் பேரலைகளினால் பாதிக்கப்படாத நகரப் பகுதியாகும். இங்கு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையின்போது. கொல்லப்பட்டவர்களாவர். இந்த மூவரின் குடும்பங்களுக்கும் மூன்று வீடுகள் வழங்கும சம்பந்தப்பட்ட உயரதிகாரிக்கு உத்த வழங்கப்பட்டுள்ளதாம். வீடுகள் எ வழங்கப்பட வேண்டுமென்று வாய்மூ உத்தரவு விடுக்கப்பட்டுள்ளதாகவும் ம அரச அதிபரோடு சம்பந்தப்பட்ட அதிக கூறுகிறார்.

## இந்து அமைப்புகளுக்கு ஜனாதிபதி உதவ

வடக்கு, கிழக்கு கடற் பேரலையினா பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண மீள்கட்டுமாணப் பணிகள் தொடர்பாக இந் அமைப்புகளின் பிரதிநிதிகள் குழுவொன் கடந்த 24ஆம் திகதி ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடியது. அரசி உதவிகள், சலுகைகள் குறித்தும் உத்தே திட்டங்கள் குறித்தும் இக் கலந்து யாடலில் விரிவாக ஆராயப்பட்ட மீள்கட்டமைப்புத் தொடர்பான திட்டங்களை தம்மிடம் கையளிக்குமாறு கேட்டுக்கொண் ஜனாதிபதி, உரிய உதவிகளை வழங்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். இ சந்திப்புக்கான ஏற்பாடுகளை அமைச்ச டக்ளஸ் தேவானந்தா ஏற்படுத்தி கொடுத்தார்.


## 'பேபி 81' இன் பெற்றோர் அமெரிக்காவில் புகலிடம் கோருவர்

'பேபி 81' என்று உலகளாவிய ரீதியில் பெயர்பெற்ற அபிலாஷ் என்ற குழந்தையின் பெற்றோர் தமது குழந்தையின் பாதுகாப்பைக் காரணங்காட்டி அமெரிக்க அரசாங்கத்திடம் புகலிடக் கோரிக்கையை விடுக்கவுள்ளனரென்று அவர்களுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. சுனாமிப் பேரலையினால் அநாதரவாகி கல்முனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இக் குழந்தைக்கு ஒன்பது தாய்மார்கள் உரிமை கோரியதால் இக் குழந்தை உலகப் பிரசித்திபெற்றது. அமெரிக்கத் தொலைக்காட்சி நிறுவனமொன்றின் 'குட்மோர்னிங் அமெரிக்கா' என்ற நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அபிலாஷ் என்ற குழந்தையுடன் சென்ற பெற்றோர் அமெரிக்காவில் நிரந்தரமாகத் தங்குவதற்கு உதவிகள் கோரவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## மானிப்பாயில் சுனாமி

மானிப்பாய் மருதடியில் சுனாமி என்ற பெயரில் பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்ட புதிய இன பொன்னாங்காணிக் கீரை வகை பெரு வெற்றியளித்துள்ளது.

## வடக்கு, கிழக்கு இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி



வாழ்க்கைத் தொழிற்பயிற்சித் திட்டங்கள் மூலம் பயிற்சியைப் பெறுகின்ற இளைஞர்களுக்கு இது ஒரு தொழில் வாய்ப்பாகவும் எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு வழியாகவு அமையும், இப் பயிற்சி நெறியை அக்கறையுடன் பயின்று தாங்கள் சார்ந்த சமூகத்தின் நலன்களுக்காகவும், பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் அதனை உபயோகப்படுத்த வேண்டு என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி வழங்குவது தொடர்பான கலந்துரையாடலொன்று கடந்த 27ஆம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள் அமைச்சுக் காரியாலயத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். இயந்திர தச்சுவேலை, பாரஊர்தி இயக்குநர் ஆகிய துறை சார்ந்த பயிற்சி நெறிகள் சம்பந்தமா வைபவத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

ஒரு வருடத்தைக் கொண்ட இயந்திர தச்சு வேலைப் பயிற்சி கொலன்னாவையிலுள்ள அரச தொழிற்சாலையில் மேற்கொள்ளப்படுகின்றது. பாரஊர்தி இயக்குநர்களுக்கான 8 மாத பயிற்சியில் ஒரு வாரம் கொழும்பில் ஆரம்ப பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் ஏனைய பயிற்சிகள் அநுராதபுரம் கற்குளம் பகுதியில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

மேற்படி பயிற்சிகளில் கலந்துகொள்ளும் பயிற்சியாளர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகள் அனைத்தையும் கௌரவ அமைச்சரின ஆலோசனையின் பேரில் அமைச்சி மூலம் வழங்கப்படுவதுடன் மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ஒரு நபருக்கு 3,500 ரூபா வீதமும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத் தக்கது.

அமைச்சர் நாடாவை வெட்டிப் பயிற்சி நெறியை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதையும் கலந்துரையாடலில் கலந்துகொண்ட பயிற்சியாளர்கள் மற்றும் கூட்டத்தில் பங்குபற்றி அதிகாரிகளையும் படங்களில் காணலாம்.

## சுனாமியால் பாதிக்கப்படாதவர்களும் வீடுகள் பெற 100 மீற்றர் ஓட்டம்

கடல் எல்லையிலிருந்து நூறு மீற்றர்களுக்கு அப்பால் வீடுகளோ வேறு கட்டட நிர்மாணங்களோ அமைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் அறிவித்தது தான் தாமதம், கடலோரங்களில் புற்றீசல்கள் போல் பல புதிய குடியிருப்புகள் தோன்ற ஆரம்பித்துள்ளன. மாத்தளை, காலி போன்ற தென்பகுதிகளில் மட்டுமல்ல மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய பகுதிகளிலும் திடீர் திடீரெனப் பல வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஏற்கெனவே கடலலைகளால் பாதிக்கப்பட்ட தமது வீடுகளைத் திருத்தியமைத்துள்ளதாக கிராம சேவகர்களால் வழங்கப்பட்டுள்ள அத்தாட்சிப் பத்திரங்களையும் இப் புதிய குடிசைவாசிகள் பெற்றுள்ளனர். இவர்களில் பெருந்தொகையானோர் சுனாமியால் பாதிக்கப்படாதவர்கள் என்பது மட்டுமல்ல, கடலோரப் பகுதிகளில் முன்னர் குடியிருக்காதவர்களுமாவர். அரசியல்வாதிகளினதும் அரச அதிகாரிகளினதும் ஆசீர்வாதத்துடனும் அனுசரணையுடனும் பாதிக்கப்படாதவர்களுக்கான பணிகள் மும்முரமாக நடைபெறுகின்றன. வெளிநாட்டு உதவிகளுடன் நூறு மீற்றர்களுக்கு அப்பால் அரசாங்கம் அமைத்துக் கொடுக்கவுள்ள வீடமைப்புத் திட்டங்களில் புதிய வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே சுனாமிப் போர்வையில் குடிசைகள் முளைவிடுகின்றன.

## சுவிஸில் ஓர் உதவியமைப்பு உதயம்

இலங்கையில் யுத்தத்தாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவென 'உதயம்' எனும் மனிதாபிமான அமைப்பொன்று கடந்த 16ஆம் திகதி சுவிற்ஸர்லாந்திலுள்ள சூரிச் நகரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அன்று நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ஐம்பதுக்கு மேற்பட்டோர் பங்குபற்றியதோடு நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. தலைவராக தே.சுதர்சனும் செயலாளராக அழகு குணசீலனும் பொருளாளராக க.துரைநாயகமும் தெரிவு செய்யப்பட்டனர்.

உதயத்தின் மனிதாபிமான உதவியைப் பெற விரும்பும் இலங்கை அமைப்புகளும் தனிநபர்களும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :
Uthayam, Postfach : 4808, 6002 Lucerne, Switzerland. Fax : 0041 41 311 02 15
E-Mail : Uthayam@bluemail.ch

## இனப் பிரச்சினைக்கு நீடித்த தீர்வு இந்தியா தலையிட்டாலே ஏற்படும்

-இந்தியப் பத்திரிகைக்கு கருணா பேட்

1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும். அப்போது இலங்கை - இந்திய அரசாங்கங்கள் இடைக்கால நிர்வாகமொன்றினைப் புலிகளுக்கு வழங்க முன்வந்தன. முதலில் அதனை ஏற்றுக்கொண்ட புலிகள் பின்னர் சிறிய காரணங்களுக்காக அதனை நிராகரித்தனரென்று கருணா அம்மான் இந்தியாவிலிருந்து வெளிவரும் "ஹிஸ்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகைக்குக் கடந்த வாரம் வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். "எமது பிரச்சினைக்கு நீடித்த தீர்வு காண வேண்டுமானால் இந்தியா முக்கிய பாத்திரமொன்றினை வகிக்க வேண்டுமென்ற கருத்தினை நான் எப்போதுமே கொண்டுள்ளேன். எமது பிரச்சினைக்குத் தீர்வு காணப் பெருமுயற்சியெடுத்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொன்றமை பிரபாகரன் செய்த மிக மோசமான தவறாகும். தமிழர் பிரச்சினைக்குப் பிரபாகரனால் என்றுமே தீர்வு காண முடியாது. இந்தியா இலங்கைப் பிரச்சினையில் ஈடுபட முனைந்தால் சகல நாடுகளுமே அதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கும். தற்போது பிரதேச சுயாட்சியை நான் ஆதரிக்கிறேன். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியாவுக்கு நோர்வே விட்டுக்கொடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது" என்றும் கருணா கூறினார்.

## ஸ்காபரோவில் இசைத்தட்டுக்கள் வெளியீடு

இலங்கை வானொலி புகழ் மதுரகவியின் இரு இசைத்தட்டுகள் இம்மாதம் ஐந்தாம் திகதி கனடா ஒன்ராறியோ, ரொறன்ரோவிலுள்ள ஸ்காபறோ சிவிக்ஸ் சென்ரரில் வெளியிடப்படவுள்ளன. நகைச்சுவை நாடகத் தொகுப்பான 'டவுட்டுக் கணேசன்', இசை மெருகூட்டப்பட்ட கவிதைத் தொகுப்பான 'கவிதாப் பிரவாகம்' ஆகிய இரு இசைத் தட்டுகளே வெளியிடப்படவுள்ளன. 'டவுட்டு கணேசன்' 1993 முதல் 1998 வரை நான்கு வருடங்களாகப் பிரதி சனிக்கிழமை தோறும் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டு வந்தமை குறிப்பிடத் தக்கது.

## வேலிக்கு ஓணான் சாட்சி

"எமது தலைவர் பிரபாகரன் சமாதானத்தை ஏற்படுத்துவதில் மிகவும் உறுதியாகவுள்ளார். அரசாங்கமும் ஆயுதப் படையினரும் எத்தனையோ அச்சுறுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதிலும் அவர் சமாதானத்தை நிலைநாட்டுவதில் உறுதியாகவே உள்ளார்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூன்று ஆண்டு நிறைவையொட்டி ஆங்கிலத் தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார். ஆனால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அன்று விடுத்த அறிக்கையில், புலிகள் மூன்று ஆண்டுகளில் 2636 யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனரென்றும் படையினரும் பொலிஸாரும் 115 சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனரென்றும் தெரிவித்துள்ளது என்று கருத்துத் தெரிவித்த அரசியல் ஆய்வாளர் பெரியதம்பி மணிவண்ணன் வேலிக்கு ஓணான் சாட்சி என்று விளக்கினார்.

## முல்லையில் 191 பாலகர்கள் பலி

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற் பேரலைத் தாக்கத்தினால் ஆறு வயதுக்குட்பட்ட 191 முன்பள்ளிச் சிறுவர்களும் இரண்டு ஆசிரியர்களும் பலியாகியுள்ளனர். கடற் கொந்தளிப்பு ஏற்பட்டு இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் காணாமல் போன 89 முன்பள்ளிச் சிறுவர்கள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. பதினொரு முன்பள்ளிகள் முழுமையாகச் சேதமுற்றனவென்றும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

## மணல்காட்டில் 75 வீடுகள் நிர்மாணம்

வடமராட்சி கிழக்கிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மணற்காட்டில் எழுபத்தைந்து வீடுகள் தற்காலிகமாக அமைக்கப்பட்டு வருவதாக யாழ்.அரசாங்க அதிபர் தெரிவித்தார். வீடுகளை அமைப்பதற்கு இதுவரை 650 காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனவென்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்கட்டுமாணப் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருவதாகவும் குடியிருப்புகளை இழந்த மக்களுக்கு வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன வென்றும் தெரிவித்தார்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## இருப்பதைப் பாதுகாத்துக் கொண்டு கிடைப்பதைப் பெறுங்கள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

ஆளுந் தரப்புக்குள் அவ்வப்போது கிளம்பும் முறுகல்களால் அதன் ஸ்திரதன்மை ஆட்டம் கண்டுவிடுமோவென எண்ணத்தோன்றுகிறது. ஜே.வி.பி.யின் இழுப்பும், இ.தொ.கா.வின் இழுப்பும் இன்னொரு தேர்தலுக்குத்தான் கொண்டுபோய் விடப்போகிறது என்றளவில் இருந்தது. இ.தொ.கா.வினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சமரசப் பேச்சுக்கள் வெற்றியளித்திருப்பது ஓரளவு பதற்றத்தைத் தணித்துள்ளது. ஜே.வி.பி.யைப் பொறுத்தவரை அரசிலிருந்து விலகிச் செல்லும் சூழல் இப்போதைக்கு இல்லை. தொடர்ந்தும் அரசில் இருந்துகொண்டு அரசின் மூக்கணாங்கயிற்றைக் கையில் வைத்துக்கொள்வார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. இந்தத் தளம்பல் நிலையைப் பயன்படுத்திக்கொண்டதால் புலிகள் முதன்மை வகிக்கிறார்கள். தமிழீழம் கேட்டவர்கள் பின்னர் இடைக்கால நிர்வாக சபை கேட்டார்கள். பின்னர் பொதுக் கட்டமைப்பில் வந்து நின்றார்கள். இப்போது ஜனாதிபதி இடைக்கால நிர்வாக சபை தொடர்பாகவும் பொதுக் கட்டமைப்பு தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து நடத்தத் தேவையான ஆயத்தங்களைச் செய்கையில், இப்போது புலிகள் வேறு விதமாக, அரச இயந்திரத்திற்குள் ஊழல் நடப்பதாகவும் தேவையற்ற தாமதங்கள் இருப்பதாகவும், ஆகையால் பொதுக் கட்டமைப்பில் அரசுடன் இணைந்து பணியாற்ற முடியாதெனவும் தெரிவித்துள்ளனர். புலிகளின் இந்த அணுகுமுறைகள், அவர்கள் தீர்மானமாக எதையும் தீர்த்துக்கொள்ள முன்வரப் போவதில்லை என்பதையே மீண்டும் உணர்த்தி நிற்கின்றன.

சர்வதேச சமூகத்திடமிருந்து உதவிகளை நேரடியாகப் பெற்றுக்கொள்ளப் புலிகள் பல நடவடிக்கைகளை முடுக்கிவிட்டபோதும் இதுவரை அந்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. கூட்டமைப்புப் பாராளுமன்றப் பிரதிநிதிகளும் சர்வதேச பிரதிநிதிகளைச் சந்தித்து இதையே வலியுறுத்தி வருகின்றனர். ஆனாலும் எந்த வெளிநாட்டு அரசும் புலிகளிடம் நேரடியாகத் தமது உதவிகளை வழங்க விரும்பவில்லை. இதற்கு என்ன காரணம்?

புலிகளின் செயற்பாடுகள்தான். பயங்கரவாதிகளாக இனங்காணப்பட்ட புலிகள், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாகத் தங்களை சமாதான விரும்பிகளாகக் காட்டிக் கொண்டனர். யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து மூன்று வருடங்கள் முடிவடைந்துள்ளபோதும் திருப்தி தரக்கூடிய எந்தவொரு சமிக்ஞையையும் புலிகள் வெளிக்காட்டவில்லை. வெறுமனே ஒன்றுக்கு மேலாக இன்னொன்றாக நிபந்தனைகளை முன்னிலைப்படுத்துகின்றனரே தவிர, முன்னேற்றம் எதையும் கண்டுவிடவில்லை.

சூடானில், பாலஸ்தீனத்தில், இந்தோனேசியாவில் பிரிவினைவாத யுத்தத்தில் ஈடுபட்ட தரப்புகள் சமகாலத்தில் கண்டுவரும் சமரசப் போக்குப் போல் குறைந்தபட்ச சமரச நிலைப்பாட்டைத்தானும் புலிகளிடம் காண முடியவில்லை.

சிறுவர்களைப் படைகளில் சேர்த்தல், அரசியல் படுகொலைகள், மிரட்டல், எதிர்ப்புப் பிரசாரங்கள் என்பவற்றைக் கைவிட்டு, சர்வதேச சமூகம் எதிர்பார்க்கும் சுமுக சூழலை உருவாக்குவதில் புலிகள் தொடர்ந்து பின்னடைவையே கண்டு வருகின்றனர்.

சர்வதேச சமூகம் தம்முடன் நேரடியான தொடர்பைப் பேண வேண்டும்; உதவிகளைச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கும் புலிகள், தமது செயற்பாடுகளையும் சர்வதேச சமூகத்தின் விருப்பத்தை வெல்லத் தக்க வகையில் - அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மதிப்பளிக்கின்ற வகையில் - செயற்படுவது அவசியமாகும். இந்த யதார்த்தத்தைக் கருத்தில் கொண்டுதான் அரசுகள் கூட இராஜதந்திர ரீதியில் தமது அணுகுமுறைகளை வகுக்கின்றன. இதை விடுத்து நாங்கள் செய்வதைச் செய்வோம்; நீங்கள் எங்கள் கேவலமான முகத்தைக் கண்டுகொள்ளாமல் மனிதாபிமானத்தோடு நடந்துகொள்ள வேண்டுமெனக் கூக்குரலிடுவதில் என்ன நியாயம் இருக்க முடியும்? ஆகவே மற்றவருடைய தவறுகளைச் சுட்டிக்காட்டுவதை விடவும் நமது பக்கத் தவறுகளைச் சரிசெய்வது நன்மை தரும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# மூன்று வருடகால மௌன யுத்தம்

நரன்

கிட்டத்தட்ட மூன்று தசாப்த காலமாக இலங்கை வாழ் மக்களை, குறிப்பாகத் தமிழ் மக்களைக் கதிகலங்க வைத்துக்கொண்டிருந்த யுத்தத்தை நிறுத்தி, சமாதான முன்முயற்சிகளை மேற்கொள்வதற்கான யுத்த நிறுத்தம் கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டபோது மக்கள் பெரும் நிம்மதியடைந்தனர். ஐக்கிய தேசியக் கட்சி அரசு, புலிகள் இயக்கத்துடன் செய்துகொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது. யுத்த நிறுத்த அமுலாக்கம் மூன்று வயதை எட்டியபோது படைத் தரப்பைச் சேர்ந்த 29ஆவது சிப்பாய் முகமாலை சூனியப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். யுத்த நிறுத்தம் அமுலாகி இரண்டு வருடங்கள் நிறைவு பெற்ற கடந்த ஆண்டிலும் இதே தினத்தில் இதே பகுதியில் சிப்பாயொருவர் சுட்டுக் கொல்லப்பட்டமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இந்த மூன்று வருட காலப் பகுதியில் அரசாங்கப் படைகளும் புலிகளின் போராளிகளும் நேரடியான யுத்தத்தில் ஈடுபடவில்லையென்பதும் யுத்த காலத்தில் அப்பாவி மக்கள் பட்ட அவஸ்தைகளும் அழிவுகளும் பெருமளவு இல்லையென்பதும் நிம்மதியைத் தருகின்ற மறுக்க முடியாத உண்மைதான். ஆனால், இரு தரப்பும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம், சமாதானப் பேச்சுக்கும் இறுதியில் சமாதானத்துக்கும் வழிவகுக்குமென்ற மக்களின் நம்பிக்கை வெறும் கானல்நீராகிவிட்டதென்பது வேதனைக் குரியதுதான். இந்த மூன்று வருட காலத்தின் ஐந்தொகைக் கணக்கைப் பார்த்து வரவு - செலவைக் கணக்கீடு செய்வோமேயானால், யுத்தம் இல்லையென்றபோதிலும் யுத்தத்தின் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்ததையும் சத்தமில்லா யுத்தமொன்று நடந்துகொண்டிருந்ததையும் அறிந்துகொள்ள முடியும். யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் சராசரியாக வருடமொன்றுக்கு சுமார் மூவாயிரம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருப்பதால், இந்த மூன்று வருடங்களிலும் கிட்டத்தட்ட ஒன்பதாயிரம் அல்லது பத்தாயிரம் உயிர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பது சந்தோசத்துக்குரிய செய்தியே.

இக் காலப் பகுதியில் புலிகளுக்கெதிராக 5,459 யுத்த நிறுத்த மீறல் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இவற்றில் 2,636 சம்பவங்களே யுத்த நிறுத்த மீறல்களென்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணைகளின் பின்னர் அறிவித்திருக்கிறது. 182 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகப் படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவற்றில் 29 படைவீரர்களும் 153 சிவிலியன்களும் கொல்லப்பட்டுள்ளனரென்றும் படைத் தரப்பு வட்டாரங்கள் கூறுகின்றன. இவற்றுள் பலவற்றை யுத்த நிறுத்த மீறல்களென்று கண்காணிப்புக் குழு கூறவில்லையென்பதும் இங்கு குறிப்பிடக் கூடியதாகும். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் வன்னியிலிருந்து ஆயுதங்களோடு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கூடாக வந்து மட்டக்களப்பின் வெருகல் ஆற்றைத் தாண்டியும் வேறு சில கிழக்குப் பகுதிகளிலும் பிரபா அணிப் புலிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட பல நூற்றுக்கணக்கான கருணா அணியினரின் மரணங்கள் குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணை நடத்தவுமில்லை; இவை யுத்த நிறுத்த மீறலா, இல்லையாவென்று தீர்ப்பு வழங்கவுமில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இதே போன்று மாற்றுக் கருத்துடைய அரசியல் கட்சிகளின் ஊழியர்களும் வீதிகளிலும் வீடுகளிலும், நீதிமன்றங்கள், சிறைச்சாலைக்குள்ளும் வைத்துக்கூடப் பலியெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களைச் சுட்டுக் கொன்றவர்கள் பிரபா அணிப் புலிகளென்பது புலிகளின் அரிச்சுவடி தெரிந்த சிறுபிள்ளைக்கும் கூட விளங்கும். ஆனால், இக் கொலைகள் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கையை விரித்துத் தனது கையாலாகாத்தனத்தை வெளிப்படுத்தியமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் சுட்டுக் கொல்லப்பட்டபோது, யார் கொன்றார்கள் என்ற ஆதாரமெதுவும் இல்லாமலேயே ஐ.நா.விலிருந்து இங்குள்ள அடுப்படிகள் வரை ‘குய்யோ முறையோ’ என்று ஒப்பாரி வைத்துக் குழறினார்கள். சமாதானப் பேச்சு சரியப் போகிறதென்று சத்தமிட்டார்கள். புலிகளின் பொறுமைக்கும் எல்லையுண்டு என்று தமிழ்ச்செல்வன் எச்சரிக்கையும் விடுத்தார். ஆனால், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஓர் அரசியல் கமிஷார் போன்று செயற்பட்ட சின்னபாலா உட்பட நூற்றுக்கு மேற்பட்ட மாற்றுக் கருத்துக் கொண்ட அரசியல்வாதிகள் நாய்கள் போன்று சுட்டுக் கொல்லப்பட்டபோது அந்தப் பழியை தமிழ் ஊடகங்களும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் இனந்தெரியாதவர்கள் மீது போட்டுவிட்டுத் தப்பித்துக்கொண்டன. பச்சைப் புண்ணுக்குப் புனுகு தடவும் பாவ காரியத்தையே இந்தப் புனிதர்கள் செய்தார்கள். புலிகள் 1,122 பேரைக் கடத்தியுள்ளனரென்றும் 89 பணம் பறிப்புச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனரென்றும் 536 பேரைப் பலாத்காரமாகக் கடத்திச் சென்றுள்ளனரென்றும் 85 வாகனங்களைப் பலாத்காரமாக அபகரித்துச் சென்றுள்ளனரென்றும் யுத்த நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முரணாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் 225 தடவைகள் புலிக் கொடிகளை ஏற்றியுள்ளனரென்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. சிவிலியன்களைத் தொந்தரவு செய்தார்களென்று 898 புகார்களும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஆயுதங்களோடு நடமாடினார்களென்று 109 புகார்களும் ஆத்திரமூட்டினார்களென்ற வகையில் 122 சம்பவங்களும் புதிதாகப் பத்து முகாம்களை அமைத்தார்களென்றும் யுத்த நிறுத்தத்தை மீறி கடற்புலிகள் மூன்று ஒத்திகைகளை நடத்தினார்களென்றும் புலிகள் மீது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு குற்றஞ் சுமத்தியுள்ளது. இதேவேளை படையினர், பொலிஸார் தரப்பில் 115 யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெற்றுள்ளனவென்றும் கண்காணிப்புக் குழு குறிப்பிட்டுள்ளது. இந்தளவு யுத்த நிறுத்த மீறல்களுக்கு மத்தியிலும் யுத்தமில்லாத நிலைமை நீடிப்பது வரவேற்க வேண்டியதுதான். ஆனால், மக்கள் சீனத்தின் கப்பலொன்றினை இலங்கைக் கடல் எல்லையில் வைத்து மூழ்கடித்தவர்கள் புலிகளல்ல; மூன்றாந் தரப்பினரென்று - அதாவது, அவதானிக்கவும் கண்காணிக்கவும் மட்டுமே தனக்கு அதிகாரமுண்டென்று கூறுகின்ற இந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, அவசரப்பட்டுத் தீர்ப்பளித்தமை ஏனென்பது இன்னமும் மூடுமந்திரமே. இலங்கையில் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த மூன்றாம் தரப்பும் உண்டென்று கண்டுபிடித்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு உண்மையிலேயே நோபல் சமாதானப் பரிசு கொடுத்தாலும் தகும். ஏனென்றால் ஆயிரம் பொய்களைச் சொல்லியாவது ஒரு கலியாணத்தைக் கட்டு என்பது போல ஒரு பச்சைப் பொய்யைச் சொல்லி சிவத்த இரத்தம் சிந்தாமல் தடுத்த

**இந்த மூன்று வருட காலத்தின் ஐந்தொகைக் கணக்கைப் பார்த்து வரவு - செலவைக் கணக்கீடு செய்வோமேயானால், யுத்தம் இல்லையென்றபோதிலும் யுத்தத்தின் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்ததையும் சத்தமில்லா யுத்தமொன்று நடந்துகொண்டிருந்ததையும் அறிந்துகொள்ள முடியும். யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் சராசரியாக வருடமொன்றுக்கு சுமார் மூவாயிரம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருப்பதால், இந்த மூன்று வருடங்களிலும் கிட்டத்தட்ட ஒன்பதாயிரம் அல்லது பத்தாயிரம் உயிர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பது சந்தோசத்துக்குரிய செய்தியே.**

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைப் பாராட்டித்தானாக வேண்டும். இதே போன்று ஆயுதங்களைக் கடத்திவந்த புலிகளின் மர்மக் கப்பல் தப்பிச் செல்ல உதவியமை போன்ற சில சம்பவங்களும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மீது விழுந்திருக்கும் கரும் புள்ளிகளாகும்.

இத்தகைய யுத்த நிறுத்த மீறல்களுக்கு மத்தியிலும் யுத்தமுமில்லை; சமாதானமுமில்லையென்ற நிலை நீடித்தாலும் யுத்தமில்லாத நிலை வரவேற்கக்கூடியதே. அரசுடன் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்திவிட்டு 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பேச்சுவார்த்தை மேசையை விட்டு ஓடியவர்கள் புலிகள். வடக்கு, கிழக்கு மக்களின் உடனடி அவசர புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கென அரசும் புலிகளும் கூட்டாக ஏற்படுத்திய இரு உபகமிட்டிகளுக்கு அதிகாரம் போதாதென்று கூறிக்கொண்டு விலகியவர்கள், இரண்டு வருடங்கள் எட்டப்போகும் நிலையிலும் சமாதானப் பேச்சுக்களிலிருந்து விலகியே நிற்கிறார்கள். பின்னர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனையை முன்வைத்தவர்கள் அதைப் பற்றிப் பேசி, அதனை நிறுவிய பின்னரே இறுதித் தீர்வு பற்றிப் பேசலாமென்ற நிபந்தனைகளைப் பற்றிப் பிடித்து இன்னமும் தொங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதாவது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒரு தடவை கூறியது போல், எந்த அரசாலும் வழங்க முடியாத கோரிக்கைகளை முன்வைப்பதே புலிகளின் வழமையான உத்தியாகும். வடக்கு, கிழக்கில் கடற் பேரழிவு நிவாரணம் மற்றும் மீள்கட்டுமாணப் பணிகளைக் கையாளப் பொதுக் கட்டமைப்பொன்றினை ஏற்படுத்துவதிலும் அவர்கள் ‘சைலக்’ பாணியில் பெரும் பங்கைக் கோருகிறார்கள். அதாவது புலிகளின் கட்டுப்பாட்டியில்லாத பகுதிகளிலும் புனர்நிர்மாணப் பணிகளில் அவர்களுக்குப் பெரும் பங்கு வேண்டுமென்பதே அவர்களின் கோரிக்கை.

இலங்கையில் சுனாமியால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகள் தமிழ் மக்களும் தமிழ் பேசும் முஸ்லிம்களும் பரந்தும் செறிந்தும் வாழும் வடக்கு, கிழக்குப் பகுதிகள்தானென்பது மறுக்க முடியாத உண்மை. முழு நாட்டினதும் உடனடி நிவாரணத்துக்கு 1,600 கோடி ரூபா தேவையென்றும் இதில் 60 சதவீதம் வடக்கு, கிழக்குக்குச் செலவிடப்பட வேண்டுமென்றும் உதவி வழங்கும் நாடுகள் மதிப்பிட்டுள்ளன. கடந்த இரண்டு மாதங்களில் நிவாரணப் பணிகளுக்காக அறுபது நாடுகள் 890 கோடி ரூபாவை இலங்கைக்கு அள்ளிக் கொட்டியுள்ளனவென்று அரசாங்கப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அடுத்த மூன்று வருட காலத்துக்குள் 34,000 கோடி ரூபா வந்து சேருமென்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். ஆனால் வடக்கு, கிழக்கில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் புலிக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுமுள்ள அகதி முகாம்களில் வாழும் மக்களின் அவலங்கள் சோகக் கதையாகத் தொடர்கின்றன. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள உடுத்துறை அகதி முகாமிலுள்ள மக்கள் அரசாங்கத்தையும் புலிகளையும் திட்டித் தீர்க்கிறார்கள். அந்தளவுக்கு அவர்களின் அவலங்கள் துயரமானவை. “நாசமாப்போவான்கள்” என்று கிராமிய மணம் கமழத் திட்டினார் சின்னாச்சி என்ற 67 வயது மூதாட்டி. இந்த நிலையில் மீண்டும் அரசியல் சித்து விளையாட்டு ஆரம்பமாகியிருப்பது வேதனைக்குரியது.

பொதுக் கட்டமைப்பு தொடர்பாகவும் இடைக்காலத் தன்னாட்சி தொடர்பாகவும் பேசுவதற்குத் தயாரென்று ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஜனாதிபதி இப்படி அறிவித்ததுமே புலிகளின் சமாதான செயலகத் தலைவர் புலித்தேவன், சுருதியை மாற்றிப் பாடத் தொடங்கிவிட்டார். நேற்று வரை நிவாரணப் பணிகளுக்குப் பொதுக் கட்டமைப்பொன்று தேவையெனக் கூறிவந்த புலித்தேவன், அதற்காக அரசின் சமாதான செயலகத்தோடு பத்துக்கு மேற்பட்ட சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்திய புலித்தேவன் இப்போது தப்புத் தாளங்கள் போடுவதேன்? அரச நிறுவனங்கள் அனைத்திலுமே ஊழலும் மந்தமான செயற்பாடுகளும் நிறைந்திருப்பதால் அரசோடிணைந்து புலிகள் இயக்கம் செயற்படாது என்று திடீரென்று ஞானோதயம் பெற்றுள்ளார். புலித தேவனுக்குத் திடீரென்று இந்த ஞானோதயம் பிறந்தது ஏன்? எப்படி? வளையில் எலி இருக்கிறதென்பதற்காக வீட்டையே கொளுத்த முனைகிறார் புலித்தேவன். ஊழலும் மந்தச் செயற்பாடுகளும் அரச நிறுவனங் களிலோ தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களிலோ ஏன், புலிகள் அமைப்பிலோ கூட இல்லையென்று யாராலும் கூறமுடியாது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலன்களை முதன்மைப் படுத்தி, அரசோடிணைந்து ஊழல் பெருச்சாளிகளுக்கெதிரான போராட்டத்தை ஏன் புலிகள் முன்னெடுத்துச் செல்ல முடியாது? நேரத்துக்கு நேரம் காரணங்களை மாற்றி மாற்றிக் கூறி தமிழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நலன்கள் கிட்டாமல் செய்வதைப் புலிகள் கைவிட வேண்டுமென்பதே தமிழ் மக்களின் வேண்டுகோளாகும்.

# புதிய அரசியல் குழப்பங்கள்

## ஐ.தே.க. + பொ.ஐ.மு. + இ.தொ.கா.

தற்போது அதிகாரத்திலிருக்கும் அரசு தொடர்ந்து மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதற்குக் காரணம், வருடத்துக்கு ஒரு தேர்தலை எதிர்கொள்வதென்பது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் விருப்பத்துக்குரியதில்லை. அதுவும் மக்கள், சுனாமியின் பாதிப்புகளிலிருந்து விடுபடாது அவலத்துக்குள்ளாகியுள்ள நிலையில் அவர்களுக்கு உதவாமல், அவர்களை இயல்புவாழ்வுக்குத் திருப்பாமல், அரசியல் இலாபங்களுக்காக முரண்பட்டு, அரசியல் தளத்தைத் தகர்த்து மக்களிடம் வாக்குக் கேட்டுப் போகும் நிலையை உருவாக்கிக்கொள்வது பொருத்தமானதில்லை. அத்தோடு இன்னொரு தேர்தல் நடத்தப்பட்டால் நிச்சயமாக ஆட்சி மாற்றமொன்று நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாகவுள்ளன என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அப்படி ஒரு நிலை உருவாவதை ஜே.வி.பி. ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. ஆக, உடனடியாக ஒரு அரசியல் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், ஜனாதிபதியின் சில நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சிப்பதும் ஸ்திரமான சூழலை ஏற்படுத்தும் முயற்சியை பாதிக்கும்.

பல முரண்பாடுகள் பொ.ஐ.மு.வுக்கும், ஜே.வி.பி.க்கும் இருந்தாலும் இப்போது புலிகளுடன் இடைக்கால நிர்வாக சபை தொடர்பில் பேசுவது என்பதே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜே.வி.பி.யைப் பொறுத்தவரையில் புலிகளின் அராஜக செயற்பாட்டுக்கு வாய்ப்பாக அமையக்கூடியதான இடைக்கால நிர்வாக சபையை தனியே புலிகளிடம் ஒப்படைக்க முடியாதெனவும் அதை தாம் எதிர்ப்பதாகவும் தெரிவித்து வருகின்றனர். அது போல அதிக உறுப்பினர்களைக் கோரும் புலிகளின் பொதுக் கட்டமைப்பையும் எதிர்க்கின்றனர். ஆனால் அரசாங்கமோ இடைக்கால நிர்வாக சபை தொடர்பாகப் புலிகளுடன் பேசும் அதேவேளை, நிரந்தரத் தீர்வு பற்றியும் விவாதிக்கலாமெனத் தெரிவித்து வருகிறது. பொதுக் கட்டமைப்பைப் பொறுத்தவரை பதினொரு பேர் கொண்ட பொதுக் கட்டமைப்பில் புலிகள் ஆறு பிரதிநிதிகள் தமக்கும் ஏனைய ஐந்து பிரதிநிதிகளில் முஸ்லிம்களும் சிங்களத் தரப்பும் பகிர்ந்துகொள்ள முடியும் எனவும் நிபந்தனை விதித்து வருகின்றனர். இதற்கு அரசு இணங்க முடியாததாலேயே பொதுக் கட்டமைப்பு விவகாரம் இழுபட்டுக்கொண்டிருக்கிறது.


ஆக, அரசாங்கம் புலிகளின் இழுப்புக்கு இழுபட்டுப் போவதாகக் கூற முடியாது. ஜே.வி.பி.யின் நிலைப்பாடு நியாயமானதாக இருந்தாலும் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதைத் தடுப்பது சரியில்லை. இடைக்கால நிர்வாக சபையைப் பற்றிப் பேசாமல் அல்லது பேச முன்னரே அதை வழங்கக் கூடாது என்று கூறுவது வேடிக்கையானது. ஏனெனின், முதலில் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கு உயிர் கொடுக்க வேண்டும். பேச வேண்டும். பின்னர் பேச்சுக்களில் எட்டப்படும் இணக்கப் பாடுகளுக்கமைய எதை வழங்குவது? எதை வழங்க முடியாது? என்பதைப் பற்றித் தீர்மானிக்கலாம்.

வெறுமனே பேச முன்னரே எதிர்ப்பதால் ஜே.வி.பி.யை சமாதானத்தின் எதிரிகளாகப் புலிகள் சித்திரிப்பதோடு, தமது அடிப்படை நோக்கமான சமாதானப் பேச்சை இழுத்துக்கொண்டு செல்வது என்ற திட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்கின்றனர். புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண விரும்ப வில்லை. அது போல தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் எவருடைய நெருக்குவாரங்களும் இல்லாமல் வாழ்வதையும் விரும்பமாட்டார்கள்.

ஏதாவது ஒரு வகையில் மக்கள் பதற்றத்துடன் இருந்தால்தான், புலிகளை மக்களின் மீட்பர்களாக ஒரு மாயையைக் காட்டிக்கொள்ளலாம்.

இந்தப் பொய்மையைத் தகர்ப்பதற்குத் தற்போது இருக்கும் ஒரே வழி புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதுதான். பேச்சுவார்த்தையை ஆரம்பித்து அதன் முன்னேற்றத்திலிருந்துகொண்டு சாதகமான தீர்வுக்கு வர முடியும். ஐ.தே.கட்சி நாட்டை இருண்ட யுகத்துக்குள் தள்ளி விட்டிருக்கிறது. அதிலிருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்ற வேண்டும் என்று ஆட்சிபீடம் ஏறிய பொ.ஐ.மு.வும் ஜே.வி.பி.யும், தமக்குள் முரண்பட்டு மீண்டும் ஒரு அரசியல் நெருக்கடிக்குள்ளும் யுத்தப் பரபரப்புக்குள்ளும் நாட்டையும் மக்களையும் வழி நடத்துவார்களானால், இவர்களுக்கும் முன்னைய ஆட்சிக்கும் என்ன வித்தியாசம் என்பதை சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.


சந்திரிகா


விமல் வீரவன்ச


அறுமுகன் தொண்டமான்


உணர்ச்சி பிரவாகத்தில் சம்பந்தன், மாவை, ஜோசப்

> புலிகள் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண விரும்ப வில்லை. அது போல தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் எவருடைய நெருக்குவாரங்களும் இல்லாமல் வாழ்வதையும் விரும்பமாட்டார்கள்.

இவ்வாறு தவறுகளைத் தாமே உருவாக்கிக்கொண்டு மேடைகளில் வாய் கிழியக் கத்தித் திரிவதில் எவ்வித அர்த்தமுமில்லை. இன்று இவர்கள் இருக்கும் கதிரையில் நாளை இன்னொருவர் இருக்கக்கூடும். ஆகவே இருக்கின்ற காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மதித்து நடந்தாலே மக்கள் ஆதரவு கிடைக்கும்.

அரசின் பிரதான கட்சிகளுக்குள் இப்படியென்றால், அரசின் பெரும்பான்மையை நிரூபிக்க உதவிய இ.தொ.கா. தற்போது தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்து, அரசுக்கு தாம் வழங்கிவந்த ஆதரவை, தொடர்ந்து வழங்குவதா இல்லையா என்பதைப் பரிசீலிக்கும் விடயங்கள் ஏற்படுத்தியுள்ள புதிய பிரச்சினைகளும் முக்கியமானவை.

இ.தொ.கா.வினர் தமது செயற்பாடுகளுக்குத் தெரிவித்து வரும் காரணங்கள் நியாயமானதாக இல்லை. திறப்பு விழாச் சம்பவம்தான் காரணமென இ.தொ.கா. கூறுவதாக இருந்தால் இதை விடச் சிறுபிள்ளைத்தனம் வெறெதுவுமில்லை. ஆசிரியர் நியமனம், தலவாக்கலை கட்டடத் திறப்பு விழாவில் ஏற்பட்ட சர்ச்சை என்பன இந்தளவுக்கு இ.தொ.கா.வை ஆட்டம் காணச் செய்துள்ளதோ என்பது வியப்புக்குரியது. இ.தொ.கா.வின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்குவதில் ஏற்பட்ட சிக்கல்தான் இ.தொ.கா. அரசுடன் முரண்பட்டு நிற்பதற்குப் பிரதான காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவே அரசுக்குத் தேவையான பெரும்பான்மையை வழங்குகிறோம் என்று ஆதரவு வழங்கிய இ.தொ.கா. இப்போது அமைச்சுப் பொறுப்புகளில் ஏற்பட்ட முறுகல் நிலையில் அரசுக்கு வழங்கிய ஆதரவை வாபஸ் பெறுவதும் பொருத்தமான செயற்பாடாக இல்லை.

மறுபுறத்தில் இப்படியே தமது அமைச்சுப் பொறுப்புகளுக்காக மாறி மாறிக் கட்சி தாவும்

அலசுவது

**- மதியூகி -**

நடைமுறையைக் கொண்டிருப்பது இ.தொ.கா.வின் பாரம்பரியத்துக்கும், அதன் சிறப்புக்கும் பாரிய இழுக்காகும். இதைக் கவனத்தில் கொள்ளாமல், இப்படித்தான் நாங்கள் நடப்போம் என்று முடிவுகளை எடுத்தால், அது இவர்களுக்கு வாக்களித்த மக்களின் சுய கௌரவத்தையே கேள்விக்குட்படுத்தும். அது மட்டுமில்லாமல், எப்போது இ.தொ.கா. சறுக்கி விழும்? அவ்விடத்தில் அதன் மீது உழவு இயந்திரத்தை ஏற்றி சகதியாக்க வேண்டும் எனக் காத்திருக்கும் ம.ம.முன்னணிக்கும் நல்ல சந்தர்ப்பமாகவும் அமையும். இந்த நிலையில் இ.தொ.கா. தனது கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்ள, எதிராளிகளின் முகத்தில் சேறுபூசக்கூடிய புத்திசாலித்தனமான முடிவை எடுக்கும் என்றே நம்பப்படுகிறது.

ஜனாதிபதியும் தனது அரசின் பங்காளிகளின் உரிமை, அவர்களின் அபிலாஷைகளை மதித்து அரசின் ஸ்திரத் தன்மையைப் பாதுகாத்துக்கொள்வார் என்றே அரசியல் நோக்கர்கள் எதிர்பார்க்கின்றனர். சுய கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படுவதாக உணரும்போது எவரும் தமக்குச் சாதகமான முடிவுக்குப் போவதில் தப்பில்லை. ஆனால் மக்களின் பிரதிநிதிகள் என்பதால் மக்களின் நலனையும் கவனத்தில் கொண்டு ஆக்கபூர்வமான முடிவுகளை எடுக்க வேண்டியது ஜனாதிபதிக்கும் அரசின் பங்காளிக் கட்சிகளுக்கும் உள்ள தார்மீகக் கடமையாகும்.

---

## அதிரடி அய்யாத்துரை



**தலைவர்** எதைச் செய்தாலும் சரியெண்டு தலையை ஆட்டிக்கொண்டிருந்த கீழ் மட்ட உறுப்பினர்கள் இப்பவெல்லாம் கேள்வி கேட்கிற அளவில மாறிப் போயிட்டினமாம். அப்பிடி என்ன கேள்வி கேட்டவையள் எண்டு யோசிக்காதயுங்கோ. அது தம்பியின்ர மாமனார் ஏரம்பு காலமானவரெல்லோ! அவருக்கு அதி சிறந்த நாட்டுப் பற்றாளர் கௌரவத்தை தலைவர் வழங்கிப்போட்டாராம். அவர் இயக்கத்துக்கு அப்பிடி என்ன செய்தவர் எண்டு கீழ் மட்டப் பெடியளுக் குள்ளால புகைச்சலாம். தம்பிமாருக்குத் தெரியுமே தம்பி அவருக்குப் பட்டம் கொடுத்ததே தன்ர திருமதியைத் திருப்திப்படுத்தத்தானெண்டு. அதுவும் சும்மா நாட்டுப் பற்றாளர் எண்டால் மதியக்கா முகத்தைத் திருப்புவாவெண்டுதான் அதிசிறந்த எண்ட கவரைச் சேர்த்தவராம். இது தெரியாம தம்பிமார் குழம்புறது சரியில்லை. தட்டிஸ் பெமிலி புரொப்ளம். ஓ...கே...

**மலையகத்தில** முன்னணி நடத்திறவரையும் மேல் மாகாணத்தில முன்னணி நடத்திறவரையும் கூப்பிட்டு பொட்டர் பேசினவராம். அவர் ஆக்களுக்கு பொட்டுவைக்கிறதில விண்ணன் எண்டது ஊருக்கே தெரியும். அப்படியானவரோடை இவை ரெண்டு பேரும் அப்பிடி என்ன குசுகுசுத்தவையளாம்? உங்க கொழும்பிலையும் மலை நாட்டிலையும் உளவாளிகளையும் கொலையாளிகளையும் பாதுகாக்கிறது சம்பந்தமாகவும், முக்கியமான இடங்களுக்குக் கூட்டிக்கொண்டு போறது சம்பந்தமாகவும் ஒரு அக்ரிமெண்டைப் போட்டிருப்பினம் எண்டு அவைக்கு வலது கைகளாக இருக்கிறவையள் நடுக்கத்தில திரியினமாம். பொலிற்றிக்ஸை விட்டுப்போட்டு உந்த 'ஆள் கொல்லி வேலை' செய்துகொண்டு திரிஞ்சால் தங்கட பொலிற்றிக்ஸ"ம் அடிபட்டுப் போகும் எண்டு யோசிச்சு யோசிச்சு தூக்கமில்லாம இருக்கினமாம். பொட்டற்ர வாலைப் பிடிச்சிட்டினம். இப்ப விடவும் முடியாம தொடர்ந்து பிடிக்கவும் ஏலாம நிக்கினம். வெயிட்டன் சீ.....

**நெல்** கொள்வனவு செய்யிறதுக்கு அதிகாரத் தரப்பு பொருத்தமான விலையை அறிவிச்சு அந்தக் கணக்கிலேயே வாங்கி வருகுது. கஷ்டப்படுகிற விவசாயி லாபமடைஞ்சால் யாருக்குக் கவலை? சந்தோசந்தானே. இங்க என்னடாவெண்டால் அதிகாரத் தரப்பு நிர்ணயிச்ச விலைக்கு விவசாயிகள் நெல்லை விக்கினமெண்டதால ரெண்டெழுத்தாருக்குத்தான் கஷ்டமாம். அவையின்ர வருவாய் துறையினர் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய கொமினிசனில மண் விழுந்திட்டுது எண்டு புலம்பினமாம். பாத்தியளோ. ஆற்ர உழைப்பில யாருக்கு லாபமில்லையெண்டு யார் அழுகினம் எண்டு? சனத்தின்ர உழைப்பைச் சுரண்டி வயிறு வளக்கிறதெண்டது உவைக்குப் பழகிப் போச்சு. இப்ப திட்டித் திரியினமாம். காகந் திட்டி மாடு சாகப்போறதில்லை எண்ட கணக்கா, நெல் உற்பத்தியாளர்கள் குறித்த விலைக்கு வில்லுங்கோ. அது உங்கட உரிமை. புரிஞ்சுதோ....

**எங்கட** சகோதர மொழி ஊடகங்களில நடத்துற நிகழ்ச்சிகள் எண்டால் ரவியானராயருக்கு இனிப்புச் சாப்பிடுகிற மாதிரியெண்டு தெரிஞ்சிருப்பியள். அதுக்குப் போறதெண்டால் ஆள் குளிச்சு வாசனை பூசி, கையில தங்கச் சங்கிலியும் போட்டு, கலாதியா, மாப்பிள்ளை போல வருவார். அதிருக்கட்டும்.... போன கிழமை 'கினிகெதர' எண்ட நிகழ்ச்சியில கலந்துகொண்டவர், பேச்சு சூடு பிடிக்கவும் கதையோட கதையா, சிவப்புச் சட்டைக்காரர்களை இனவாதிகள் இல்லையெண்டு உண்மையைச் சொல்லிப் போட்டார். விவாதம் முடிஞ்சு வரேக்க அந்த புரோகிராமைப் பாத்துக்கொண்டிருந்த அவற்ர நெருங்கின நண்பர் ஒருவர் கோல் பண்ணி "என்னப்பா சிவப்புச் சட்டைக்காரரை இனவாதிகளில்லை எண்டு சொல்லிப் போட்டீர். இப்ப வன்னிக்காரர் கேட்டா என்ன சொல்லுவீர்" எண்டாராம், அப்பதான் ரவியானராயர் நிதானத்துக்கு வந்து முழுசினவராம். பிறகு காரில ஏறிக்கொண்டு சொன்னாராம், "அவை உந்த நிகழ்ச்சியையும் பார்க்கமாட்டினம் யாரெண்டாலும் போட்டுக் குடுத்தால்தான் உண்டு" எண்டு தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டாராம். எப்படி லோ மைன்ட்.

**பழைய** லிஸ்ட்டுப்படி ஆக்களைத் தூக்கினமாம் ரெண்டெழுத்தார். அட அது சகஜந்தானே எண்டு நினைச்சுப் போடதேயுங்கோ. அவை உப்ப தூக்கிறது அவைக்குக் கொடி பிடிக்கிற ரெலோக்காரரைத் தானுங்கோ. போன வாரம் கரும்புலி ஜெகன் எண்டவரை தூக்கியிருக்கினம். பிறகு ஏ.கே.போட்டி செவன் ரவி எண்டவரையாம். இவர் செல்வத்தாற்ர சாப்பிடுற கை மாதிரி இருந்து போட்டு விலத்தினவராம். பிறகு சனம் தடுத்ததால விட்டிட்டினமாம். எண்டாலும் தூக்கிற லிஸ்ட்டில இவரும் செல்வக்குமார் எண்டவரும் இருக்கினமாம். உதில பகிடி என்னவெண்டால் உதுகளைப் பற்றிப் பேசப் போன வவுனியாப் பொறுப்பாளரிட்ட "உம்முடைய பெயரும் அடுத்த லிஸ்ட்டில இருக்கிறதால நீர் போகலாம்" எண்டினமாம். பெடியள் செல்வத்தாரிட்ட சொல்லுவம் எண்டு வலை வீசித் தேடினமாம். தான் நாட்டுக்கு வெளியால போயிட்டன் எண்டு சொல்லுங்கோ எண்டிட்டு ஆள் குளிரான ஊருக்குப் போய் ரூம் போட்டுத் தங்கியிருக்கிறாராம். எம்.பி.ப் பதவிக்கு நாக்கை தொங்கப் போட்டுக்கொண்டு போய் சரணடைஞ்சிட்டார். இப்ப அவரோட இருக்கிற பெடியளை ரெண்டெழுத்தார் தூக்கினம். மதி, ஜெயம் எண்டவையளையும் காணயில்லையாம். அவையளையும் தூக்கியிருப்பினம் எண்டு சந்தேகிக்கினம் பெடியள். பாவம் பெடியள். செல்வத்துக்குப் பின்னால போய் எமனின்ர வாயுக்க விழுந்திட்டினம். இனியெண்டாலும் மிஞ்சின பெடியள் விட்டுப் போட்டு உயிர் தப்பிற வழியைப் பாருங்கோ எண்டு பழைய ரெலோக்காரர் அட்வைஸ் கொடுக்கினமாம்.

**உயரத்தில** இருந்து ஒலிக்கிற வானொலியில 'விழாததுகள்' எண்டொரு நிகழ்ச்சி கேட்டன். அதை நடத்திறவையள், உண்மையில பல தரப்பு குரல்களும் உள்வாங்கப்பட வேணுமெண்ட ஒரு கொள்கையோட, பலரோடையும் கதைச்சு நிகழ்ச்சி செய்யினம். அது ஓ.கே...ஆனால் கடைசியாப் போன நிகழ்ச்சியில 'சிவப்பு சட்டைக்காரக் கட்சி இடைக்கால நிர்வாக சபையை ஏன் எதிர்க்குது' எண்ட கேள்வியை அந்த கட்சியின்ர தமிழ் எம்.பி.யிட்டக் கேட்டிச்சினம். சந்திரமானவர் விளக்கம் கொடுக்கேக்க, தாங்கள் அதை எதிர்க்கவில்லையெண்டும் வடக்குக் கிழக்கில ஒரு ஜனநாயகமான, அரசியல் பன்மைத்துவமான சூழல் உருவாக வேணும். அதில்லாத சபையையே தாங்கள் எதிர்க்கிறம் எண்டார். அதுக்கு கேள்விகேட்ட குருவானவரும் அடுத்தவரும், நீங்கள் சொல்லுறபடி பார்த்தால் வீணைக் கட்சிதான் உள்ளது. ஒரு சிலருக்காக ஏன் அதையும் ஆடு நனையுது எண்டு ஓநாய் அழுத கதையா நீங்கள் எதிர்க்கிறியள் எண்டு கேட்டார். அதுக்கு சந்திரமான்வர், ஒரு சில கட்சிகளில்லையுங்கோ, ஒரு தனிமனிதனுக்குக் கூட ஜனநாயக அரசியல் உரிமைகள் உண்டு; அது உறுதிப்படுத்த வேணும் எண்டு போட்டாரே ஒரு போடு. குருவானவருக்கு அசடு வழியுதெண்டதை அவர் அடுத்துப் பேசின விதம் அப்படியே காட்சிப் படுத்தியதுங்கோ. இப்ப தெரியுதோ, ஜனநாயக மெண்டதை எந்த வரைவிலக் கணத்தில வரையறை செய்துகொண்டு உவரெல்லாம் ஊடகத்தில பணியாற்றிராரெண்டு. பழைய நங்கூரக்காரர் எண்டதால புரிஞ்சுகொள்வாரெண்டு அவற்ர நண்பர் சொல்லிறார். புரிஞ்சுகொண்டால் சரிதான்.

# வெகெனரும் (1880 - 1930) புவியசைவுக் கொள்கையும்

அல்:.பிரட் வெகெனர் என்பவர் ஒரு ஜேர்மனிய விஞ்ஞானியாவார். கண்ட நகர்வு பற்றிய இவரது புரட்சிகரமான கொள்கை காரணமாக இவர் விஞ்ஞானிகளால் ஏளனஞ் செய்யப்பட்டார். எனினும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் விடாப்பிடியாக ஆராய்ச்சி செய்து, இப்போதுள்ள கண்டங்கள் உருவாவதற்கு நிலத்திணிவுகளின் நகர்வுதான் காரணமாக இருந்தது என்று தொடக்கத்தில் கண்டுபிடித்தார். ஆயினும் இவர் மரணமடைந்து பல தசாப்தங்கள் கழிந்த பின்னரே இவர் இறுதியாகக் கௌரவிக்கப்பட்டார்.

1930இல் அல்:.பிரட் வெகெனர் கிரீன்லாந்தின் பனிக்கட்டிக் கவிப்பிலிருந்த தனது வீட்டுத் தளத்திற்குத் திரும்பும் வழியில் உயிர் துறந்தார். இவருடைய மரணத்துக்கு மார்படைப்பு வெளிப்படையான காரணமாக இருந்தது. வெகெனரின் வழிகாட்டி கிரீன்லாந்து நாட்டைச் சேர்ந்தவனாவான். அவன் வெகெனரின் சடலத்தை ஓரிடத்திற் புதைத்து, பெறுமதி மிக்க வளிமண்டலவியல் தரவுகள் நிறைந்த அவரது நாட்குறிப்பேடுகளோடு பிரதான தளத்திற்குத் திரும்ப முயன்றபோது வழித் தடமில்லாத பனிப் பிரதேசத்தில் எங்கோ காணாமற் போனான். அவன் வசமிருந்த நாட்குறிப்பேடுகளும் என்றுமே கிடைக்காதவாறு அவனுடன் மறைந்தொழிந்தன. ஆனால் வெகெனரின் அதிக பெறுமதி மிக்க விஞ்ஞான பங்களிப்பான கண்ட நகர்வுக் கொள்கை 1962 வரை மட்டுமே காணாமற் போனதாக இருந்தது. அவ்வாண்டில் வெகெனரின் காலத்திலே பாரம்பரியக் கொள்கைக்கு முரண்பட்டதாகக் கருதப்பட்ட கண்ட நகர்வுக் கொள்கை விஞ்ஞானிகளின் ஒப்புதலைப் பெற்றது.

1912இல் பாரிய நிலத் திணிவுகள் இரண்டின் பாகங்கள் பிரிந்து சென்று தனிக் கண்டங்களை உருவாக்கியதன் விளைவாகவே கண்டங்கள் உருவாகின என்ற புரட்சிகரமான கொள்கையை வெகெனர் முதன்முதலில் முன்மொழிந்தார். இக் கொள்கையை மக்கள் நம்பாது எதிர்த்து அதை நிராகரித்தனர். 'வெகெனர் வெறும் வளிமண்டலவியலாளர் மட்டுமே - அதாவது வானிலை பற்றி அறிக்கைகளையும் எதிர்வு கூறல்களையும் தரும் வானிலை மனிதனே ஆவார், அவர் மண்ணியலாளர் அல்லர்' என்று அவரைக் கண்டித்தவர்கள் சொல்லிக் கொண்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை கண்டங்கள் உருவானமை பற்றிய அவரது கொள்கை நிரூபிக்கப்படாதது, நிரூபிக்க முடியாதது, தவறானது. எனினும் இன்று, நிரூபிக்க முடியாதது எனப்பட்ட வெகெனரின் தரையமைப்புக் கொள்கை விஞ்ஞானிகளின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. ஆனால் கண்ட நகர்வு பற்றி அவர் விளங்கிய காரணம் தவறானது என்று விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளார்கள்.

அல்:.பிரட் வெகெனர் 1880இல் ஜேர்மனியில் பிறந்தார். அங்கு அவர் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் எழுத்தாளரர்கவும் தமது வாழ்வைக் கழித்தார். புவிப் பௌதிக உருவாக்கம், வானிலைத் தன்மைகள் என்பன பற்றிய தரவுகளைத் திரட்டுவதற்காக ஆய்வுப் பயணங்களை மேற்கொண்ட கிரீன்லாந்தின் பனிக்கட்டிக் கவிப்பிலேயே வளிமண்டலவியல் பற்றி அவரின் ஆய்வின் பெரும் பகுதி நிகழ்ந்தது. அவர் பண்டைக் காலக் காலநிலைத் துறையில் தனிப்பட்ட ஈடுபாடு கொண்டவராக இருந்தார். கண்டங்கள் நகர்தல் பற்றிய அவரின் ஊகங்கள் 1912இல் தொடங்கின. அப்போது உலகப் படத்தை அவர் நோக்கியதும், தென் அமெரிக்கா, ஆபிரிக்கா ஆகிய இரண்டு கண்டங்களும் இணைக்கப்பட்டால், புதிர் விளையாட்டின் வெட்டுத் துண்டுகள் போல அவை ஒன்றுடனொன்று பொருந்தி விடும் என்பதைப் புரிந்துகொண்டார். கடந்த முப்பது கோடி ஆண்டு காலப்பகுதியில் பனிக் கட்டிக் கவிப்பு ஒன்று வட ஐரோப்பாவையும் வட அமெரிக்காவையும் மட்டுமன்றி, தென் அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகியவற்றையும் மூடியிருந்தது என்பதை அவர் தன் ஆராய்ச்சி மூலம் கண்டறிந்துகொண்டார். இது எப்படி நிகழ்ந்திருக்கக் கூடும்? இப்போது வேறு வேறாகப் பிரிந்து காணப்படும் கண்டங்கள் முன்னொரு காலத்தில் ஒன்றாக இணைந்திருந்தால் மட்டுமே இது நிகழ்ந்திருக்கும். மேலும் இந்த இரு கண்டங்களிலும் காணப்பட்ட பாறையமைப்புக்களும் தாவர இனங்களும் விலங்கினங்களும் பெருந்தொகையானவை ஒரே மாதிரியாக இருந்தமைக்கும் இந்த ஊகம் விளக்கமளிக்கக்கூடியதாக இருக்கும்.

அப்போது இந்தத் தற்செயல் நிகழ்ச்சிக்கு ஒரு விளக்கம் அளிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த இரு கண்டங்களுக்குமிடையே ஒரு காலத்தில் நிலப் பாலங்கள் இருந்தன. இந்த நிலப் பாலங்கள் வழியாக உயிரினங்கள் ஒரு கண்டத்திலிருந்து மற்றக் கண்டத்துக்கு இடம்பெயர்ந்து போவதும் வருவதுமாக இருந்தன. ஏதோ ஒரு காலத்தில் அந்த நிலப் பாலங்கள் சமுத்திரங்களில் மூழ்கி மறைந்தன என மண்ணியல் ஆராய்ச்சியாளர் ஊகித்தனர். ஆனால் வெட்டுத் துண்டுகளைப் புதிர்களிற் பொருத்துவதில் திறம் பெற்றுள்ள பெரும்பாலான சிறுவர்கள் இன்று அவதானிப்பதைப் போல வெகெனரும் அவதானித்ததால் வேறு வகை நிகழ்வு ஏதாவது சம்பவித்திருக்கலாம் என்று உணர்ந்துகொண்டார். அவர் கருதிய வேறு வகை நிகழ்வுதான் கண்ட நகர்வு என்பது.

வெகெனருக்கு முன் வாழ்ந்த பலரும் இந்த நகர்வு அல்லது அசைவு பற்றிய ஊகங்கள் பலவற்றை ஏற்கெனவே தெரிவித்திருந்தபோதிலும் அத்தகைய ஊகத்தினை ஒழுங்கமைக்கும் சீரிய ஆவணச் சான்றாதாரமுள்ள ஒரு கொள்கையாக முதன்முதலில் வகுத்தவர் வெகெனரே ஆவார். அவர், மனதிற் பதியத் தக்க உண்மைகள் பலவற்றை ஒன்றுதிரட்டினார். அவை பின்வருமாறு :- தென் அமெரிக்கா, ஆபிரிக்கா ஆகியவற்றின் அத்திலாந்திக் சமுத்திரக் கரையோரப் பகுதிகள் ஒன்றுடனொன்று பொருந்தக்கூடிய தன்மையைப் பெற்றிருந்தமை; புவியோட்டின் பாரிய பாகமொன்று இரு மட்டங்களில் இருக்கின்றமையால் இந்த அசைவு காரணம் எதுவுமின்றி நிகழவில்லை என்பதைக் குறிக்கின்றமையும் குறிப்பிடத் தக்கது.

(அடுத்த வாரம் தொடரும்.....)

ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் (சி.ஆர்.எம்) வெளியிட்டுள்ள "மாற்றுக் கருத்தின் மதிப்பு" என்னும் வெளியீட்டிலிருந்து இக் கட்டுரை எடுக்கப்பட்டது. இவ் வெளியீட்டுத் தொடர் கருத்துக்களைச் சுதந்திரமாகப் பரிமாறிக்கொள்வதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. கவர்ச்சிகரமான இச் சிறிய புத்தகங்கள், அரசியல் விஞ்ஞானிகள், தத்துவ ஞானிகள், வேறு சிந்தனையாளர்கள் முதலியோரின் ஆக்கங்கள் உட்பட வழக்குத் தீர்ப்புக்கள், விஞ்ஞான ரீதியான ஆய்வு அறிக்கைகள், இலக்கியம், நாடகம் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கொண்டுள்ளன. கலிலியோ, பேட்ரண்ட் றசல், ஓங் சான் சூ கீ, நோவம் சொம்ஸ்கி, வே ஜிங் ஷென், ஈ.எம்.வோஸ்ரர், கென் சரோ வைவா, ஜவஹர்லால் நேரு, றோசா லக்சம்போக் போன்றவர்களால் எழுதப்பட்ட அல்லது ஆகியோரைப் பற்றிய சிறிய ஆக்கங்கள் வாசகருக்குப் பெறுமதி வாய்ந்த தகவல்களைக் கொடுக்கின்றன. 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கொலரா பரம்பலைத் தடுத்து, ரஷ்யாவில் "குளிர்கால கோதுமை பற்றிய பரிசோதனை, 2ஆவது உலக மகா யுத்த காலத்தில் ஜப்பானைப் பூர்வீகமாகக் கொண்ட ஐக்கிய அமெரிக்கப் பிரஜைகள் ஒட்டுமொத்தமாக இடம் பெயர்வித்தது பற்றிய மாற்றுத் தீர்ப்பு, ஷேக்ஷ்பியரின் "கிங் லியர்" என்னும் நாடகத்தில் தீமைக்கு எதிராகப் பேசும் ஒரு ஏழ்மையான பணியாள் ஆகியன இப் புத்தகங்களிலிருக்கும் பிரமிப்பூட்டும் விடயங்களுள் சிலவாகும். "மாற்றுக் கருத்தின் மதிப்பு" என்னும் 1 தொடக்கம் 5 வரையான வெளியீடுகளை சி.ஆர்.எம். இயக்கத்திலிருந்து தமிழ், ஆங்கில, சிங்களம் ஆகிய மொழிகளில் பெற்றுக்கொள்ளலாம். சிறிய அளவில் இவ் வெளியீடுகள் நூல் நிலையங்களுக்கும் வாசிகசாலைகளுக்கும் இலவசமாக வழங்கப்படும்.



## பிரஷாந்த் :.போட்டோ
## OUTDOOR STILL PHOTOGRAPH

திருமணம் பிறந்தநாள் நடனம்

பாரிஸ், பிரான்ஸ்
தொலைபேசி : 01-44680653
மொபைல் : 06-64820239

புகைப்படவியலாளர்
A.S. சந்திரன்







## நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்
## 46 வருடம் நிரூபிக்கும் மலையாள மாந்திரீகம்

1. எனது 46 வருட அனுபவத்தைக் கொண்டு அனுதினமும் வரும் வாடிக்கையாளர்கள் என்னை நேரில் கலந்து ஆலோசனை பெற இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

2. வெளிநாட்டவர்களுக்கும் என்னிடம் தொலைபேசியில் கலந்து பேச வாய்ப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்து தொலைபேசிகளுக்கும் C.L.I. வசதியுள்ளது.

3. ஜாதக, ஜாதகிகள் எதிர்கால வாழ்வு, ஆய்வு கண்ணோட்டம் பற்றி நேரில் வியக்கத்தக்க முறையில் என்னால் அருள் ஞானத்தால் கூறமுடியும். நடந்தது, நடக்கப் போவது, நடக்க இருப்பது, திருமணம் எப்போது எத்தனையாம் திகதி, நினைப்பது எப்போது நடக்கும் என்பதற்கெல்லாம் நேரில் வந்தால் என் அருள் ஞான சித்தத்தால் தெட்டத் தெளிவான பதில் கிடைக்கும்.

4. உங்கள் தேவைகளுக்கு நேரில் மட்டும் எந்த நாட்களும் முன் அறிவித்தல் இன்றி வருகை தரலாம்.

5. ஆணித்தரமாக கைரேகை பார்த்து பலன் தரும் சேவையும் உண்டு

கடிதங்களுக்கு பதில் எழுத அவகாசம் கிடையாது. என்னிடம் மாந்திரீக பரிகாரத்தால் நன்மை பெற்ற வெளிநாட்டவர்கள். உள்நாட்டவர்கள். நற்சாட்சி கடிதங்களை அவர்களின் நலனுக்காக விளம்பரம் செய்வதில்லை.

உலக மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர் டாக்டர். தெய்வீக ஞான குரு P.K. சாமி ஐயாவின் பிரதான அனுசரணையுடன் ஞாயிறுதோறும் சக்தி தொலைகாட்சியில் இரவு 7.00 மணிக்கு வேலன் தொடரை தொடர்ந்து பாருங்கள்

எனது P.K. Saamy Associate (Pvt) Ltd.
ஒருங்கமைப்புடன் செயல்படும் நிறுவனத்தில் ஒரு அங்கமே எனது மலையாள மாந்திரீக உச்சாடன பீட பிரிவு.

பேராசிரியர். டாக்டர். P.K. சாமி (J.D.G.A.N) J.P.
ஸ்ரீ துர்கா தேவி மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி இலக்கங்கள் :
(CLI) Nos. 2342463, 2342464, 2344832, 4613124, 4613133. Fax : 2344831


## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |
| உள்ளூர் | ரூ. 850 | ரூ.450 | ரூ.250 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெற விரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை களை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.
ஈ-மெயில்: (E-mail):- murasu@sltnet.lk


## லண்டன், பாரிஸ்
## இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

**டாக்டர் ஆர். தியாகராஜன் DHMS, AMRSH (LON)**


01.03.2005 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார். மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை, பேறின்மை (Strillity), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையான பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

முன்கூட்டிய பதிவுக்கு - லண்டன் தொலைபேசி:
**02087678004 - 07984803488 - 07833341693**
**E-mail : homoeocare@rediffmail.com**

இந்தியா - 0091-9843051099 இலங்கை - 0094-777602513
மார்ச் மாத இலங்கை விஜயம் 21.03.2005 முதல் 26.03.2005 வரை


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 17 - 01 - 1938



விண்ணில் 12 - 03 - 2004

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை

ஆண்டு ஒன்று கடந்தாலும் உம் அன்புதான் குறைந்திடுமா? எமக்காக நீர் வாழ்ந்த காலங்கள் மறந்திடுமா? உம் பிள்ளைகள் வேதனை உமக்குத் தானே தெரியும். உம் ஆதரவுக் கரங்கள் எம் வேதனைகளை மென்மையாய் அகற்றின. உமது அன்பும், ஆதரவும், நம்பிக்கையும், வழிகாட்டலும், எமக்குள் ஒரு வலிமையைத் தந்தன. அதைக் கொண்டு அச்சமின்றி இவ்வுலகை எதிர்கொள்வோம். உம் பெயரை நாம் நால்வர் எட்டுத் திக்கும் நிலைநாட்டுவோம் அந்தக் கடவுள் தந்த நீர் கடவுளானதையிட்டு அகங்களில் கண்ணீர் சொரிகின்றோம். நீர் நட்ட மரங்கள் செழிக்க வானத்தில் இருந்து ஆசீர்வதியும் எம் தந்தையே!

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்

தகவல்:- எஸ். ஜெய்விக்ரமன் (மகன்)

## இன்னொருவர் பார்வையில்

"நிரந்தர சமாதானத்துக்கு ஐந்து வழிமுறைகள்" என்ற தலைப்பில் பெப்ரவரி நான்காம் திகதி 'டெயிலி மிரர்' பத்திரிகையில் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையின் முக்கிய பகுதிகள் இங்கே தரப்படுகின்றன. கட்டுரையாசிரியர் ரோஹிணி ஹென்ஸ்மன்.

# நிரந்தர சமாதானத்துக்கு 5 வழிமுறைகள்

வடக்கு, கிழக்கில் சுனாமி நிவாரண, புனர்வாழ்வு, புனரமைப்பு நிதி போதியளவுக்கு மக்களைச் சென்றடைவதைத் தடுப்பதாக அரசாங்கம் மீது புலிகளும், புலிகள் மீது அரசாங்கமும் குற்றச்சாட்டுகளை



முன்வைப்பதால் பிரச்சினைகள் எழுந்துள்ளன. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஒரு வழியாக வடக்கு, கிழக்கில் சுனாமி நிவாரண நிலையமொன்றினை நிறுவுமாறு கொழும்பிலுள்ள ஐ.நா. அபிவிருத்தி திட்ட அலுவலகத்தைக் கோரலாம். (ஏற்கெனவே தெற்கில் இவ்வாறு நிலையமொன்று நிறுவப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.) வடக்கு, கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அன்பளிப்புகளை, அரசாங்கத்தின் மீதோ அல்லது புலிகள் மீதோ அல்லது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மீதோ நம்பிக்கை இல்லாதவர்கள், இந்த நிலையத்துக்கு வழங்க முடியும். இந்தப் பேரழிவையடுத்து உடனடியாக மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் உள்ளூர் சமூகங்களின் பூரண ஈடுபாட்டுடனும் பல்வேறு இன மற்றும் சமய குழுக்களுக்கிடையிலிருந்த தொடர்புகளைப் போன்ற ஊக்குவிப்புகளுடனும் மேற்கொள்ளப்பட்டிருந்தால் சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தைக் கட்டியெழுப்ப இது பெரிதும் உதவியிருக்கும்.

இலங்கை அரசாங்கம், சர்வதேச கிறிமினல் நீதிமன்றம் தொடர்பான ரோம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அதனை அங்கீகரிக்க வேண்டும். யுத்தக் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், இன ஒழிப்பு மற்றும் ஆக்கிரமிப்பு ஆகிய நான்கு முக்கிய குற்றச் செயல்களைக் கையாளுவதற்காகவே சர்வதேச கிறிமினல் நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டது. இது 2002ஆம் ஆண்டில் செயற்படத் தொடங்கியது. இது ஐ.நா. அமைப்புகளைப் போன்றதல்ல. ஐ.நா. அமைப்புகளைப் பொறுத்தவரை அவற்றின் தீர்மானங்களை அங்கத்துவ நாடுகளே தாமாக முன்வந்து நிறைவேற்றுகின்றன. அத்துடன் அத்துமீறல்களுக்குத் தண்டனைகள் விதிக்கப்படுவதுமில்லை. இவ்வாறான குற்றச் செயல்களைப் புரிந்தவர்களுக்கு சர்வதேச கிறிமினல் நீதிமன்றம் விசாரணை நடத்தி தண்டனை வழங்க முடியும். (இங்கு மரணதண்டனை வழங்கப்படுவதில்லையென்பது குறிப்பிடத் தக்கது.) இந்தக் கிறிமினல் நீதிமன்றம் தனி நபர்கள் மீதே குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றது. நாடுகள் மீது குற்றம் சுமத்துவதில்லை. அதாவது ஆட்சி அதிகாரங்களில் உள்ள உயர் மட்டத்தினர் மீதே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. சிவில் யுத்தங்களிலும் சர்வதேச யுத்தங்களிலும் ஈடுபடுபவர்கள் மீதே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. சர்வதேச கிறிமினல் நீதிமன்றச் சட்டதிட்டங்களில் கைச்சாத்திட்டு அவற்றை ஏற்றுக்கொண்ட நாடுகளின் தலைவர்கள் மீதே யுத்தக் குற்றங்களைச் சுமத்த முடியும்.

இலங்கையில் 1983ஆம் ஆண்டில் இந்தச் சர்வதேச கிறிமினல் நீதிமன்றச் செயற்பாடுகள் அமுலில் இருந்திருக்குமேயானால் தமிழர் விரோத மனிதப் படுகொலைகளில் அன்றைய அரசாங்கம் வகித்த பாத்திரத்துக்காக அன்று ஆட்சியிலிருந்த அரசின் அங்கத்தவர்களைத் தண்டிப்பதற்கு இந்த நீதிமன்றத்தைப் பயன்படுத்தியிருக்க முடியும். இதைப் போன்றே வடக்கிலிருந்து முஸ்லிம்களை 1990ஆம் ஆண்டு வெளியேற்றியமைக்காகவும், கிழக்கில் முஸ்லிம்களைச் சித்திரவதை செய்தமைக்காகவும் மனிதாபிமானத்திற்கெதிரான குற்றச் செயல்களைப் புரிந்தவர்களென்ற ரீதியில் புலிகள் மீது வழக்குத் தொடர்ந்திருக்க முடியும்.

புலிகள் பதினைந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளை யுத்தத்துக்குப் பயன்படுத்துவது, வலுக்கட்டாயமாகக் கடத்திச் செல்வது, தமது படையணிகளில் சேர்த்துக் கொள்வது ஆகியவற்றை யுத்தக் குற்றங்களாக வர்ணிக்க முடியும். அதாவது சர்வதேச நீதிமன்றச் சட்டத்தின்படி புலிகள் மீது அதிருப்தி கொள்ளும் மக்களைப் புலிகள் கொலைசெய்வதும் மனிதாபிமானத்துக்கெதிரான குற்றச் செயலாகும். (சிறுவர் உரிமைகள் என்ற சர்வதேச தொழில் அமைப்பின் சட்ட திட்டங்களின்படி 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் சிறுவர்களென்று அழைக்கப்படுகிறார்கள்). வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் மீதான புலிகளின் கட்டுப்பாட்டை மேலும் இறுக்கமாக்கும் வகையில் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்ற அல்லது புலிகளின் செயற்பாடுகளை வலியுறுத்துகின்ற உள்நாட்டு, வெளிநாட்டு தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் யுத்தக் குற்றவாளிகளென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது யுத்தக் குற்றங்களுக்கு உதவியமை அல்லது அவ்வாறான முயற்சிகளுக்கு உதவியமை போன்ற குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட முடியும்.

இந்தக் கண்ணோட்டத்தில் நோர்வே அரசாங்கம் மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியவற்றின்

**இலங்கையில் 1983ஆம் ஆண்டில் சர்வதேச கிறிமினல் நீதிமன்றச் செயற்பாடுகள் அமுலில் இருந்திருக்குமேயானால் தமிழர் விரோத மனிதப் படுகொலைகளில் அன்றைய அரசாங்கம் வகித்த பாத்திரத்துக்காக அன்று ஆட்சியிலிருந்த அரசின் அங்கத்தவர்களைத் தண்டிப்பதற்கு இந்த நீதிமன்றத்தைப் பயன்படுத்தியிருக்க முடியும். இதைப் போன்றே வடக்கிலிருந்து முஸ்லிம்களை 1990ஆம் ஆண்டு வெளியேற்றியமைக்காகவும், கிழக்கில் முஸ்லிம்களைச் சித்திரவதை செய்தமைக்காகவும் மனிதாபிமானத்திற்கெதிரான குற்றச் செயல்களைப் புரிந்தவர்களென்ற ரீதியில் புலிகள் மீது வழக்குத் தொடர்ந்திருக்க முடியும்.**

பிரதிநிதிகளின் செயற்பாடுகள் குறித்து ஆராயப்பட வேண்டும். நோர்வே மீதும் சர்வதேச கிறிமினல் நீதிமன்ற சட்டதிட்டங்களில் ஏற்கெனவே கைச்சாத்திட்டவர்கள் மீதும் யுத்தக் குற்றங்களுக்கு உதவினார்களென்று குற்றம் சுமத்தி அவை நிரூபிக்கப்பட்டால் தண்டிக்க முடியும். பொஸ்னியப் பிணக்கு உச்சக் கட்டத்தில் இருந்தபோது சர்வதேச கிறிமினல் நீதிமன்றம் செயற்படவில்லை. ஆனால், 'ஸ்ரேபெனிக்க' என்ற இடத்தில் உள்ள பொஸ்னிய முஸ்லிம்களை செர்பியப் படைகள் இனப் படுகொலை செய்த போது, டச்சு சமாதானப் படையினர் தடுப்பதற்கு ஒன்றும் செய்யாமல் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தார்களென்ற விபரம் அம்பலத்துக்கு வந்தபோது, டச்சு அரசாங்கமொன்று இராஜினாமாச் செய்ய வேண்டியிருந்தது. சமாதானப் படையினரின் செயற்பாடு என்பது மனித உரிமை அத்துமீறலுக்குத் துணைபோவதல்ல என்பதை இந்த உதாரணம் எடுத்துக் காட்டுகிறது. இரண்டு ஆயுத சக்திகளுக்கிடையில் மோதல் இல்லாத நிலைமையையே சமாதானம் என இவர்கள் வர்ணிக்கிறார்கள். நிராயுதபாணிகளான மக்களை ஆயுதக் குழுவொன்று சித்திரவதை செய்வதும், கொலைசெய்வதும் இவர்களைப் பொறுத்தவரை பிரச்சினைக்குரியது அல்லவெனக் கருதப்படுகிறது. புலிகள் மீது அதிருப்தி கொண்ட தமிழ் மக்களை புலிகள் கொல்வதும் பிள்ளைகளைக் கடத்திச் செல்வதும் குறித்து நோர்வே மற்றும் வெளிநாட்டவர்கள் கொண்டிருக்கும் மனோபாவத்தையே இது எடுத்துக் காட்டுகிறது. சர்வதேச நீதிமன்றச் சட்டதிட்டங்களை ஏற்று ஒரு தரப்பாகக் கைச்சாத்திட்டால் புலிகளின் யுத்தக் குற்றங்களுக்கு உதவியாகவும் அனுசரணையாகவும் செயற்படுவதென்பது, இலங்கையர்களையும் வெளிநாட்டு நிறுவனங்களையும் பொறுத்தவரை மிகவும் கஷ்டமானதொன்றாக அமைந்துவிடும். ஏனெனில், இவ்வாறான குற்றங்களுக்கு உதவுபவர்கள் மீது வழக்குத் தொடர முடியும். இதேவேளை, எதிர்காலத்தில் இலங்கை அரசாங்கமும் தமிழர்களுக்கு எதிரான இன ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடாமல் தடுப்பதற்கு உத்தரவாதமாகவும் விளங்க முடியும்.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் இடைக்காலப் பொறிமுறையானது வடக்கு, கிழக்கு மக்களின் மனித உரிமையை பாதுகாப்பதற்குத் தேவையான வலுவான உத்தரவாதத்தை வழங்க வேண்டுமென்று அரசாங்கமும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் வலியுறுத்த வேண்டும். அதாவது, மனித உரிமைப் பாதுகாப்பு அமைப்புப் போன்ற ஸ்தாபனங்களால் ஆதாரபூர்வமாக முன்வைக்கப்படும் அத்துமீறல்களுக்கு நிவாரணம் பெற்றுத் தரவும் வழிவகை செய்யப்பட வேண்டும். இப் பேச்சுவார்த்தைகள் பூரணமான வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.


இப் பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்படும் யோசனைகளை மும்மொழிகளிலும் வெளியிட்டு, மக்களுக்கு விநியோகிக்க வேண்டும். அப்போதுதான், பேச்சுவார்த்தைகள் முறிவடையும் பட்சத்தில் என்ன நடந்ததென்பதை அறிந்துகொள்ள முடியும்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் நோக்கத்தை எப்போதுமே மனதில் கொண்டிருப்பது மிகவும் முக்கியமானது. ஆயுதம் தாங்கிய பயங்கரவாதிகள், பெருந் தொகையான மக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்தால் (வடக்கு, கிழக்கில் உண்மையில் நடைபெற்றது இதுதான்) அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்துவது புத்திசாலித்தனமானது. இங்கே பேச்சுவார்த்தையின் நோக்கம் பணயக் கைதிகளை விடுவிப்பதாகும். இருக்கக்கூடிய பணயக் கைதிகளைப் பயன்படுத்தி பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டை மேலும் பலப்படுத்திக்கொள்வதோ அல்லது மேலும் பணயக் கைதிகளைப் பயங்கரவாதிகளுக்கு வழங்குவதோ அல்ல. தமது செயற்பாடுகளைக் கைவிட சில பயங்கரவாதிகள் விரும்பினால் (கருணா அணியினர் செய்தது போல்) கடும்போக்காளர்கள் ஏனையோரை அழித்தொழிப்பதற்கு உதவுவதாகவும் பேச்சுவார்த்தை அமையக் கூடாது. கடந்த இருப்பத்து ஐந்து வருடங்களுக்கு மேலாக இலங்கையில் வன்செயல் நிலவுவதற்கு, உதவி வழங்கும் நாடுகளின் நவீன தாராளமயப்போக்கு உதவியதைப் போன்ற அழுத்தங்களைக் கொடுப்பதும் பேச்சுவார்த்தையின் நோக்கமல்ல.

பெரும்பாலான மத்தியதர வர்க்க இலங்கையர்கள் ஈவிரக்கமற்றவர்களோ அல்லது கொடுமையானவர்களோ அல்லர். அவர்கள் ஒன்றில் தமது வசதி, வாய்ப்புகள் கூடிய வாழ்க்கை முறையிலிருந்து நேரம் ஒதுக்கி செயற்படுவதற்கு விரும்பாததன் காரணம், அவர்கள் மிகவும் சுயநல நோக்கு, கொண்டவர்களென்பதுதான்; அல்லது வடக்கு - கிழக்கைப் பீடித்திருக்கும் பிசாசை எதிர்கொள்வதற்குப் பயந்த கோழைகளாவார்கள். எனவேதான், மக்களின் துன்பங்களை அவர்கள் பார்க்க விரும்பாமல் கண்களை மூடிக்கொள்கிறார்கள். அபயக் குரல்களைக் கேட்க விரும்பாமல் காதுகளைப் பொத்திக் கொள்கின்றார்கள். ஆனால், வேண்டுமென்றே இவர்கள் மௌனமாக இருப்பதன் மூலம் தமது பொறுப்புகளைத் தட்டிக்கழித்துவிட முடியாது. இக் கொடுமைகளுக்கெதிராக பேச வேண்டிய கடப்பாட்டிலிருந்து இவர்களால் தவறிவிட முடியாது.

புலிகள் தமது பிடியிலுள்ள சகல சிறுவர்களையும் உடனடியாக விடுவிக்காவிட்டால், எதிர்காலத்தில் பிள்ளைகளை வலுக்கட்டாயமாகப் பிடித்துச் செல்வதைக் கைவிடத் தவறினால் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 20.11.2001.இன் 1379 ஆவது தீர்மானம், 22.04.2004இன் 1539 ஆவது தீர்மானம் ஆகியவற்றுக்கு இணங்க ஐ.நா.இச் செய்கைகளுக்காகப் புலிகளைக் கண்டிக்க வேண்டும். அத்துடன் புலிகள் இப்போது தமது படையணிகளிலுள்ள சிறுவர்களை விடுவிப்பதோடு, பிள்ளைகளைப் பிடித்துச் செல்வதைக் கைவிடும் வரை அதற்குக் கிடைக்கக் கூடிய சகல நிதி மற்றும் இராணுவ வளங்கள் கிட்டாமல் தடைசெய்யப்பட வேண்டும்.

இலங்கையிலுள்ள சகல சமூகங்களையும் சேர்ந்த பெரும்பாலான மக்களின் ஆதரவுடன் நிரந்தரத் தீர்வொன்றினைக் காண்பதே எதிர்காலத்தில் யுத்தத்தை நிராகரிப்பதற்கு இருக்கக்கூடிய ஒரேயொரு வழியாகும். அத்துடன் நீதிக்கும் ஜனநாயகத்துக்கும் ஆதரவு வழங்கும் சர்வதேச சமூகப் பிரிவினரால் இந்த நிரந்தரத் தீர்வு, நியாயமானதும் ஜனநாயகபூர்வமானதுமென ஏற்றுக்கொள்ளப்படவும் வேண்டும். 2004ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஜனாதிபதியினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட



சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைச் சபையின் மூலம் ஏற்கெனவே இந்த வழிமுறைக்கான முன்முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இதில் பங்குபற்றுமாறு சகல அரசியல் கட்சிகளுக்கும், சிவில் சமூகக் குழுக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், இதற்கு மிகுந்த முன்னுரிமை கொடுத்து விரைவான தொடர் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சகல யோசனைகளும் மும்மொழிகளிலும் பிரசுரித்து வெளியிடப்படுவதோடு அவை தொடர்பான கருத்துக்களும் அறியப்பட வேண்டும். ஈ.பி.டி.பி.யினால் முன்வைக்கப்பட்டுள்ள சில யோசனைகள் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவை. உதாரணமாக, இலங்கை மதச் சார்பற்ற நாடாக இருக்க வேண்டும். சிங்களத்திலும் தமிழிலும் சமமான தன்மை கொண்டதாக தேசிய கீதம் அமைய வேண்டும். இலங்கை யின் ஆயுதப் படைகளுக்கு நாட்டின் இன விகிதாசாரத்துக்கேற்ப ஆட்கள் திரட்டப்பட வேண்டும் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

ஏனைய யோசனைகளும் விரும்பத்தக்கவை. ஆனால், அவற்றை எவ்வாறு அமுல்படுத்துவதென்பது குறித்துக் கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும். இலங்கையின் பல்லினத் தன்மையைப் போதியளவு பிரதிபலிக்கக் கூடியதாக இலங்கையின் தேசியக் கொடி விளங்க வேண்டும். புதிய அரசியல் யாப்பினூடாக மாகாணங்களுக்குக் கணிசமானளவு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்ற யோசனைகளை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

சில யோசனைகள் குறித்து மேலும் ஆராயப்பட வேண்டும். உதாரணமாக, வடக்கும் கிழக்கும் வடக்கு - கிழக்கு மாகாணமாக நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டுமென்ற யோசனையைக் குறிப்பிடலாம்.

சிங்கள, தமிழ்த் தேசியவாதிகள் நீதியானதும் ஜனநாயகபூர்வமானதுமான ஒரு தீர்வை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக பெரும் ஆபத்து வந்துவிட்டது என்பது போல் கத்திக் குழறி யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட முயற்சிப்பார்களென்பதை நாம் எதிர்பார்க்க வேண்டும். நிரந்தர சமாதானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தேசிய மற்றும் சர்வதேச நலன்கள் சார்ந்த சக்திகளும் இருக்கவே செய்யும். இதற்கும் மேலாக வடக்கு, கிழக்கு மக்களால் தெரிவு செய்யப்படாத அரசாங்கத்துக்கும், புலிகளுக்குமிடையில் காணப்படும் தீர்வு இப் பகுதி மக்கள் மீது திணிக்கப்படுவது ஜனநாயக ரீதியற்றதென்பதால் நின்று நிலைக்கக் கூடியதல்ல. சமாதான ஒப்பந்தத்தினால் மிகவும் பாதிப்படையக்கூடிய அந்த மக்களின் உண்மையான கருத்துக்களை அறிவதற்கு நீதியான, நியாயமான கருத்துக் கணிப்பொன்றே சரியான வழிமுறையாகும். இவ்வாறு உறுதி செய்து கொள்ளப்பட்டதும் சர்வதேச ஆதரவும் சட்டபூர்வத் தன்மையும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். நாட்டின் ஏனைய பகுதிகள் அரசின் யோசனைகளுக்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என வாக்களிக்கும்போது, 1990ஆம் ஆண்டு புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் போன்ற அகதிகள் உட்பட வடக்கு, கிழக்கு வாழ் மக்கள், அரசாங்கமும், புலிகளும் சமர்ப்பித்துள்ள மாற்று யோசனைகளில் விரும்பியவற்றைத் தெரிந்தெடுப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

சமஷ்டி அரசியல் யாப்பின் வரையறைக்குள் தீர்வொன்றினை ஏற்றுக்கொள்ளுமாறு நோர்வே ஏற்பாட்டாளர்கள் புலிகளை வலியுறுத்தியிருப்பதால், இரு தரப்பும் விளைவுகளை ஏற்றுக்கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டும். இவ்வாறான சர்வஜன வாக்கெடுப்பொன்று எல்.ரி.ரி.ஈ.யை ஆதரிப்பவர்களாலும் எதிர்ப்பவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருக்க வேண்டும். பிரசார வேலைகளின்போது வன்செயல்களைத் தவிர்ப்பதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு ஒரு மாதம் முன்னதாகவிருந்தே ஐ.நா. படைகள் பணியிலீடுபடுத்தப்பட வேண்டும். புதிய பிராந்திய சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் வரை ஐ.நா. படைகள் இங்கிருக்க வேண்டும். இவ்வாறான சமாதான வழிமுறையை விரைவில் ஏற்படுத்துவதற்கான சாத்தியங்களை நாம் கண்டறிய வேண்டும். இலங்கையில் சமாதானம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் இங்கு விஜயம் செய்ய கொபி அனான் உண்மையிலேயே விரும்புவாரேயானால், யுத்தம் தொடர்ந்தும் நீடிக்காதவாறு ஐ.நா.கவனித்துக்கொள்ள வேண்டும்.

-நன்றி : 'டெயிலி மிரர்'.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

"இந்தப் பையன் நல்லா எழுதியிருக்கான். இவனுடைய வாழ்க்கை என்னால் கெட்டுப் போவதை நான் விரும்பவில்லை... இந்தப் பாட்டையே வைத்துக் கொள்ளுங்கள்.. பாப்புலராகும்..." என்று சொல்லிவிட்டு, திரு. மருதகாசி அண்ணன் தன் ப்ளைமவுத் காரில் ஏறிப் போய் விட்டார். அண்ணன் மருதகாசிக்கு மனதுக்குள் ஆலயம் எழுப்பி வழிபட்டேன். பிறகு என் பாடலையே பதிவு செய்து படப்பிடிப்புக்குப் போனார்கள்.

நியூடோன் ஸ்டுடியோவில் ஒரு Full Floor செட் போட்டு இந்தப் பாடலைப் படம் பிடிக்க ஏற்பாடாயிற்று.


ஒரு மலை - அதனின்றும் வழியும் அருவி. அருவி வந்து விழும் தடாகம் எனப் பெரிதாக அழகுற அமைக்கப்பட்ட அந்த செட்டில் எம்.ஜி.ஆரும் ராஜசுலோசனாவும் ஆடிப்பாடுவதாக நடன இயக்குநர் அமைத்த வண்ணம் ஒத்திகை பார்க்கப்பட்டது.

முதல் ஷாட் எம்.ஜி.ஆர், 'சிரிக்கின்றாள், இன்று சிரிக்கின்றாள்' எனும் பாடல் வரிக்கு வாயசைத்தவாறே, கரையிலிருந்த தடாகத்தில் இறங்குகையில் கரை உடைந்து ஸ்டுடியோ Floor முழுவதும் வெள்ளக் காடாயிற்று.

படப்பிடிப்பு ஒத்திவைக்கப் பட்டது. நான் அதிர்ந்து போனேன்.

இந்த ஒரு பாடலுக்கே, இத்துணை தடங்கல்களென்றால் என் எதிர்காலம் என்னாவது என்று அஞ்சலானேன்.

நல்லவேளை, செட் சீர் செய்யப்பட்டு, பாட்டு நல்லவிதமாகப் படமாக்கப்பட்டு, படத்திலும் இடம்பெற்றது.



இறுதியில் பாடல் வரிகளில் ஆட்சேபனைக்குரியதாகக் கருதப்பட்டு, சரணத்தில் சில வாக்கியங்கள் சென்சாரால் வெட்டப்பட்டன.

இத்துணை அமர்க்களங்களுக்கிடையே, எம்.ஜி.ஆருக்காக நான் எழுதிய பாடல், வெள்ளித் திரைக்கு வந்தது.

ஓர் அங்கீகாரம் கிடைக்கும் வரை, ஆரம்ப காலத்தில் எத்துணையோ அல்லல்களுக்கு ஆட்பட்டவன் நான்.

சினிமா என் வருகைக்காக சிவப்புக் கம்பளம் விரித்து விடவில்லை. உறியடி உற்சவத்தில் வழுக்கு மரத்தில் ஏறி உச்சியைத் தொட்டவன் கதைதான் என் கதையும்.

ஆயினும், அவ்வப்போது தெய்வ அருள் துணை புரிந்து என்னை உயர்த்தி விட்டிருக்கிறது. இன்னும் அந்த ஈசன் அருளே எனக்கு ஆனை பலமாக இருந்து கொண்டிருக்கிறது.

எல்லோருக்கும் தெரியாமல் இருக்கலாம். இப்போது சொல்லுகிறேன். என்னை தமிழ் கூறும் நல்லுலகெங்கும் அறியச் செய்த எம்.ஜி.ஆருக்கும், என்னைப் போலவே நிறைய தெய்வபக்தி உண்டு. எந்தக் காலத்திலும் நானறிந்த வரையில் அவர் இறை மறுப்புக் கொள்கையை ஏற்றதேயில்லை.

சூழ்நிலையின் காரணமாக அவர்தன் இறைப்பற்றைப் பறை சாற்றாமல் வைத்திருந்தாராயினும் ஒரு சந்தர்ப்பத்தில் தான் மூகாம்பிகையின் பக்தன் என்பதை அவர் உலகறியச் சொன்னார்.

அது மட்டுமல்ல, அண்மையில் முக்தியடைந்த காஞ்சிப் பெரியவரைக் கண்கண்ட தெய்வம் என்று எம்.ஜி.ஆர். என்னிடம் பலமுறை மெய்சிலிர்க்கச் சொல்லியிருக்கிறார்.

எம்.ஜி.ஆர். நடத்திய உலகத் தமிழ் மகாநாட்டிற்கு, இந்திரா காந்தி வந்தது காஞ்சிப் பெரியவரின் கருணை என்பதை என்னிடம் மதுரையில் மனம் விட்டுச் சொன்னவர் எம்.ஜி.ஆர்.

நான் காஞ்சிப் பெரியவரைப் பற்றி முன்னம் ஓர் ஏட்டில் எழுதிய கவிதை, எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடித்தமானது.

அந்தக் கவிதை எனக்கு மனப்பாடம். எனவே, பல முறை நான் எம்.ஜி.ஆரோடு அளவளாவ நேர்ந்த பொழுதிலெல்லாம், அந்தக் கவிதையை என் வாயால் சொல்லச் சொல்லி கேட்பார்.


(தொடரும்.......)





# சிங்கப்பூர் சந்தையில் பிற நாட்டுப் பெண்கள்

இலங்கையில் இருந்து தனது மனைவியுடன் விடுமுறையைக் கழிப்பதற்காக அண்மையில் சிங்கப்பூருக்குச் சென்ற ஒரு வழக்கறிஞருக்கு அங்கு ஒரு அதிர்ச்சியான சம்பவம் நிகழ்ந்தது.

தேநீர் அருந்துவதற்கான 'ரெஸ்டுரண்ட்' ஒன்றுக்குள் நுழைந்த இந்தச் சட்டத்தரணியும் அவரது மனைவியும் தேநீர் அருந்தும் வரை காத்திருந்தபோது, வழக்கறிஞருக்கு மலசலகூடம் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அப்போது அவரது மனைவி தனிமையில் அமர்ந்திருந்தார். பக்கத்து மேசையில் மூன்று இளம் பெண்கள் சிங்கள மொழியில் பேசிக்கொண்டிருப்பதை இவர் அடிக்கடி அவதானித்து அவர்களைப் பார்த்துப் பல தடவைகள் சிரித்தும் உள்ளார்.



வழக்கறிஞரின் மனைவியை அவதானித்துள்ள அப் பெண்களில் ஒருவர், "அக்கா எப்போது இறங்கினீர்கள்?" எனக் கேட்க, வழக்கறிஞரின் மனைவிக்கு முதலில் எதுவுமே புரியவில்லை. முதலில் அவர், இந்தப் பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்பவர்கள் என்றே நினைத்துள்ளார். பிறகுதான் தெரியவந்துள்ளது அவர்கள் மூவரும் விபசாரிகள் என்று.



"நான் ஒரு வழக்கறிஞரின் மனைவி. எனது கணவருடன் ஓய்வை கழிக்க வந்துள்ளேன்." என இவர் கூறியதும் அந்தப் பெண்கள் மன்னிப்புக் கேட்டுள்ளனர்.

"எப்போது தொழிலில் இறங்கினீர்கள்?" என்று கேட்பதைத்தான் அப்பெண்கள் "அக்கா எப்போது இறங்கினீர்கள்?" எனக் கேட்டுள்ளனர்.

விபசாரத் தொழில் என்பது சிங்கப்பூரில் ஒரு புதிய தொழிலல்ல. டேவிட் பிரஷில் எனும் எழுத்தாளர் 'No money No honey (2004)' என்கின்ற நூலில் இது பற்றி மிகவும் விபரமாகக் கூறியுள்ளார். 1898களில் அதாவது ஒரு நூற்றாண்டுக்கு முன்பதாக அங்கு பதிவு செய்யப்பட்ட



விபசார விடுதிகள் (Brothes) சுமார் 200 மட்டில் இருந்துள்ளன. இவற்றில் முக்கியமாக 3,000 சீன விபசாரிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இன்று சிங்கப்பூரில் சுமார் 15,000 விபசாரிகள் இருந்து வருகின்றனர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இவர்கள் பாலியல் செயற்பாட்டாளர்கள் - ஊழியர்கள் (Sex Workers) என்றே இனங்காணப்படுகின்றனர். இதில் ஆண் பாலியல் செயற்பாட்டாளர்கள் - பெண் பாலியல் செயற்பாட்டாளர்கள் என பிரிவுகள் உண்டு.

பெண் பாலியல் செயற்பாட்டாளர்கள் சமூகத்தில் பல்வேறு மட்டங்களில் இருந்து வருகின்றனர். ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தொலைபேசி அழைப்புகளின் மூலம் அழைத்துக்கொள்ளக் கூடியவர்கள், கோல் கேர்ள்ஸ் என்று தரகர்களின் மூலம் பெறப்படக் கூடியவர்கள், கைட் கேர்ள்ஸ் என்னும்இரவு விடுதிகளில் இருந்து வருபவர்கள், பார் கேர்ள்ஸ் என இவர்கள் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஒரு வகையைச் சேர்ந்தவர்களாகும்.

விபசார வீடுகளில் மற்றும் மசாஜ் நிலையங்களில் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் இன்னொரு வகையைச் சேர்ந்தவர்களாவர். பாலியல் செயற்பாடுகளுக்கு மிகவும் பிரபலமான கெலங் பகுதியில் மாத்திரம் சுமார் 300 விபசார வீடுகள் அமைந்துள்ளன.

இவற்றைத் தவிர, வீதியோரங்களில் தங்களது தொழிலை நடாத்திவருகின்றவர்கள் மூன்றாம் வகையைச் சார்ந்தவர்களாவர்.

மேலே 'எப்போது இறங்கினீர்கள்?' எனக் 'கேட்ட நம் நாட்டுப் பெண்கள் இந்த மூன்றாம் வகையைச் சார்ந்தவர்களாவர்.

சிங்கப்பூரில் அதிகளவில் விபசாரத் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் சீனப் பெண்களாவர். விகிதாசாரப்படி பார்க்கும்போது 1. இந்தோனேசியா, 2. தாய்லாந்து, 3. இந்தியா, 4. மலேசியா, 5.பிலிப்பைன்ஸ். இந்த நாடுகளைச் சார்ந்த பெண்கள் இங்கு விபசாரத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் எல்லோரும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களாக இருந்து வருகின்ற போதிலும் இலங்கைப் பெண்கள் நூற்றுக்கும் குறைவான வர்களாகவே இருக்கின்றனர்.

விபசார விடுதிகள் கெலங் (Geylang) பகுதியிலேயே மிக அதிகமாகக் காணப்படுகின்றன. இப் பகுதியை 'குழி' என்றே இலங்கையர்கள் அழைக்கின்றனர் இப் பகுதியைத் தவிர, டெஸ்கர் வீதி (Deskar Road) ப்ளென்டர் ஸ்கொயார் (Flanders square) மற்றும் கீஓங், ஷெய்க் வீதி (Keong saik Road) போன்ற பகுதிகளிலும் விபசார விடுதிகளில் மும்முரமாக நடத்தப்பட்டு வருகின்றன.

ட்ரான்செக்சுவல் என அழைப்பப்படுகின்ற அலிகளும் தொழிலை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர். பெண்களைப் போல் ஆடை அணியும் இவர்கள் சத்திர சிகிச்சைகளின் மூலம் தங்களது பாலியல் உறுப்புகளை மாற்றிக்கொண்டவர்களாவர். இவர்களுடைய நடை, உடை, பாவனை அனைத்துமே பெண்களை ஒத்ததாகும். இவர்கள் வீதி ஓரங்களில் சிறு சிறு குழுக்களாக நிற்பதைக் காண முடியும்.

கெலங் பகுதியில் வீதியோரங்களில் இந்திய மற்றும் இலங்கைப் பெண்கள் மிக அதிகமான வகையில் நிற்பதைப் பார்க்கலாம். குட்டையான கவுண்கள், பஞ்சாபி மற்றும் சேலைகளை உடுத்தியிருக்கும் இவர்களிடம் நிச்சயமாக ஒரு கைப்பை காணப்படும்.

இங்கே விபசாரத்தில் ஈடுபடுகிற்ற பெண்களில் 13 வயதுடையவர்களும் உண்டு. இதுதான் ஆகக் குறைந்த வயதினர். ஆகக் கூடிய வயது 37 ஆகும். ஒரு சில விடுதிகளில் தாயும் மகளும் கூடத் தொழில் புரியும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஒரு சிலர் இருபது முப்பது வாடிக்கையாளர்களைப் பெறுகின்ற நிலையும் இருந்து வருவதாகத் தெரிகின்றது.


கொடுக்கல், வாங்கல்கள் அனைத்தும் ஆண்களின் மூலம் நடைபெறுகின்றன. ஒரு சில இடங்களில் இது விதிவிலக்காகும். ஒரு சில பெண்கள் மாதாந்தம் 75,000 ரூபா வரையில் வருமானம் பெறுவதாவும் அறிய முடிகின்றது.

குறிப்பாக வறிய நாடுகளைச் சார்ந்த பெண்களே சிங்கப்பூரில் விபசாரச் செயற்பாட்டாளர்களாக இருந்து வருகின்றனர். இப் பெண்கள் தமது தொழில் நிலை கருதி பல்வேறு வகையான சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளைப் பெற்றுகொண்ட போதிலும் மிக அதிகமான பாலியல் சார்ந்த நோய்களை வழங்கக் கூடியவர்களாக இருந்து வருகின்றனர் என்பதை மறுக்க இயலாது.

-பாருக்

---

**உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதைக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....**




இதற்கு அரண்மனை சமையல்காரன், தோட்டக்காரன், நாவிதன் ஆகியோரைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

பணத்தாசை கொண்டவர்களிடம் அவர்கள் எதிர்பார்ப்பதை விட அதிகமான தொகை கொடுத்து, அவர்களை விலைக்கு வாங்கத் தயங்கக் கூடாது.

ஒருவனுடைய செல்வாக்கைக் குறைக்க அவனுக்கு எதிரான மலிவான கதைகளை உருவாக்கி மக்களிடையே பரப்ப வேண்டும். அது நிஜம் போலத் தோன்றக் கூடிய சந்தர்ப்பங்களையும் திட்டமிட்டு உருவாக்க வேண்டும்.

மன்னனுக்கு எதிராக மக்களிடையே தோன்றுகின்ற அதிருப்தியை வளர்த்து மன்னனுக்கு எதிரான சக்தியாக அதை உருவாக்க வேண்டும். இவ்வாறு பல ஆலோசனைகளையும் சாணக்கியர் தன்னுடைய அர்த்த சாஸ்திரத்தில் விவரித்துச் சொல்லியிருக்கிறார்.

### ஒற்றர்கள் பற்றி வள்ளுவர்:

தர்ம வழியில் ஆட்சி நடைபெற வேண்டும் என்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொன்னவர் வள்ளுவர். அவரும்கூட உளவாளிகள், நிர்வாகத்துறைக்கு எவ்வளவு இன்றியமையாதவர்கள் என்பதை ஒற்றாடல் என்கிற அதிகாரத்தில் பத்துக் குறள்கள் மூலமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

நீதி நூலும், ஒற்றனும் ஆள்கின்ற அரசனுக்கு இரண்டு கண்களைப் போன்றவைகள் என்கிறார் திருவள்ளுவர். நீதி நூலுக்குச் சமமாக வைத்து ஒற்றனைப் பற்றி அவர் பேசுவதிலிருந்து உளவறிதலுக்கு அவர் கொடுத்துள்ள முக்கியத்துவத்தை நன்கு அறிய முடிகிறது.

முதல் குறளில் இப்படிச் சொல்லுகின்ற வள்ளுவர், இரண்டாவது குறளில் எல்லோருடைய நடவடிக்கைகளையும் ஒவ்வொரு நாளும் விரைந்து அறிந்து கொள்ளுதல் அரசருடைய வேலையாகும் என்கிறார்.

மூன்று விஷயங்கள் இங்கே குறிப்பிடப்படுகின்றன. முதல் விஷயம் எல்லோருடைய செயல்களையும் அறிவது. அடுத்த விஷயம் எல்லோருடைய செயல்களையும் தினந்தோறும் அறிவது. மூன்றாவது விஷயம் அதையும் விரைவில் அறிவது. இந்த மூன்று விஷயங்களை வலியுறுத்துவது மூலம் உளவு பார்த்தல் எவ்வளவு பரவலாகவும் தொடர்ந்தும் விரைந்தும் நடைபெறவேண்டும் என்பதை வள்ளுவர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

மூன்றாவது குறளில் ஒற்றர் மூலம் பகைவர்களின் செயல் களை அறிவதும், அதுபற்றிக் கிடைத்த தகவல்களை ஆராய்ந்து தக்க நிலைகளை மேற்கொள்ளுவதும் ஒரு மன்னருடைய கடமையாகும் என்கிறார். இதைச் செவ்வனே செய்யாத மன்னனால் வெற்றிகளைப் பெறுவது சாத்தியமில்லை. ஒரு மன்னனின் வெற்றி - தோல்விகளைத் தீர்மானிக்கின்ற சக்தி உளவுத்துறைக்கு இருப்பதால் ஆட்சியிலிருப்பவன் அதில் விசேஷக் கவனம் செலுத்த வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.


உளவு பார்ப்பவனின் மனோபாவம் எவ்வாறு இருக்க வேண்டுமெனவும் எடுத்துக் காட்டுகிறார். அரசரிடம் வேலை செய்கிறவன் அவனுக்கு நெருக்கமானவன் எனக் கருதி அவனை உளவு பார்க்காமல் விட்டுவிடக் கூடாது.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# சங்கர மடத்துக் கிங்கரர்கள்

விஜயேந்திரர் கைதுசெய்யப்பட்ட விதமும் தருணமும் சங்கர மடத்துக்குள்ளும் வெளியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. சங்கர மடத்தைத் தமிழக அரசு கையேற்கப் போவதாகவும் அதனாலேயே ஜெயேந்திரரை விடுவிப்பதற்கான முடிவெடுத்தபோதே விஜயேந்திரரைக் கைதுசெய்யும் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது என்கிறனர் சங்கர மடத்துச் சாமிகளின் பக்தர்கள். இது அப்பட்டமான கட்டுக்கதை என்கின்றன தமிழக அரசு தரப்பு வட்டாரங்கள். விஜயேந்திரர் கைதுசெய்யப்பட்ட சில மணி நேரங்களுக்குள்ளேயே இந்தியாவின்


சங்கரமடத்தின் முகப்புத் தோற்றம்

முன்னாள் ஜனாதிபதி ஆர்.வெங்கட்ராமனும் முன்னாள் பிரதமர் ஏ.பி.வாஜ்பாயும் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துத் தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்துள்ளார்கள். சுமார் 45 நிமிடங்கள் இவர்கள் மன்மோகன் சிங்கைச் சந்தித்துச் சங்கர மடம் தொடர்பாகப் பேசியிருந்தார்கள். "உச்ச நீதிமன்றம் ஜெயேந்திரருக்கு அளித்த ஜாமீனால் ஆத்திரமடைந்திருக்கும் தமிழக அரசு, விஜயேந்திரரைக் கைதுசெய்துள்ளது போல் தோன்றுகிறது." ஒன்று அவர்கள் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கூறியுள்ளனர்.

மடாதிபதிகள் கைதுசெய்யப்பட்டமை மக்களைக் கோபப்படுத்துமென்ற குற்றச்சாட்டைத் தமிழக முதல்வர் ஜெயலலிதா அடியோடு மறுத்துள்ளார். "இதே போன்ற அச்சங்கள் ஜெயேந்திரர் கைதுசெய்யப்பட்டபோதும் கிளம்பின. ஆனால் அடுத்தடுத்து நடந்த சம்பவங்கள் அவற்றைப் பொய்ப்பித்தன. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற தார்மீக நிலைப்பாட்டின்படி தமிழக அரசு செயற்பட்டுள்ளது. இதனைப் பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்" என்றும் ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார். சங்கர மடத்தைக் கைப்பற்றும் நோக்கம் தமிழக அரசுக்கு இல்லையென்றும் சட்டப்படிதான் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் ஏற்கெனவே ஜெயலலிதா கூறிவிட்டார்.

சங்கர மடத்துச் சம்பவங்களிலும் சங்கடங்களிலும் இந்திய தேசிய மட்டத்திலிருந்து தமிழக மாநிலம் வரை அரசியல் மூக்கை நுழைத்திருக்கிறது. இதனால்தான் சட்டப்படி நடவடிக்கை எடுங்கள். மதத்துக்கு அவமரியாதை செய்யாதபடி நடந்துகொள்ளுங்கள்" என்று பிரதமர் மன்மோகன் சிங் தமிழக முதல்வருக்குக் கடிதம் எழுதுமளவுக்குத் தேசிய மட்டம் வரை சங்கர மடச் சம்பவங்கள் உயர்ந்து நிற்கின்றன. பாரதீய ஜனதாக் கட்சியின் ரத யாத்திரை புகழ் எல்.கே.அத்வானி, ஏ.பி.வாஜ்பாய், சுஷ்மா சுவராஜ் ஆகிய பிரபலங்களெல்லாம் சங்கர மடத்துக்குச் சார்பாகக் குரலெழுப்பும் அளவுக்கு அவர்கள் இதயங்களில் சங்கர மடம் எழுந்து நிற்கிறது.


"சங்கராச்சாரியார்கள் கைது என்பது இந்து மதத்துக்கெதிரான நடவடிக்கை. அதிலும் பிராமணர்களுக்கு எதிரான நடவடிக்கை. இது தவிர, பிராமணர் அல்லாதோருக்கும் பிராமணருக்குமிடையில் பிளவை ஏற்படுத்தி, பிராமணர் அல்லாதோரின் வாக்கு வங்கியைக் குறிவைத்து எடுக்கப்பட்ட நடவடிக்கை" என்கிறது இந்துத்துவக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி. ஆனால் பிராமண சமூகத்தைச் சேர்ந்தவரான தமிழக முதல்வர் ஜெயலலிதா இதனை முற்றாக மறுதலித்துள்ளார். "வலுவான சாட்சியங்களின்றி தமிழக அரசு, சங்கராச்சாரியாருக்கு எதிராக, எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்காதென்று நான் நம்புகிறேன். அதே சமயம் தமிழ்நாட்டுக்கு வெளியே விசாரணை நடக்கும்போதுதான் அது நியாயமான ரீதியில் மேற்கொள்ளப்படுமென்பதை உறுதி செய்துகொள்ள முடியும்" என்கிறார் தமிழகத்தின் பிரபல அரசியல் விமர்சகரும் முன்னாள் நடிகருமான 'துக்ளக்' சோ ராமசாமி. திராவிட கழகத் தலைவரான இ.வீரமணி என்ன சொல்கிறார் தெரியுமா?

"சங்கராச்சாரியார் கைது சட்டபூர்வமான நடவடிக்கைதான். பிராமணரல்லாதோரின் வாக்குகளைக் குறிவைத்த நடவடிக்கை இதுவென்று சிலர் போலியான வாதத்தை முன்வைக்கிறார்கள். அவர்களே இதனை இந்துக்களுக்கெதிரான நடவடிக்கையென்றும் கூறுகிறார்கள். உண்மையில் சொல்லப்போனால் பிராமணரல்லாதோர்தான் இந்துக்களில் பெரும்பான்மையினர். அப்படி இருக்கும்போது எப்படி இதில் அரசியல் வாக்கு வங்கி முதன்மையானதாக இருக்கும்?" எனக் கேள்வி எழுப்புகிறார் வீரமணி.

சங்கரராமன் கொலை வழக்கில் போதிய ஆதாரமில்லையென்பதால்தான் ஜெயேந்திரர் விடுவிக்கப்பட்டாரென்று கூறும் ஜெயேந்திரர் தரப்பு வக்கீல்கள், அவரை மீண்டும் குண்டர் சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறையில் தள்ளுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றனவென்று தெரிவிக்கின்றனர். திருக்கோட்டியூர் மாதவன் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி தாக்கப்பட்டார். ஆகஸ்ட் ஆறாம் திகதி வரை தாக்குதல் காயங்களுக்காக சென்னை அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். திருக்கோட்டியூர் மாதவனுக்கும் ஜெயேந்திரருக்குமிடையில் நிலவும் தகராறின் காணத்தினால்தான் ஜெயேந்திரரின் அனுசரணையோடு தாக்குதல் நடத்தப்பட்டதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுபவர்கள் ஒரு வருட காலம் வரை ஜாமீன் கேட்டு மனு தாக்கல் செய்ய முடியாது. எனவே குண்டர் சட்டத்தின் கீழ் மீண்டும் ஜெயேந்திரர் கைது செய்யப்படுவாரானால் ஒரு வருட காலத்துக்கு மாமியார் வீட்டில் இருக்க வேண்டியதுதான். ஆனால் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுபவர்கள் மூன்று மாதங்களின் பின்னர் மறு ஆய்வுக் குழு முன்னிலையில் ஆஜராகி முறையிடலாம். குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்டவிரோதமாக யாராவது கைதாகியிருப்பதாக மறு ஆய்வுக் குழு முடிவுசெய்தால், கைதானவரை விடுதலை செய்யுமாறு மறு ஆய்வுக் குழுவினால் உத்தரவிட முடியும். சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாக இதுவரை 25 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 12 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இளைய மடாதிபதி விஜயேந்திரரின் தம்பி ரகு, சுந்தரேச ஐயர், கதிரவன், சின்னா, அம்பிகாபதி, மாட்டு பாஸ்கர், சுந்தரம், அனில்குமார், ஆனந்தகுமார், கே.எஸ்.குமார் ஆகியோர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மூன்று வாரங்களுக்கு முன்னர் அப்பு என்ற கிருஷ்ணசாமியும் தில் பாண்டியன் என்பவரும் குண்டர் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஜெயேந்திரரைக் கைதுசெய்வதற்கு பொலிஸ் முஸ்தீபுகள் செய்துவருவதாகச் சந்தேகம் தெரிவிக்கும் சங்கர மடத்து விசுவாசிகள், அதற்கு முன்னோடி நடவடிக்கையாகவே ஹைதராபாத்தைச் சேர்ந்த சதுர்வேதி சுவாமிகளைக் கைதுசெய்திருப்பதாகத் தெரிவிக்கின்றனர். சதுர்வேதியின் ஆசிரமங்களிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களும் கோடிக்கணக்கான பெறுமதி மிக்க தங்க, வைர, வெள்ளி நகைகளும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. ஆட்கடத்தல், கற்பழிப்பு, நில மோசடி, பண மோசடி போன்ற பல குற்றச்சாட்டுகள் சதுர்வேதி மீது சுமத்தப்பட்டுள்ளன. சதுர்வேதியைச் 'செக்ஸ் மணியாக்' என்று பொலிஸார் வர்ணிக்கின்றனர். இயற்கைக்கு விரோதமான பாலியல் சில்மிஷங்கள் உட்பட மிகக் கொடூரமான கேவலமான பாலியல் சில்மிஷங்களில் ஈடுபட்டு வந்தவரென்றும் பொலிஸ் விசாரணைகள் தெரிவிக்கின்றன. தன்னைக் கோகில கிருஷ்ணனாகக் கற்பிதம் செய்துகொண்டு தனது பக்தைகளுடன் லீலா விநோதங்களில் ஈடுபட்டு வந்தவர் இவரென்று பொலிஸார் குற்றஞ்சாட்டுகின்றனர்.

## ஆ..... சாமிகள்


இளைய மடாதிபதி விஜயேந்திரரின் தம்பி ரகு


கல்யாணராமன் கோலத்தில் கோபிகிருஷ்ணனாக சதுர்வேதி சுவாமிகள்

சதுர்வேதியிடம் உதவியாளராக இருந்த சிவகுமாரிடமும் பல உண்மைகளைப் பொலிஸார் பெற்றுள்ளனர்.

கோவையில் உள்ள தனது ஆசிரமக் கிளையில் பட்டப் பகல் வேளையிலேயே நான்கைந்து டீன் ஏஜ் பெண்கள் மத்தியில் நிர்வாணமாகப் படுத்துக் கிடப்பாராம் சதுர்வேதி. அந்தப் பெண்களுக்குச் சாப்பிடுவதற்கு ஏதோ கொடுப்பாராம். அதற்குப் பிறகு மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகமாக அந்தப் பெண்கள் இவர் சொன்னதையெல்லாம் செய்வார்களாம்.

"அந்த ஆள் செய்த அநியாய சில்மிஷங்களை நேரில் பார்த்தவன் நான். படுக்கை அறையில் பெண்களோடு உல்லாசமாக இருக்கும்போதே என்னை அந்த அறைக்குள் அழைப்பார். 'கோபிகைகளுடன் கண்ணன் இருக்கும்போது, மனசு ரம்மியமாக யாராவது பாட்டு பாட வேணாமா? உனக்குதான் பிரமாதமான குரல் வளமாச்சே. நீ பாடு.....'என்று எனக்குக் கட்டளையிடுவார். நானும் தலையெழுத்தே என்று அவர் சொன்னபடி செய்வேன். சில சமயங்களில், கண்றாவிக் காட்சிகளைப் பொறுக்க முடியாமல், பாட்டை நிறுத்திவிட்டு வெளியே போக முயன்றால், கெட்ட வார்த்தைகளால் என்னை நனைத்தெடுப்பார் சதுர்வேதி" என்பது சிவகுமார் கொடுத்திருக்கும் வாக்குமூலத்தின் ஒரு சிறு பகுதி.

பொலிஸ் காவலில் இருந்தபோது 'எனது அதி தீவிர பக்தைகள்' என்று அறுபது பெண்களின் பெயர்களை ஒப்பித்தாராம் சதுர்வேதி.

'அதி தீவிர பக்தைனா என்ன தெரியுமா....நினைச்சப்பல்லாம் அவங்களோட படுப்பாருனு அர்த்தம்' என்று கூறிய ஒரு பொலிஸ் அதிகாரி, இவர் பெண்களை வளைத்தது எப்படி என்பது பற்றியும் படு காஷுவலாக எடுத்து விட்டார்.

"இவர் குறிப்பாக வைஷ்ணவ வீட்டுப் பெண்களைத்தான் வலைக்குள் வீழ்த்துவார். 'சிவனை விட விஷ்ணுதான் உயர்ந்தவர்' என்றும், 'நானே கலியுக விஷ்ணு' என்றும் வசீகரமான வார்த்தைகளில் சொல்வார். அந்தப் பெண்களில் யாருடைய குடும்பத்திலாவது கணவரிடம் கருத்து வேறுபாடு இருந்து, அதை அவர்களாக வாய்விட்டுச் சொல்லும்போது, கப்பென்று அதைப் பிடித்துக்கொண்டு அவர்கள் வீட்டுக்குள் போய்விடுவார். அவர்களுடைய கணவரின் நம்பிக்கையையும் எப்படியாவது பெற்று அங்கேயே பகல், இரவு பாராமல் இருந்து, எப்படியாவது அந்தப் பெண்களைத் தன் வலைக்குள் வீழ்த்திடுவார்" என்றார்.

ஒரு வீட்டில் பூஜை செய்யும்போது, அக்கம் பக்கத்திலிருந்து பக்தியோடு வருகிற பெண்களை நோட்டமிடுவாராம் சதுர்வேதி. அதிலிருந்தே தனது அடுத்த இரையைத் தேர்ந்தெடுப்பாராம்.

இப்படி இவரிடம் சிக்கிய ஒரு பெண் அழுதபடி இப்படி வாக்குமூலம் அளித்துள்ளார்.

**அருண் கண்ணன்**

"ஒருநாள் நான் தி.நகரில் உள்ள அவரது ஆசிரமத்துக்கு எப்போதும் போல் போயிருந்தேன். சதுர்வேதி வெளியில் சென்றிருந்தார். அங்கிருந்த சுவாமி படத்தின் முன் நான் கண் மூடி தியானத்தில் இருந்த சமயம், சதுர்வேதி திரும்பி வந்தார். மிகுந்த ஆத்திரத்தோடு என்னை நோக்கி, 'இரத்தமும் சதையுமா கடவுள் இங்கே இருக்கேன். நீ வெறும் போட்டோவைப் பார்த்து வணங்கறியே' என்று அடித் தொண்டையில் கூச்சலிட்டார். 'நீ பண்ண பாவத்துக்குத் தண்டனை தரப் போறேன்' என்றவர், ஒரு ஆளை அனுப்பி முட்டையும் பிரியாணியும் வாங்கி வரச் செய்தார். மிக ஆசாரமான குடும்பத்திலிருந்து வந்த என்னை, அதையெல்லாம் தின்னும்படி மிரட்டினார். வேறு வழியில்லாமல் அப்படியே செய்தேன்" என்று சொல்லியிருக்கிறாராம் அந்தப் பெண்மணி.

(தொடரும்.....)




சக்தியென்று புகழ்ந்திடுவோம் முருகன் என்போம்;
சங்கரனென் நுரைத்திடுவோம் கண்ணன் என்போம்;
நித்தியமிங் கவள்சரணே நிலையென் றெண்ணி,
நினக்குள்ள குறைகளெல்லாம்ந் தீர்க்கச் சொல்லி,

– சுப்பிரமணிய பாரதியார்

# பாப்பா முரசு

# பாட்டுப் பாடிய கழுதை

ஓர் ஊரில் ஒரு கிராமவாசி இருந்தான். அவன் தனது துணி முட்டைகளைச் சுமக்க ஒரு கழுதையை வைத்திருந்தான். அது தினமும் அழுக்குத் துணிகளையும் துவைத்த துணிகளையும் மூடை மூடையாகச் சுமக்கும். இருந்தாலும் அந்தக் கிராமவாசி அதற்குப் போதுமான உணவு கொடுப்பதில்லை. அதனால் தனது இரையைத் தேடி இரவு வேளைகளில் தெருக்களில் அலையும்.



ஒரு நாள் ஊருக்கு வெளியே ஒரு நரியைச் சந்தித்தது.

"மாமா! நீங்கள் ஏன் வறுமையில் அடிபட்டவன் போல் மெலிந்து காணப்படுகின்றீர்கள்?" என்று நரி கேட்டது.

"நான் என்ன செய்வது மருமகனே? என் எஜமானன் எனக்குப் போதிய உணவு தருவதில்லை. அதனால் இரவு நேரங்களில் நான் இரை தேடி அலைகிறேன்" என்றது கழுதை.

"மாமா, நான் உங்களுக்கு உதவி செய்கிறேன். வெள்ளரித் தோட்டம் ஒன்று இருக்கிறது. அதில் பச்சைப் பசேல் என்று வெள்ளரிக் காய்கள் விளைந்துள்ளன. நான் உங்களை அங்கு அழைத்துச் செல்கிறேன். நீங்கள் அங்கு உங்கள் வயிறு நிறைய வெள்ளரிக் காய்களைச் சாப்பிடலாம்!" என்று நரி சொன்னது.

அவ்வாறே நரியும் கழுதையும் வெள்ளரித் தோட்டத்திற்குச் சென்று அங்கிருந்த வெள்ளரிக் காய்களை வேண்டிய மட்டும் தின்றன. பிறகு அவை அதிகாலையில் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பின.

இவ்வாறு நரியும் கழுதையும் தொடர்ந்து சில நாட்களாக இதனைச் செய்து வந்தன. வழக்கம் போல ஓரிரவு வெள்ளரித் தோட்டத்தில் நின்றுகொண்டிருந்த கழுதை, நரியிடம் சொன்னது,

**பாப்பா முரசு சிறுகதை**

"மருமகனே! என்ன அருமையான இரவு இது. வானில் நிலவு ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. தென்றல் காற்று சுகமாக அடிக்கின்றது. இப்போது எனக்குப் பாட வேண்டும் போல் தோன்றுகிறது! நான் என்ன பாட்டுப் பாட வேண்டும்? சொல்!" என்றது கழுதை.

கழுதையின் வார்த்தைகளைக் கேட்டு அதிர்ச்சியடைந்த நரி, "அப்படிச் செய்யாதீர்கள்! உங்கள் குரல் பெரிதாக இருக்கும். அது உறங்கிக்கொண்டிருக்கும் தோட்டக்காரர்களை எழுப்பி விடும்! நாம் வெள்ளரிக் காய்களைத தின்றுவிட்டுப் பேசாமல் போய்விடுவோம்" என்று பதற்றத்துடன் சொன்னது.

"இல்லை, நான் பாடத்தான் செய்வேன். காட்டுவாசியான உனக்கு இசையின் அருமை தெரியாது என்பது உன் பேச்சிலிருந்து தெரிகிறது! நான் பாடுவதை நீ எப்படித் தடுக்க முடியும்?" என்று கழுதை உறுதியாகக் கூறியது.

"ஆகட்டும், உங்களால் எவ்வளவு சத்தமாகப் பாட முடியுமோ, அவ்வளவு சத்தமாக நீங்கள் பாடுங்கள்! ஆனால் ஒரு விண்ணப்பம். நான் சிறிது தூரம் ஓடிப் போய் பாதுகாப்புடன் நின்றுகொண்டு அங்கிருந்து உங்கள் பாட்டைக் கேட்கிறேன்!" என்று கூறிவிட்டு நரி காட்டினுள் ஒரு பாதுகாப்பான இடத்திற்கு ஓடிவிட்டது.

அதன் பின்னர் கழுதை தன் தலையை உயர்த்தி நன்றாகக் கத்த ஆரம்பித்தது. அதைக் கேட்டுத் தங்கள் கரங்களில் தடிகளுடன் ஓடி வந்த தோட்டக்காரர்கள், அங்கு நின்றுகொண்டிருந்த கழுதையை நையப் புடைத்து, அதன் கழுத்தில் ஒரு பெரிய கல்லைக் கட்டி, வெள்ளரித் தோட்டத்திலிருந்து அக் கழுதையை விரட்டிவிட்டனர்.

கழுத்தில் கல்லைச் சுமந்தபடி வந்த கழுதையைப் பார்த்த நரி, "ஆகா! உங்கள் பாட்டுக்குப் பரிசாக என்னவொரு அருமையான அட்டிகையை நீங்கள் உங்கள் கழுத்தில் அணிந்துகொண்டிருக்கிறீர்கள்! உரக்கப் பாடாதீர்கள் என்று முதலிலேயே அறிவுறுத்தினேன். ஆனால் நீங்கள் அதைக் கேட்கவில்லை!" என்று கேலியாகச் சொன்னது.

அதனால்தான் ஒருவன் எப்போதும் நல்ல அறிவுரையைக் கேட்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **09.03.2005.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 586**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 584

**பரிசுக்குரியவர்:**
**எம்.யூ. சஜாத் முஹமட்,**
**32, மானம்பொட, உக்குவலை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம்.என்.எப். ரிஸ்மின் நவாஸ், அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, திஹாரிய. | எம்.எச். அமானி, தரம் 3, கஹட்டபிட்டிய முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. |
| இ. றிஸ்மியா, மாங்குளம், நேரியகுளம், வவுனியா. | எம்.ஐ. முஹமட் அஸ்லம், 116, ஓடாவியார் வீதி, ஏறாவூர் -2C |
| எப். ரிஸ்கா,123, முத்துவெல்ல மாவத்தை, கொழும்பு - 15. | கா. நவீன், பாலர் பாடசாலை, மத்துகம. |
| இ. இந்துஜா, கண்டி வீதி, நகராட்சி மன்ற விடுதி, காந்தி நகர், திருகோணமலை. | ராஜரட்ணம் திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |
| ர. நிரஞ்சனா, தரம் 10, மட்/செங்கலடி மத்திய கல்லூரி, செங்கலடி. | பி. ஜனார்த்தனன், காலிங்க மாவத்தை, பொல்ஹென்கொட, கொழும்பு - 05. |

## ஆத்திசூடி


### பருவத்தே பயிர் செய்!

நீ செய்யும் கருமங்களைச் செய்ய வேண்டிய காலத்திலே செய்!

-ஔவையார்

நிரஞ்சலா, கண்டி.

## தவளை



தத்தித் தத்திச்
சென்றிடுமே!
தண்ணீர் என்றால்
ஒன்றிடுமே!


பாம்பைக் கண்டால்
நடுங்கிடுமே!
பாய்ந்தே ஓடி
ஒடுங்கிடுமே!
வீம்பாய் கத்திக்
கெட்டிடுமே!
விரோதி கண்ணில்
பட்டிடுமே!

நதியில் நீச்சல்
அடித்திடுமே!
நாக்கால் பூச்சி பிடித்திடுமே!
அதிகம் பேசி ஆடிடுமே!
அழிவை அதுவே தேடிடுமே!

சத்தம் தொடர்ந்து போட்டிடுமே!
நித்தம் வெளியில் காட்டிடுமே!


## அதிசய உலகம்

### எட்டு மணி நேர உறக்கம்



அவுஸ்திரேலியாவில் காணப்படும் இந்தப் பறவை பிலாட்டிப்பஸ் என அழைக்கப்படுகிறது. முழு வளர்ச்சி குன்றிய நிலையில் பிறக்கும் மிருகங்கள் அதிக நேரம் உறங்குகின்றனவாம். இப் பறவையும் அப்படித்தானோ என்னவோ? இது உறங்குவது மனிதனைப் போல் நாள் ஒன்றிற்கு எட்டு மணி நேரமாம்.

### சிட்டின் பொட்டுத் தூக்கம்



இந்தச் சிட்டுக் குருவி மிகக் குறைவாகவே துயில் கொள்ளும். மனிதர்கள் குடியிருக்கும் பகுதிகளில் வாசம் செய்யும். இவை ரம்மியமான ஓசையுடன் மரம் செடிகளில் தாவித் திரிவதை அன்றாடம் காணலாம். இடம் விட்டு இடம் பறக்கும் போது இவை விழிப்பாகவே உள்ளன.


## உங்கள் பொது அறிவு எப்படி?

### தமிழ்ப் புலவர்கள் இயற்றிய நூல்கள்


| | |
|---|---|
| 1. அகத்தியர் | - அகத்தியம் |
| 2. அதிவீரராம பாண்டியர் | - நைடதம் |
| 3. அபிராமிப்பட்டர் | - அபிராமி அந்தாதி |
| 4. அருணகிரிநாதர் | - திருப்புகழ் |
| 5. இளங்கோவடிகள் | - சிலப்பதிகாரம் |
| 6. இறையனார் | - இறையனார் காவியம். |
| 7. உமறுப் புலவர் | - சீறாப்புராணம். |
| 8. நக்கீரர் | - திருமுருகாற்றுப்படை. |
| 9. கபிலர் | - குறிஞ்சிப் பாட்டு. |
| 10. ஒட்டக்கூத்தர் | - தக்கயாகப் பரணி. |





## பனி விளையாட்டு



குளிர் காலத்தில் பனி விழும் வட துருவ நாடுகளில் பனியுடன் சம்பந்தமான பல பொழுதுபோக்கு விளையாட்டுகளிலும் ஈடுபடுகிறார்கள். இது கனடா மற்றும் ரஷ்யாவில் நடைபெற்ற பனிச் சிற்பப் போட்டிக்காக உருவாக்கப்பட்ட பனி பொம்மைகளே.



## கையடக்கத் தொலைபேசி கூண்டு





நாம் தொலைபேசிக் கூண்டில் நுழைந்து, தொலைபேசி அழைப்பொன்றைப் பெறுவது போல் நடமாடும் தொலைபேசியில் அழைப்பினை எடுக்கும்போது நடமாடும் கூண்டில் இருந்து அழைப்பினை எடுக்கலாமே என்ற யோசனை அமெரிக்க நிர்வாகி ஒருவருக்கு உதித்ததனால் ஏற்பட்ட விளைவே இப் படம்.

## குளிருக்குக் கூடை



கடுங் குளிரில் இருந்து தமது குழந்தைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஏழைத் தாய்மார் பல வழிகளைக் கண்டுபிடித்துள்ளனர். சீனாவின் வட பிரதேச பேருந்து நிலையமொன்றில் தனது குழந்தையைக் குளிரில் இருந்து காத்துக் கொள்வதற்காகப் பிரம்புக் கூடையொன்றில் இருத்தி, ஒரு தாய் பஸ்ஸுக்காகக் காத்து நின்றபோது பிடித்த படம்.

## விருது வென்ற நாய்



இங்கிலாந்து போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் நாய்களைச் செல்லத்திற்குக் கொஞ்சி விளையாட மாத்திரம் வளர்ப்பதில்லை. சிலர் அவைகளைப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காகவே பயிற்சிகளையும் வழங்கி வளர்த்து வருகிறார்கள். அண்மையில் அந்நாட்டில் நடைபெற்ற நாய்ப் போட்டியில் சிறந்த நாயாகத் தெரிவு செய்யப்பட்ட 'போட்டி நாயகன்' தான் இவர்.

## ஆறு கால் பாய்ச்சல்



விவசாயிக்குத் தெரிந்தது விவசாயம் செய்வது மாத்திரமே என்று யாராவது சொன்னால் அதை வன்மையாகக் கண்டிக்கிறார்கள் சீனர்கள். ஆம். சீனாவின் ஒரு விவசாய இளைஞர் பழைய கார், டிரக்டர்களின் பாகங்களைப் பொருத்தி ஒரு ஹெலிகொப்டரை வடிவமைத்துள்ளார். இவர் தனது ஹெலிகொப்டரில் விண்ணில் பறப்பதற்கு முன் புகைப்படத்திற்கு போஸ் கொடுத்த காட்சியே இது.

சீனாவின் உணவு விடுதி ஒன்றில் சந்திக்கக் கிடைத்த இந்தத் தவளையாருக்கு ஆறு கால்கள். உணவு விடுதியின் ஊழியர் ஒருவர் சந்தையில் கொள்வனவு செய்து கொண்டுவந்த தவளைகளுள் இந்த ஆறுகால் தவளையாரும் இருந்துள்ளார்.

## விவசாயி விமானியாகிறார்





சுக்ரன்
ரவிகிருஷ்ணா - நதீஷா

# விஜய் கமெண்டுக்கு எஸ்.ஏ.சி. சொல்லும் பதில்



ஜி
அஜித் - த்ரிஷா

'சுக்ரன்' படத்தின் கெசட் வெளியீட்டின்போது ட்ரைலர் போட்டுக் காண்பிக்கப்பட்டது. டிரைலரைப் பார்த்த விஜய்யின் கமெண்ட்...

"இது என் அப்பா படம் போல் இல்லை." இந்தக் கமெண்டுக்கு எஸ்.ஏ.சி. என்ன பதில் சொல்கிறார்?

"அதை தப்பா எடுத்துக்கவில்லை. சட்டப் பிரச்சினைகள் இல்லாமல் இன்றைய டிரெண்டுக்கு ஏற்ற மாதிரிப் பண்ணியிருப்பதால் அப்படி சொல்லியிருக்கிறார். ஆனால், கதை சொல்லும் கருத்தைப் பாருங்கள். நிச்சயம் அது என் படமாகத்தான் இருக்கும்."

"என்ன கருத்து?"

"விஜய்யை வைத்து நான் இயக்கிய முதல் படம் தோல்வி. 'செந்தூர பாண்டி'யில் விஜயகாந்த் என் மகன் விஜய்க்காக, அவனின் வெற்றிக்காக உதவினார். அதே போல் விஜய் இன்னொரு நடிகரின் வெற்றிக்கு உதவட்டும். அதுவுமில்லாமல் ஏ.எம்.ரத்னம் எனது கொலீக்ஸ். அவரின் மகன் வெற்றிக்கு நானும் உதவுகிறேன்" என்றார் எஸ்.ஏ.சி.

# 3.5 கோடி கேட்கிறார் தனுஷ்

ஜெமினி பிலிம்ஸ் நிறுவனம் சமீபத்தில் தெலுங்கில் தயாரித்து வெளியிட்ட 'ஆர்யா' என்ற திரைப்படம் மாபெரும் வெற்றி பெற்றுள்ளது.

அல்லு அர்ஜுன் - அனுராதா ஆகிய புதுமுகங்களை வைத்து இயக்கப்பட்ட இந்த ஆக்ஷன் - காதல் படம் கொட்டிய வசூல் மழையில் முழுக்க நனைந்துவிட்ட தயாரிப்பு நிறுவனம் அதை அப்படியே தமிழிலும் எடுக்க முடிவு செய்துள்ளது.

யுவன் என்ற பெயரில் தனுஷை ஹீரோவாகப் போட்டுள்ளார்கள். படத்தை இயக்கப் போவது அரவிந்த் கிருஷ்ணா. இவர் தனுஷின் அண்ணன் செல்வராகவனிடம் ஒளிப்பதிவாளராக இருந்தவர்.

படத்தை இயக்குவது என்னவோ அரவிந்த் கிருஷ்ணாதான் என்றாலும், தமிழுக்கு ஏற்றபடி கதையை அட்டகாசமாக மாற்றி எழுதித் தந்தாராம் செல்வராகவன். ஸ்கிரிப்டைப் பார்த்துவிட்டுப் பூரித்துப் போன ஜெமினி நிறுவனம், இதற்காக செல்வராகவனுக்கு ஒரு மிட்சுபிஸி லேன்சர் காரைப் பரிசாகத் தந்திருக்கிறது.


இப்போது தனுஷ் மேட்டருக்கு வருவோம்.

இந்தப் படத்துக்கு தனுஷ் கேட்கும் சம்பளத்தால் ஜெமினி பிலிம்ஸ் தவித்துக்கொண்டிருக்கிறதாம். தொடர்ந்து தோல்விகளையே கொடுத்து வரும் தனுஷ் இந்தப் படத்துக்கு ரூ.3.5 கோடி சம்பளம் கேட்க, அதை ரூ.2 கோடியாகக் குறைத்தது தயாரிப்பாளர் தரப்பு.

சரி என்று ஒப்புக்கொண்டார் தனுஷ். ஆனால், அவரது மார்க்கெட் சொல்லிக்கொள்ளும்படி இல்லாததாலும், படத்தின் ரிசல்ட் விஷயத்தில் எந்த உத்தரவாதமும் இல்லாததாலும் சம்பளத்தைக் கொஞ்சம் குறைக்கச் சொன்னார்களாம்.

ஆனால், 'தேவதையைக் கண்டேன்' படம் நல்லாத்தானே போகுது. இதனால் என் மார்க்கெட்டில் எந்த சரிவும் இல்லை என்று கூறிவிட்ட தனுஷ் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள மறுத்துவிட்டாராம்.

இதனால், படப்பிடிப்பு இன்னும் தொடங்கவில்லை. தொடர்ந்து சம்பள விவகாரம் குறித்து கட்ட பஞ்சாயத்து லெவலுக்குப் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது.



சுக்ரன்
ரம்பா

# ரஜினி படத்தில் தனுஷ்

இன்னொரு சேதி தெரியுமா? மருமகன் தனுஷுக்கு ராஜா அண்ணாமலைபுரத்தில் புது பங்களா ஒன்றை திருமணப் பரிசாக வாங்கிக் கொடுத்துள்ளார் ரஜினி. ஆனால், தனுஷோ ஆழ்வார்ப் பேட்டையில் ரூ.6 கோடி பட்ஜெட்டில் ஒரு பங்களா கட்டி வருகிறார். அதில்தான் ஐஸ்வர்யாவுடன் குடியேறப் போகிறாராம்.

இதற்கிடையே 'சந்திரமுகி'யைத் தொடர்ந்து ஜெயம் ரவியின் அப்பா எடிட்டர் மோகன் தயாரிக்கும் ஒரு படத்தில் நடிக்கவுள்ள ரஜினி, அதில் வரும் இரண்டாவது கதாநாயகன் கேரக்டரில் தனுஷை நடிக்க வைக்கலாமா என்று யோசித்து வருவதாய் சொல்கிறார்கள்.

வெல்லப் போவது தனுஷா? ரவியா?

# மூசுப்பில் விஜய்

பட்டம் சுக்ரன்

'காதல்' படம் வெளிவந்ததில் அதில் நடித்தவர்களை எல்லாம் இரசிகர்கள் மறக்க முடியாமல் திரிகிறார்கள். எங்கு போனாலும் அவர்களுக்கு மரியாதைதான். 'காதல்' படத்தில் ஸ்டீபனாக வந்த காமெடி நடிகர் சுகுமாருக்கு ஏகப்பட்ட மரியாதைதான்.

சென்னை தசரதபுரத்தில் குடியிருக்கும் சுகுமார் சாலகிராமம் பகுதியில் வாடகைக்கு வீடு தேடி தனது டூவீலரில் போய்க்கொண்டிருந்தார். கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் அவரை அடையாளம் கண்டு சூழ்ந்துவிட்டார்கள். ஒரு அரை மணி நேரம் படம் பற்றியே அந்த இளைஞர்கள் சிலாகிக்க "ஐயா நான் அவசரமாக வீடு பார்க்கப் போகணும்" என சுகுமார் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான். அந்த இளைஞர்கள் எல்லாம் ஆளுக்கொரு டூவீலரை எடுத்துக்கொண்டு நாலாபுறமும் பறந்துவிட்டார்கள் சுகுமாருக்காக வீடு தேடி. இதேபோல் திருவல்லிக்கேணியில் ஒரு மேன்சன் இளைஞர்கள் "இப்பவெல்லாம் மேன்சன் பசங்களுக்கு சமூகத்தில் ரொம்ப மரியாதை ஆகிப் போச்சுங்க" என ஸ்டீபனைக் கூப்பிட்டுப் பாராட்டி விருந்து வைத்திருக்கிறார்கள்.



நானும் அப்பாவும் - விஜய்

சி
னி
வி
சி
ட்



# 'மனிதனில்லாத மனிதன் கதை' டைரக்டராகிறார் கரிகாலன்

'**வை**ரவன்' என்கிற படத்தை கதை, திரைக்கதை, வசனம் எழுதி, கதாநாயகனாக நடித்து, இயக்கி வருகிறார் கரிகாலன்.

படம் பற்றி அவரிடம் கேட்டோம் :


"மனிதனே இல்லாத ஒரு மனிதனின் கதை" என அதிர்ச்சியாக ஆரம்பித்தார்.

"சோலையம்மா" படத்தில் வைரவன் என்கிற ஒரு முரட்டு மனிதனின் கேரக்டரில் கஸ்தூரிராஜா என்னை அறிமுகப்படுத்தினார். அந்த வைரவன் கேரக்டரைப் பற்றிய இன்னும் முழுமையான வடிவம்தான் இந்த 'வைரவன்' படம்.

'சோலையம்மா'வில் கிராமத்தில் இருந்த வைரவன் சிட்டிக்குள் வந்தால்...என்ன விளைவுகள் ஏற்படும் என்பதுதான் 'வைரவன்' படம். கரடுமுரடான இந்தக் கேரக்டரை மட்டும் காட்டாமல், வைரவன் ஏன் இப்படி ஆனான் என்பதற்கான காரண காரியங்களும் இதில் ஆராயப்பட்டிருக்கின்றன. வைரவன் யோகா, சாகஸம் தெரிந்தவன். அவனுடைய சக்தி அணு மாதிரி. ஆனால், அதை அழிவுக்குப் பயன்படுத்துகிறான். ஏன் அப்படிச் செய்கிறான் என்று தெரியவரும் போது நிச்சயம் வைரவன் மீது உங்களுக்கு அனுதாபம் பிறக்கும் என்கிறார். முதல் முயற்சி வெற்றி பெறட்டும்.

---

**போ**ண்டா மணியைப் பார்த்தாலே சிரிப்பு வரும். சுமார் அறுபது படங்களில் கவுண்டமணி, செந்தில், வடிவேலு, விவேக் ஆகியோருடன் சேர்ந்து நடித்திருக்கிறார். அவருடைய உண்மையான பெயர் கோதீஸ்வரன். ஆனால், கவுண்டமணி மேல் உள்ள பிரியத்தால் மணி என்றும், தனக்கு விருப்பமான உணவான போண்டாவையும் சேர்த்து போண்டா மணி ஆகியிருக்கிறார். இதென்ன கொடுமையா இருக்கு?



"போண்டா போய் விருப்ப உணவா என்ன?"

"நான் வாய்ப்புத் தேடி வந்து கஷ்டப்பட்டு இருந்த காலத்துல சாப்பிட காசில்லண்ணே.....என்னோட தினசரி உணவே ரெண்டே ரெண்டு போண்டாதான். போண்டாவைத் தின்னுட்டு தண்ணியக் குடிச்சிட்டு ஷூட்டிங் வாய்ப்புத் தேடிப் போவேன். இன்னைக்கும் அந்த செண்டிமெண்ட் மறக்க முடியல. என்னதான் சாப்பிட்டாலும் ரெண்டு போண்டாவத் தின்னுட்டுத்தான் ஷூட்டிங் கிளம்புறேன். இதோ இப்பக் கூட போண்டா சாப்பிட்டுத்தான் வாரேன். நீங்க ரெண்டு போண்டாவ உள்ளே தள்ளுறீங்களா" என்றார் போண்டா மணி.

"வேண்டாம்....வேண்டாம்" எனச் சொல்லிவிட்டு விட்டோம் ஜூட்.


---

சத்யராஜ் வில்லனாக நடித்தாலே ரொம்ப அலம்பலாக இருக்கும். இரசிகர்களும் விழுந்து விழுந்து இரசிப்பார்கள். 'தகடு தகடு' போன்ற புகழ் பெற்ற முத்திரை கிடைத்தது அவர் வில்லனாக நடித்தபோதுதான். '100ஆவது நாள்', '24 மணி நேரம்', போன்ற திகில் படங்களில் கலக்கிய சத்தியராஜ் நீண்ட இடைவெளிக்குப் பிறகு அதே பாணியில் ஒரு கிரைம் த்ரில்லரில் நடிக்கிறார். இந்தப் படத்திற்கு முதலில் 'மாறு வேஷம்' எனப் பெயர் சூட்டியிருந்தார்கள். அதன் பிறகு '6.2' எனப் புதுமையான டைட்டில் வைத்திருக்கிறார்கள்.

"இதென்ன டைட்டில்" என புதுமுக டைரக்டர் வி.செந்தில் குமாரிடம் கேட்டோம்.

"சத்யராஜ் சாரோட உயரம் ஆறு அடி ரெண்டு அங்குலம். அதையே டைட்டிலாக்கி இருக்கிறோம்" என்றார்.

படத்தில் சத்யராஜுக்கு ஜோடியாக சுனிதா வர்மா என்கிற சூப்பர் ஃபிகரை இறக்குமதி செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதோடு பழைய ஹீரோ ரவீந்தர் இந்தப் படத்தில் வில்லனாக நடிக்கிறார்.



அது ஒரு கனாக்காலம்
தனுஷ் - பிரியாமணி

# ஏக சந்தோசத்தில் அஜித்

'**ஜி**' படத்தில் இடம்பெற்றுள்ள அரசியல் கருத்துக்கள் எனது கருத்துக்களல்ல. அது இயக்குநர் கதைக்காகச் சேர்த்த வசனங்கள்தான் என்கிறார் அஜித்.

அஜித் நடித்து சமீபத்தில் வெளியான 'ஜி' படம் முழுக்க ஒரே அரசியல் வாடை. வேட்டி, சட்டையைப் போட்டுக்கொண்டு அரசியல் பக்கம் வந்துவிடுவாரோ என்ற அளவுக்கு படத்தில் அதிகமாக ரொம்ப தூக்கலாக இருக்கிறது அரசியல்.

அதே நேரத்தில் படத்தின் ஓப்பனிங் மிக நன்றாக இருப்பதாகத் தமிழகம் முழுவதும் இருந்தும் விநியோகஸ்தர்கள் அஜித்தின் வயிற்றில் பாலை வார்த்துள்ளனர். வசூலில் குறை வைக்கவில்லை, கூட்டம் அலைமோதுவதைப் பார்த்தால் ஈசியாக 50 நாட்களைத் தாண்டும் என்கின்றன கணிப்புகள்.

இந்த நிலையில் மிக மகிழ்ச்சியாக நிருபர்களைச் சந்தித்தார் அஜித்.

அவர் பேசியதிலிருந்து, "'ஜி' படம் நன்றாக ஓடுகிறது. பேசப்படுகிறது. இது மிகுந்த சந்தோஷம் தருகிறது. இதில் நான் அரசியல் பேசியதா சொல்கிறார்கள். நானா பேசினேன். படத்தில் வரும் அரசியல் தொடர்பான வசனங்கள் எனது சொந்தக் கருத்தல்ல.

படத்தின் இயக்குநரின் கருத்து. படத்தின் வில்லன் ஒரு அரசியல்வாதி. ஆக கதைக்காக வசனங்களை வைத்துத்தானே ஆக வேண்டும். இதை வைத்துக்கொண்டு எனக்கும் அரசியல் ஆசை வந்துவிட்டதாகச் சொல்கிறார்கள்.

படத்தில் நான் நடித்திருக்கிறேன். அவ்வளவுதான். என் தொழில் சினிமா. எனது இரசிகர்களை அரசியலுக்குக் கொண்டுபோக நான் நினைக்கவில்லை. சேவை மனப்பான்மைக்கு அவர்களை இட்டுச்செல்ல வேண்டும் என்பதே எனது விருப்பம்.

சுற்றுச்சூழல், மரம் நடுதல் என ஆரோக்கியமான பாதையில் அவர்களைக் கொண்டு சென்றுகொண்டிருக்கிறேன். இதற்கும் அரசியல் சாயம் பூசுகிறார்கள். என்ன செய்ய?

எனக்கு 38,000 இரசிகர் மன்றங்கள் உள்ளன. அவற்றின் மூலம் வருடத்துக்கு 38,000 மரங்களை வளர்த்தாலே போதும், எனது குறிக்கோள் நிறைவேறிவிடும்.

இரசிகர்களுக்கு எனது வேண்டுகோள் இதுதான். முதலில் குடும்பம், அதன் பிறகுதான் மன்றம். என்னுடன் தனிப்பட்ட முறையில் புகைப்படம் எடுத்துக்கொள்வதற்காக ஒவ்வொரு இரசிகரும், ஆயிரக்கணக்கான ரூபாயைச் செலவழித்துக்கொண்டு சென்னை வருகிறார்கள். அதை நான் விரும்பவில்லை. இது தேவையா?

அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்த காசு இப்படி வீணாகக் கூடாது. எனவேதான் நானே மாவட்டம் தோறும் சென்று அவர்களது ஆசையை நிறைவேற்ற ஆரம்பித்துள்ளேன்.

இதுவரை 4 மாவட்டங்களுக்குச் சென்றுவிட்டேன்.

நானே திருமண மண்டபத்தைப் பிடித்து, அதற்குரிய வாடகையைக் கொடுத்து காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை இரசிகர்களைச் சந்திக்கிறேன். அவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொள்கிறேன். அப்போதும் மரம் வளர்ப்பது பத்திதான் பேசுகிறேன். இதில் உள்நோக்கம், சைடு நோக்கம் எல்லாம் இல்லை.

நான் எதைச் செய்தாலும் சிலர் அதற்கு உள்நோக்கம் கற்பிக்க முயல்கிறார்கள். அதேசமயம் சிலர் நான் எதைச் செய்தாலும் ஆதரிக்கிறார்கள். ரெண்டுமே தப்பு" என்று சொல்லி அட்டகாசமாய் சிரித்தார் அஜித்.

"மேலும் படத்தில் சிகரெட் குடிப்பது மாதிரி நடிக்க ரொம்ப வருத்தமா இருக்கு என்கிறார் அஜித். "இரசிகர்களும் அதையே பாலோ பண்ணுவாங்களோனு தோணுது. முடிஞ்சவரை அந்த மாதிரி சீன்களை தவிர்க்கப்போறேன்" என்றார்.

நைஸ் மேன்.

இப்போதெல்லாம் படத்தில் நடிப்பதோடு சின்னச் சின்ன விஷயங்களிலும் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறார் அஜித். கதை கேட்பது, பாடல்களுக்கான டியூன் செலக்ஷன், உடைகள் தேர்வு, சக நடிகர்கள் தேர்வு என அனைத்திலும் இயக்குநர்களுடன் உட்கார்ந்து பேசி முடிவுக்கு வருகிறார் என்கிறார்கள்.

அப்படி அஜித் சிரத்தை எடுத்துச் செய்த படங்களில் ஒன்றுதான் 'ஜி'. அதன் ரிசல்ட் நன்றாகவே வந்திருப்பதால் அஜித்துக்கு ஏக சந்தோஷம்.

அடுத்து கே.எஸ்.ரவிக்குமாரின் 'காட் பாதர்'ல் பிஸியாகிவிட்ட அஜித், ஆசினுடன் குஜாலாக ஆடிப் பாடிக்கொண்டிருக்கிறார். இந்தப் படத்தை அஜித்தின் ஆஸ்தான புரொடியூசரான நிக் ஆர்ட்ஸ் சக்கரவர்த்திதான் தயாரிக்கிறார். இவர் அஜித்தின் பினாமி என்று கோடம்பாக்கத்தில் சின்னக் குழந்தையும் சொல்வது உங்களுக்கும் தெரிந்திருக்குமே.

இந்தப் படத்துக்கு அடுத்ததாக செல்வராகவன் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கப் போகிறார் அஜித்.

---

நடிகை கோபிகா தமிழ், மலையாளம், தெலுங்கு என இருக்கிற மொழிகளில் எல்லாம் பிஸி. அதிலும் மலையாளத்தில் இவர் நடித்த 'வேஷம்' சமீபத்தில் ஹிட். அந்தச் சந்தோசத்தில் இன்னும் ஒரு சுற்றுப் பெருத்திருந்தார். அழகு கூடிப் போய் இருந்தது. 'கனாக்கண்டேன்' படப்பிடிப்பில் அவரைப் பார்த்துவிட்டு அந்தக் கேள்வியைக் கேட்டோம் :

"உங்கள் தங்கை உங்களுக்குப் போட்டியாக நடிக்க வருகிறாராமே?"

"எல்லோரும் அப்படித்தான் சொல்கிறார்கள். அவளைத் தேடி நிறைய வாய்ப்புக்கள் வந்தது உண்மை. அவள் என்னிடம் நடிக்க ஆசைப்படுவதாகச் சொல்லவில்லை. வெறும் வெட்கம் மட்டும்தான் பட்டாள்" என்றார் கோபிகா.

வெட்கப்பட்டால் ஒருவேளை வில்லங்கமாக இருந்திடப்போகிறது. போட்டியாக வந்துவிடப் போகிறார்.

---

**டை**ரக்டர் கே.எஸ்.ரவிக்குமார் முதன் முதலாக விளம்பரப் பட உலகில் நுழைந்தார். அதற்காக சென்னை புறநகரில் கடலோரம் செட் போடப்பட்டிருந்தது. ஆனால், சுனாமியில் அந்த செட் காணாமல் போய்விட்டது.

இதே போல் இன்னொரு சுனாமி சீன். நடிகர் பாலா நடிக்கும் 'கலிங்கா' படம் சென்னை காசிமேடு பகுதியில் கடற்கரையோரம் நடந்தது. நாயகி நந்தனா கால்ஷீட் முடிந்ததால் படப்பிடிப்பு பாதியிலேயே நின்றது. மறுபடியும் நந்தனா கால்ஷீட் கிடைத்து அந்த லொகேஷனுக்குப் போனால் சுனாமி அந்த லொகேஷனையே முழுங்கிவிட்டது. இப்போது நீலாங்கரை பகுதியில் அதே போல ஒரு லோகேஷனைத் தேர்ந்தெடுத்து படப்பிடிப்பு நடத்தி வருகிறார்கள்.

இன்னும் கூட ஒரு சுனாமி சீன். சுந்தர் .சி. இயக்கத்தில் முழுக்க அந்தமானில் எடுப்பதாக இருந்தது. சுனாமியில் அந்தமானே அழிந்துபோனமானாக ஆகிவிட்டதால் இராமேஸ்வரத்தில் படப்பிடிப்பு நடத்திவருகிறார்கள்.



பதவி படுத்தும்பாடு
அனாமிகா - ரஞ்சித்




## மழையில் நிலம்

வான தேவதை
பூமிக் காதலனுக்கு
மடல் வரைகிறாள்
மழை வரிகளில்

பருவம் வந்தால்
இப்படித்தான்
எதற்குமே
எல்லையென்பது
இல்லாது போய்விடும்

மேக முந்தானைக்குள்
பூமி முழுவதையும்
அள்ளி
அணைத்துக்கொண்டாள்

இணைதலின்
அடையாளங்களாய்
இதோ பிரபஞ்சமெங்கும்
இடிச் சங்கீதம்

பார்வைகளின்
உரசல்களாய்
மின்னலின் முனகல்
சப்தங்கள்.

இது கூடல்தான்
இங்கு ஊடலும் உண்டு.
வான்மகள் கொஞ்சம்
வைரம் கொண்டாள்.

வெள்ளமாய் கரைந்து
அடிக்கடி
பூமியை விழுங்கிடுவாள்.

*—மு.கீர்த்தியன், ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரி.*

## எரிக்காதே பாவம்

நீலவானின்
நிலவொளியோடு
நிசப்தமாகிப்போன
இராத்திரிகளில்
எட்ட நின்று
எட்டியுதைக்கும்
உன்
ஞாபகத் தழும்புகளுக்கு
மனச்சாட்சியே இல்லையா?

மழையால் பேசும்
வானம் கூட
மௌன விரதமிருக்க
என் கண்களிரண்டும்
கண்ணீரால்
பட்டிமன்றம்
நடாத்துகின்றன.

ஏகாந்த நிலையில்
எரிந்து கொண்டிருக்கும்
என் இதயத்திற்கு
உன்
ஞாபகங்களின் உரசல்
எரிவாயு
அளித்துச் செல்கிறது.

*—முகம்மது ரியாஜத், மருதமுனை.*

## ஞாபகம் வருது

ஞாபகம் வருது
நேற்று நடந்ததெல்லாம்
முழுதும்பைப் பூவை
இடியப்பமாய் கோர்த்து
அதன் மீது
ஊமத்தங்காய் உள்ளீட்டை
சம்பலாய் இறைத்து தூவி
இடியப்பக் கடை வைத்த
வியாபாரமும்.

பலகையைத் துப்பாக்கி போல
வெட்டி
பிய்ந்த ரியூப் துண்டை வரிந்து
கட்டி
அலரிக்காயை ரியூப்பில் வைத்து
இழுத்தடித்து
கள்ளன் பொலிஸாய்
மோதிய வீர தீர விளையாட்டும்....

பள்ளிச் சீருடையில் பாடசாலை
சென்று
பக்கத்துப் பிரப்பம் பற்றைக்குள்
புத்தகப் பையைப் பதுக்கி வைத்து
தோணாவில் இறால் பிடித்து
தோப்பில் சுட்டுத் தின்றுவிட்டு
பள்ளிவிட்டதும் வீடுசென்ற
நடிப்பும்.

சாம்பலை நீரில் கரைத்து
உடைந்த ஓட்டுத் துண்டை
அடுப்பில் காட்டி வட்டவட்டமாய்
பலகாரம் சுட்ட வசந்தமும்...

விடுமுறை நாளன்று
வில்லுக்குளத்தில் தாமரைக்காய்
திருடி
கல்லடிக் காட்டில்
காணாமல் அவித்துத் தின்ற
தித்திப்பும்.

நாளை இதுபோல் நாள்
வருமா எனவும்
ஞாபகம் வருது.

*—பொ.விஜயமலர், சம்பூர்.*

## டொட் com

கம்பன் மகனாயிருந்தால்
காவியமாய்
வடித்திருப்பேன்,
பிக்காஸோ
மகனாயிருந்தால்
ஓவியமாய்
உயிர்ப்பித்திருப்பேன்.
நானோ
கணக்குப்பிள்ளைக்கு
மகனாய்ப் பிறந்து,
கண்மணி உனக்காய்
மணிக்கணக்காய்
காத்திருக்கிறேன்.

நீ தமயந்தியாயிருந்தால்
அன்னத்தைத்
தூதுவிட்டிருப்பேன்,
நீ சீதையாயிருந்தால்
அனுமனைத்
தூதுவிட்டிருப்பேன்.
நீயோ புதிய நூற்றாண்டின்
காவிய நாயகியாதலால்,
கண்மணி உனக்காக
மின்னஞ்சலைத்
தூதனுப்புகிறேன்.

*—ரேகா லெட்சுமணன், கொழும்பு.*

## என் நட்புக்கு....!

நியாயமானது உனது
கோபம்
எனக்கான நிர்ப்பந்தங்கள்
புரியாத காலம் வரை!

கருமேகச் சிறைக்குள்
சமாதியான நிலவாய்
சந்தேகச் சிறைக்குள்
நான்!

உனக்குத் தெரியுமா?
மரபுச் சமூகம்
மழிக்கப்படாத தாடியாய்
மண்ணில் இன்னும்
வாழ்வது!

"கதைக்க கற்பு அழியும்."
சமூகத்தின் வேதாந்தம்
யாரோ ஒருவனுக்கான
ஜால வித்தை

பழகிய உனக்குத் தடை
விதிப்பு!

முட்டி மோதி, முடிவு
தேட
முடியாதவளாக நான்!
உனக்கான ஒருத்தியும்
இவர்களின் விம்பம்
என்றால்?

*—ரஜித்தா சிவபாலன், வவுனியா.*

## உனக்கான கவிதைகள்

உயிர் பிழிந்து
வார்த்தை கோர்க்கிறேன்
உனக்கான கவிதைகள்
வரவே இல்லை.

உன் செல்ல...
சிணுங்கள்களை
சிருங்காரித்தும் பார்க்கிறேன்.
உனக்கான கவிதைகள்
வரவே இல்லை.

ப்ரியமானவளே!
உன் உள்ளிடை
உயரங்களை
வசந்த வார்த்தையில்
உரசிப் பார்க்கிறேன்
அப்போதும் கூட....
உனக்கான கவிதைகள்
வரவே இல்லை.

வாவென்று
அழைத்த போதெல்லாம்
வராத கவிதைகள்
நீ என்னை போ
என்றவுடன்
மட்டும் ஏன்....?
இப்படி பிய்த்துக்கொண்டு
வருகிறது....!

*—சிவனு மனோஹரன், ஹட்டன்.*

## பதவியில்லாப் படிப்புக்காரன்

இராப்போதுகளில்
நத்தையாய்க் கூட
நகருவதில்லை
தூக்கம்
நடந்ததெல்லாம்
நடப்பில்
எடுக்க....!

பரீட்சை
நிலையத்தில்
சனி பகவான்
பேனையைப்
பிடித்ததால்...
என் தலைவிதி
மாறிவிட்டது.

என் பின்னால்
வாலாட்டிய
குரங்குகளெல்லாம்

எனக்கு வாலாட்டும்
பொழுது
செத்துச் செத்து மடியும்
பிழைப்பாகிவிட்டது
எனக்கு...!

பத்திரிகைகளில்
அவ்வப்போது
பிலிம் காட்டும் போட்டிப்
பரீட்சைக்கு
போட்டி போட்டுப்
படித்தால்....
அரைகுறைப்
படிப்பாளிகளின்
சுட்டெண்களெல்லாம்
தேர்வுக்குமுன்
இலட்சம் கட்டிப்
பறக்கும்
எம்பிக்களை நோக்கி...!

பதவி ஆசையை
எச்சில் விழுங்கும்
இந்த ஏழைக்கு
பேனா உழுத...
வழுக்கு மரக்
கைகளுக்குள்
ஏரைப் புடித்து
வைரமாக்குவதைத்
தவிர
வேறு வழியில்லை.

*—பொ.விஜயா, சம்பூர்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

"அரசியல் நெருக்கடி நிறைந்த சூழலில் இலக்கியம் எதைப் பேசுகிறது என்பதை வைத்து அதன் சமகாலப் பொருத்தப்பாடு முடிவு செய்யப்படுகிறது. பேரினவாதத்தின் பிடியில் சிக்குண்டு உலகெங்கும் சிதறி இருக்கும் ஈழத் தமிழினத்தின் குரலாக வரும் படைப்புகள் எதனை முதன்மைப்படுத்த வேண்டும்? பேரினவாதத்தின் அடக்கு முறைகளையா? தேசியம் பேசும் குழுக்களின் செயல்பாடுகள், அவற்றுக்குள் உள்ள வேறுபாடுகள் குறித்தா? பிறக்கப் போகும் நாளை நமக்கு எப்படி விடிய வேண்டுமென விரும்புகிறோம் என்பதையா? ...இவற்றை வரிசைப்படுத்த இயலாதென நான் அறிவேன்." என கவிஞர் ஔவையின் 'எல்லை கடத்தல்' நூலுக்கான முன்னுரையில் குறிப்பிடுகிறார் அமங்கை.

சகல விதமான அடக்கு முறைகள், அதிகார மேலாண்மை, மனித இழிவு, வாழும் உரிமை மறுப்பு...எல்லாவற்றையும் கண்டித்துக் குரலெழுப்ப வேண்டியது நேர்மையுள்ள படைப்பாளிகளின் கடமையாகிறது.

ஔவையின் 'எல்லை கடத்தல்' தொகுதியிலிருந்து மூன்று கவிதைகள்.



### வீடு திரும்பிய என் மகன்

இதயத்தை இரும்பாக்கி
மூளையைத் துவக்காக்கி
நண்பனை பகைவனாக்கி
என்னிடம் திரும்பினான்
இராணுவ வீரனாய் என் முன்
நின்றான்
என் மகன்.
ஊட்டி வளர்த்த அன்பும்
நேசமும்
ஆழப் புதைய
ஆடித்தான் போனேன்.

நண்பனைச் சுட்டுவிட்டு
வந்து
வீரம் பேசினான்
தியாகம் பற்றி
ஆயுதம் பற்றி
எல்லைப் புற மக்களைக்
கொல்வது பற்றி
நிறையவே பேசினான்.

இப்போது நான் மௌனமாக
இருந்தேன்
மனிதர்கள் பற்றி
விடுதலை பற்றி
மறந்தே போனான்.

இப்போது நான்
தாயாக இருத்தல் முடியாது
என்று தோன்றுகிறது.

'துரோகி' என்று
என்னையே புதைப்பானோ
ஒருநாள்?

### விஜிதரன் நினைவாக.....

இச்சையின்றிக் கைகள்
அசைந்து
கால்களை உதைத்து
வீரிட்டபடி நீ மலர்கையில்
உன்னைப் பற்றிய
அம்மாவின் கனவுகள்
எப்படி இருந்திருக்கும்...?

இன்று இப்படியாயிற்று!
இது எம் மண்;
இறுதியில் உன்னை
அவர்கள்
கொன்று விட்டனர்.
காரணம்...?
காரணம் கேட்டுக்
காணாமல் போக யார் தான்
தயார்?

வாழ்தலுக்கான
உரிமைகள் மறுக்கப்பட்டு
குருதியுறைந்த உடலுடன்
ஆழப் புதைந்தது
உனது உடல் மட்டுமல்ல
உனதும் எனதும்
எம்போன்ற பலரதும்
உணர்வுகளும் கூடத்தான்.

உனது கதவு தட்டப்பட்ட
அந்த இரவில்
மனித நேயமும்
நம்பிக்கைகளும் கூட
ஆழப் புதைந்தன.
நீ காணாமல் போனாய்.

மீண்டும் ஒரு இரவு
உயிர்ப்படங்கி சில்லிட்டது
பூமி
உனது வாய் உனது
கண்
மூடியது மண்.
இருள்!

மெல்லத் தயங்கியபடி
அசைகிறது உலகம்
மௌனமாய்
இருண்டு கிடக்கிறது
வானம்.

### தாயின் குரல்

கொலையுண்டு போன
என் புதல்வர்களின்
முற்றாப் பிஞ்சுடலின்
ஊனருந்தி
தன் கோரப் பசியாற்றி
தாகம் தீரச் செந்நீரும்
குடித்தபின்
இன்னுமா தாய் நிலம்
புதல்வர்களைக் கேட்கிறது?

போராட என்னை
அழைக்காதே
நானொரு தாய்
எனது புதல்வர்களையும்
கேட்காதே
இரக்கமற்ற 'தாய் நிலமே'
கொல்லப்பட்ட என்
புதல்வர்களின் இரத்தம்
இன்னமும் காயவில்லை

வாழ்வின் இனிமையை என்
புதல்வருக்குக் காட்டி
நாம் விட்ட குறையைத்
தொடரவென
நான் பெற்ற என் இனிய
குழந்தைகளை
ஒரு காலம்
வாசல் வரை வந்து
மக்களுக்காய்
வழியனுப்பி வைத்தேன்.

'பூஞ்சிறகு முளைத்த
சிட்டுக்குருவியாய் பறந்து
போன'
அவனுடன் நானும்
ஒன்றாய் நடந்திருந்தேன்....
மக்கள்; புரட்சி; விடுதலை
எல்லாம்
வாய்ச் சொல்லாக
சந்தியின் ஓரமும்
வாவிக்கரையும்

புதை குழியும் மணல் மேடும்
என் புதல்வர்களின்
சடலங்களால்
நிரம்பிய பிறகு....

துப்பாக்கி அரசர்கள்
சிம்மாசனம் ஏற
யுத்த வெறியில்
புதல்வர்கள் அலைந்தனர்?


இன்னுமா 'தாய் நிலம்'
புதல்வர்களைக் கேட்கிறது?

கடித்துக் குதறி
நெரித்தும் எரித்தும்
வடக்கிலும் தெற்கிலும்
உலகெங்கிலுமாக
எத்தனை குஞ்சுகளை விழுங்கி
விட்டாய்
இன்னும் அடங்காதோ உன்
பசி?


விண்ணேறி மண் தொட்டு
மீண்ட பின்னும்
சமாதானம் வேண்ட
யுத்தம் தேவையோ?
பற்றி எரிக ஆயுத கலாசாரம்!

என் மழலைகளை விடு!
நாளைய உலகம்
அவர்களுக்காய் மலரட்டும்!!

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : க. பிரபாகரன்.
வயது : 19
முகவரி : 51ஆம் கட்டை, வெருகல், ஈச்சிலம்பற்று.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை.



பெயர் : சீ. ரெனிசன்.
வயது : 19
முகவரி : 25, வலகா கொலனி, லிந்துலை.
பொழுதுபோக்கு : இயற்கையை ரசிப்பது, புத்தகம்.



பெயர் : க. ராதிகா.
வயது : 17
முகவரி : விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு : பேனா நட்பு, புத்தகம்.




பெயர் : கி. சாந்தன்.
வயது : 21
முகவரி : ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு : பத்திரிகை, ரி.வி. பேனா நட்பு.



# லேடிஸ் ஸ்பெஷல்

# முடி வளம் சிறக்க

முடி உதிர்ந்தால் முற்றிலுமாக வாழ்க்கையே அழிந்துவிட்டது போன்று மனத் தளர்ச்சியும் இறுக்கமும் மக்களிடையே - குறிப்பாகப் பெண்களிடையே நிலவுகிறது.



அதிலும் பலர் தங்களது சில தீவிரமான உடல் வியாதிகளுக்குக் கூட முக்கியத்துவம் கொடுக்காமல், தங்கள் முடி வளர்ச்சிக்கு மருத்துவம் பார்க்க வருவதை நடைமுறையில் பார்க்கிறோம்.

தலை முடி உதிர்ந்து சொட்டையாகவோ அல்லது இளவயதிலேயே நரை ஏற்பட்டாலோ அது வயதான தோற்றத்தை அளிப்பதாலேயே மக்கள் முடி வளர்ச்சிக்கு அதிக கவனம் செலுத்துகின்றனர். நமது உடலழகை உயர்த்திக் காட்டுவது இந்த அடர்த்தியான கருங்கூந்தல் தான்.

தலைமுடி வளர்ச்சிக்குச் சரியான முடி பராமரிப்பும், தலைப் பகுதியில் ஏற்படும் வியாதிகளுக்கு முறையான மருத்துவமும், நல்ல உடல் ஆரோக்கியமும் முக்கிய காரணங்களாகும்.

## முடி உதிர்தல்

நமது தலைமுடி வளர்ச்சியை 3 கட்டங்களாகப் பிரிக்கலாம். முதலாவது அனாஜன் பேஸ். அதாவது வளரும் நிலை. இதில் முடியானது இரண்டு முதல் ஆறு வருடங்கள் வரை வளரும். இரண்டாவதாக, கேட் டொஜன் பேஸ் - தங்கும் நிலை. மூன்றாவதாக டெலோஜன் பேஸ். அதாவது அடங்கும் நிலை. இந்த நிலை சுமார் மூன்று மாதங்கள் வரை இருக்கும்.

டெலோஜன் எல்லுவியன் என்ற உதிரும் நிலையிலுள்ள முடியானது புதிதாக வளரும் முடியினால் உந்தப்பட்டு விழுந்துவிடும். அதே இடத்தில் அந்தப் புதிய முடி வளர ஆரம்பிக்கும். சுமார் 85 முதல் 90 சதவீதம் முடி வளரும் நிலையிலும், சுமார் 10 சதவீதம் முடி உதிரும் நிலையிலும் இருக்கும். ஆகவே, தினம் 20 முதல் 30 முடி வரை உதிர்வது என்பது இயல்பானது.

இது எந்த விதத்திலும் முடியின் அடர்த்தியைப் பாதிக்காது. ஏனென்றால், சுமார் முப்பது முடி உதிரும் நிலையிலிருக்கும்போது முப்பது முடி வளரும் நிலையில் இருக்கும். ஆகவே முடிகளின் எண்ணிக்கை சமப்படும். ஆனால் ஏதாவது காரணங்களினால் முப்பது முடி வளரும் நிலையிலிருந்து, நூற்றுக் கணக்கில் உதிர்ந்தால் முடி அடர்த்தி குறைய ஆரம்பிக்கிறது.

## காரணம்

ஓயாத உழைப்பு, மன உளைச்சல், அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அதிகளவாக ஏற்படும் இரத்தப்போக்கு, இரும்புச்சத்துக் குறைதல் மற்றும் சில வகை மருந்துகள் உட்கொள்வது, தலைப் பகுதியில் ஏற்படும் சில நோய்கள், குறிப்பாக செதில்படை நோய், பொடுகு, எக்சிமா, ஷாம்பு அதிகம் பயன்படுத்துவது, ஹேர்டிரையர், கர்லர் உபயோகிப்பது ஆகியவற்றாலும் முடி உதிரும் வாய்ப்புகள் அதிகமாகிறது.

முடி அடர்த்தியாகவும் கறுப்பாகவும் இருப்பதற்கு முக்கிய காரணம் முடியின் வேர்ப் பகுதி வலுவாக இருப்பதுதான். ஆகவே, மருத்துவத்தின் முக்கிய குறிக்கோளே இந்த வேர்ப் பகுதியை உறுதிப்படுத்துவதான். நோயாளியின் உடல் நிலைக்கும் மன நிலைக்கும் தகுந்தவாறு உள் மருந்துகள் கொடுப்பதால், முடியின் வேர்ப் பகுதி நன்கு பலப்படுத்தப்படுகிறது. மேலும் தலைப் பகுதியில் ஏற்படும் செதில்படை நோய், எக்சிமா, பொடுகு போன்ற நோய்களை ஹோமியோபதி மருந்துகள் முற்றிலும் குணப்படுத்துவதால் முடி உதிர்வது தடுக்கப்பட்டு அடர்த்தியான கூந்தலுக்கு வழி வகுக்கிறது.

## புழுவெட்டு நோய்

அலோபிஸியா என்ற நிலைய்யைப் புழுவெட்டு நோய் என்று சொல்கிறோம். இதில் சிறிது சிறிதாக ஆங்காங்கே வட்டமாக முடி உதிர்ந்து வழுக்கையாகிவிடும். புழு வெட்டு நோய் என்பதால் புழுவுக்கும் இந்த நோய்க்கும் ஏதும் சம்பந்தம் இருப்பதாக நினைக்க வேண்டாம்.


இதற்குச் சரியான காரணம் கண்டுபிடிக்கப் படவில்லை. எண்டாக்ரின் மாறுபாடுகள், தலைப்பகுதி தொற்றுகளால் இது தூண்டப்படலாம். இது ஒரு ஆட்டோ இம்யூன் நோயாகவும் கருதப்படுகிறது.

புழுவெட்டு எந்த இடத்தில் வேண்டுமானாலும் தோன்றலாம் என்றாலும் தலையிலும், முகத்திலும் அதிகமாக ஏற்படுகிறது. வட்டமாகவோ, நீள் வட்டமாகவோ முடி உதிர்ந்து சொட்டையாகிவிடும். இது அலோபிஸியா ஆரட்டா எனப்படுகிறது. உடலிலுள்ள அத்தனை முடிகளும் உதிரும் நிலையை அலோபிஸியா போட்டாலிஸ் என்கிறோம்.

புழுவெட்டு நோயை மிக எளிமையாகவும் முற்றிலுமாகவும் குணப்படுத்த ஹோமியோபதி மருந்துகள் உதவுகின்றன. புழுவெட்டு நோய் என்பது அந்த நோயாளிக்கு ஏற்படுகின்ற ஒரு முடி உதிரும் பக்குவம். இந்தப் பக்குவத்தினை அடியோடு வேரறுத்தால்தான். இதனை முழுமையாகக் குணப்படுத்த முடியும். ஹோமியோபதி மருந்துகள் முற்றிலும் குணப்படுத்துவதால் முடி உதிர்வது தடுக்கப்பட்டு அடர்த்தியான கூந்தலுக்கு வழி வகுக்கிறது.

## பொடுகு

பொடுகு என்றாலே இது குணமே ஆகாதா? என்று மிகுந்த வேதனையோடும் சந்தேகத்தோடும் டாக்டரிடம் கேள்விகள் கேட்பது வாடிக்கையாகி விட்டது. அந்த அளவிற்கு இது ஒரு தீராத பிரச்சினையாக மக்களிடையே மிகுந்த அளவில் காணப்படும் தொல்லையாகும். இதில் செதில் செதிலாக, வெள்ளையாக தலைப் பகுதியில் உதிர்ந்துகொண்டே இருக்கும். அதிக அரிப்புக் காணப்படும். இதனால் நமது கண்ணுக்குத் தெரியாமல் அவ்வப்போது உதிர்ந்து தானாகவே



புதுப்பித்துக்கொள்ளும் தன்மை வாய்ந்தவை. இந்தப் பரிமாற்ற நிகழ்ச்சி வேகப்படுத்தப்பட்டு திசுக்கள் அழியும்போது செதில் போன்று உதிர்கிறது. தலையில் சீபம் என்ற எண்ணெய்ப் பசை அதிகமாகச் சுரப்பதாலும் தலைப் பகுதியில் அதிகம் அழுக்கு சேர்வதாலும் பொடுகுப் பிரச்சினை ஏற்படுகிறது. இதற்கு ஷாம்பு அடிக்கடி உபயோகப்படுத்தும்போது மயிர்க்கால் பாதிக்கப்பட்டு பிற்காலத்தில் முடி உதிர்வது மிகவும் அதிகமாகிவிடும்.

ஹோமியோபதி உள் மருந்துகள் பொடுகு ஏற்படுவதைத் தடுப்பதோடு, சீபம் அதிகமாகச் சுரப்பதையும் கட்டுப்படுத்தி, பொடுகினைக் குணப்படுத்துவதோடு முடி வளர்ச்சியினையும் தூண்டுகிறது.

## இளநரை

தலைமுடியின் நிறம், மெலனின் என்ற நிறமி அணுக்களின் அளவைப் பொறுத்தது. சிலருக்கு செம்பட்டையாகவும், மிதமான கறுப்பாகவும், அடர்த்தியான கறுப்பாகவும் இருக்கக் காரணம், இந்த நிறமிகள் வேர்ப் பகுதியில் குறைவாக உற்பத்தி செய்யப்படுவதுதான். இது வயது ஆக ஆக இயல்பாக ஏற்படக்கூடிய ஒரு மாற்றம். பாரம்பரியமானது.

இது சாதாரணமாக 35 வயது முதல் 40 வயதிற்குள் தோன்றக்கூடும். ஆனால் சிலருக்கு இள வயதில் சுமார் 20 முதல் 40 வயதிற்குள் தோன்றக்கூடும். ஆனால் சிலருக்கு சுமார் 20 வயதிற்குள்ளாகவே நரை தோன்றும்போது, இதனை இளநரை என்கிறோம். இது சத்துக் குறைவினாலும் உடல் சோர்வாலும் தூண்டப்படலாம்.

ஹோமியோபதி மருந்துகள் இள நரையைத் தடுப்பதற்கு மிகவும் துணை புரிகின்றன. இவை நோய்



எதிர்ப்புச் சக்தியை வளர்க்கும் திறன் கொண்டதால் இளநரைக்கான பக்குவத்தினை மாற்றி நல்ல ஆரோக்கியமான முடி வளர்ச்சிக்கு ஏதுவாகிறது.

## முடி பராமரிப்பு


உங்களது முடியின் தன்மைக்குத் தகுந்தவாறு எண்ணெய் உபயோகிப்பது நல்லது. எண்ணெயை விரல் நுனிகளில் எடுத்துக்கொண்டு, மயிர்க் கால்களில் படுமாறு மசாஜ் செய்ய வேண்டும்.

அடிக்கடி தலை சீவுவது நல்லது. கூரான பற்களைக் கொண்டிருக்கக் கூடாது. ஷாம்பு அதிகம் உபயோகிக்கக் கூடாது. சீயக்காய் மிகவும் நல்லது. ஹோமியோபதி மருத்துவத்தில் குறிப்பிட்ட வியாதிக்கு மருத்துவம் என்ற நிலை கிடையாது. நோயுள்ள மனிதனின் உடல் நிலை மாற்றங்கள் மற்றும் மன நிலை இவற்றை முழுமையாக ஆராய்ந்து மருந்துகள் கொடுக்கப்படும்போது அந்த நோயுற்ற மனிதனின் நோய்கள் குணமாவதோடு மட்டுமல்லாமல், மன நிலையும் சமப்பட்டு ஒரு ஆரோக்கியமான மனிதனாக உருவாவதற்குப் பயன்படுகின்றன. ஆகவே, நல்ல அடர்த்தியான முடி வளர்ச்சிக்கும், வளமான உடல் நலத்திற்கும் ஹோமியோபதி மருந்துகள் ஒரு வரப்பிரசாத மாகும்.

# செயற்கைப் பற்களைப் பாதுகாக்கும் முறைகள்

பல்லாண்டு ஆராய்ச்சிகளுக்குப் பிறகு உருவாக்கப்பட்ட கூட்டுப் பொருட்களைப் பயன்படுத்தி விஞ்ஞான முறையில் தற்காலத்தில் செயற்கைப் பற்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை அழகையும் நன்றாகப் பேசுவதற்கான திறனையும் தருகின்றன. சுவையான உணவை நன்றாக மென்று தின்னவும் உதவுகின்றன.

மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டிருந் தாலும், முதன்முறையாக வாயில் பொருத்தும்போது அது ஓர் அந்நியப் பொருள்தான். வாயில் சரியாகப் பொருந்தி, பழக்கமாவதற்குச் சில காலம் ஆகும்.



இதைப் பழகும் காலம் என்பார்கள். இப் பற்களைப் பொருத்திக்கொண்ட சிலர் மிக விரைவில் அதைச் சுலபமாக கையாளத் தெரிந்துகொள்வார்கள். மிகச் சிலருக்குக் கொஞ்ச நாட்களாகலாம்.

புதிதாகச் செயற்கைப் பற்களைப் பொருத்திக்கொள்வோர் அதைக் கையாள்வதற்கான வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

01. முதன்முறையாகச் செயற்கைப் பற்கள் பொருத்திய பிறகு சிறிதளவு வலியும் இலேசான சிராய்ப்புக் காயங்களும் ஏற்படுவது இயல்பு. இதனால் செயற்கைப் பற்கள் தரமற்றவை என எண்ணிவிடக் கூடாது. வலியும் காயமும் நீடித்தால் பல் மருத்துவரை அணுகலாம்.

02. தொடக்கத்தில் நாக்கும் உதடுகளும் வாயிலுள்ள அந்நியப் பொருளான செயற்கைப் பற்களை வெளியேற்ற முனையும். தொடர்ச்சியான பயிற்சி மற்றும் பழக்கத்தின் மூலம் இவ்வுறுப்புகள் செயற்கைப் பற்களோடு உறவாகிச் சிறப்பாகப் பொருந்தச் செய்யலாம்.

03. செயற்கைப் பற்களைப் பொருத்திக்கொண்டு பிறருடன் முதன்முதலாகப் பேசும்போது சிரமமாக இருக்கலாம். ஆகவே, தனிமையாக இருக்கும்போது உரக்கப் பேசிப் பார்ப்பது, படிப்பது ஆகியவை நல்லது. இது நன்றாகப் பேசுவதற்குப் பயிற்சியாக அமையும்.

04. செயற்கைப் பற்கள் வாயுடன் இயல்பாகப் பொருந்துவதற்கு வசதியாக சுமார் ஒரு மாதம் வரை இரவில் கூட அதை அணியலாம். பழகிய பிறகு அதைக் கழற்றிவிடலாம்.

05. தொடக்கத்தில் மென்மையான உணவையே உண்ண வேண்டும். பற்களில் ஒட்டக்கூடிய உணவுப் பொருட்களைத் தவிர்த்து, எளிதில் விழுங்கக்கூடிய உணவை உண்ண வேண்டும்.



06. முன் பற்களால் உணவைக் கடித்து மெல்லும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில், செயற்கைப் பற்கள் இடம் மாறி, அதன் பிடிப்பை இழக்கக்கூடும். செயற்கைப் பற்கள் இடம் மாறுவதைத் தவிர்த்து சமநிலையைத் தக்கவைப்பதற்கு, இரண்டு பக்கங்களிலும் உள்ள கடைவாய்ப் பற்களால் மென்று சாப்பிட வேண்டும்.

07. ஆரம்பத்தில் உணவு உண்பதில் சிறிது சிரமம் இருந்தாலும், செயற்கைப் பற்களை அணிந்தபடி உணவு உண்ணப் பழகாவிட்டால் செயற்கைப் பற்களை அணிந்ததற்கான நோக்கம் நிறைவேறாமல் போய்விடக்கூடும்.

## செயற்கைப் பற்கள் பாதுகாப்பு

1. மென்மையான டிடர்ஜென்ட் சோப்பைப் பயன்படுத்தி மிருதுவான இழைகளைக் கொண்ட பல் துலக்கியால் பற்களைச் சுத்தம் செய்ய வேண்டும்.

2. பயன்படுத்தாத நேரங்களில் செயற்கைப் பற்களைக் குளிர்ந்த நீரில் போட்டு வைத்திருக்க வேண்டும்.

3. வெந்நீர், ஆல்கஹால் அல்லது அமிலங்களைப் பயன்படுத்திச் செயற்கைப் பற்களைச் சுத்தம் செய்யக் கூடாது.

4. பற்களில் கறையை உண்டாக்கும் வெற்றிலை, பாக்கு, பான் போன்ற பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது.



5. ஒவ்வொரு வேளை உணவுக்குப் பிறகும் செயற்கைப் பற்களைக் கழற்றிச் சுத்தம் செய்ய வேண்டும்.





6. இது பற்றிய மேலும் சந்தேகம் ஏற்பட்டால் பல் மருத்துவரை அணுகி விளக்கம் பெறலாம்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

## ஜுஜுப்ஸ்

*70 துண்டுகள் 1/2" x 1/2"*

**தேவையான பொருட்கள் :-**

சீனி - 1/4 கிலோ கிராம்
ஜெலற்றீன் - 3 மே.க. (மட்டமாக) / 20 கிராம்
சித்திரிக்கமிலம் - 1/2 தே.க.
வெந்நீர் - 10 மே.க.
தண்ணீர் - 10 மே.க. / 1/2 தம்ளர்
கலரிங் - 1 தே.க.
பெரிய சீனி - 4 மே.க.
மாஜரின் - 1 தே.க. (தட்டுக்குப் பூசுவதற்கு)

**செய்முறை :-**

ஜெலற்றீனைத் தம்ளரில் எடுத்து அதனுள் 10 மே.க. நன்கு கொதித்த நீரை விட்டு, இத் தம்ளரைப் பிறிதொரு வெந் நீருள்ள பாத்திரத்தில் அமிழ்த்தி வைத்துக்கொண்டு, ஜெலற்றீன் முற்றாகக் கரையும் வரை நன்கு கரைத்து அப்படியே வெந்நீருள்ள பாத்திரத்துள்ளேயே வைத்துக் கொள்க.

தாச்சியில் சீனியையிட்டு 10 மே.க. தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சுக. பாகு காய்ச்சும்போது சீனி முழுவதும் கரைந்து வெளு வெளுப்பான நுரைப் பதம் தோன்றி மறைந்து பாகு கொதிக்கும் பதத்தை அடைந்ததும், ஒரு குளிர் நீர் கொண்ட பாத்திரத்தில் சிறிதளவை விட்டுப் பார்க்கும்போது, நீரில் கரையாமல் தண்ணீரில் பாகு தெரியும் பதத்தை அடைந்ததும் (தொட்டுப் பார்க்கும்போது கையில் பசை போல ஒட்டும்) தாச்சியை உடனேயே அடுப்பிலிருந்து இறக்கி கரைத்து வைத்துள்ள ஜெலற்றீன், கலரிங், சித்திரிக்கமிலம் என்பவற்றைச் சேர்த்து நன்கு கலக்கிக் கொள்க.

பின்பு மாஜரின் பூசிய ஒரு சதுர வடிவான தட்டில் இக் கலவையை ஊற்றி 12 மணி நேரம் வைத்துக்கொண்ட பின் 1/2" x 1/2" அளவான துண்டுகளாக ஒரு கூரான கத்தியால் கீறிக்கொண்டு ஒரு மாஜரின் பூசிய கரண்டியால் ஒவ்வொரு துண்டாகத் தூக்கியெடுத்துப் பெரிய சீனியில் புரட்டியெடுத்துப் பரிமாறலாம்.

இவ்வளவுக்கும் நடுவே, அழகிய ஆலிஸன் முகமெல்லாம் சிதைந்தவளாகக் கிடந்தாள். அடையாளம் தெரியாத அளவுக்குக் கோரம். ஒரு வெள்ளைத் துணி அவள் சுருள் முடியை மூடியிருந்தது. அடுத்த சில நிமிடங்களில் அந்த முடியை நீக்கி மொட்டை அடித்து விடுவார்கள்...

ஆலிஸனை அடையாளம் தெரிந்து கொள்வது மற்றவர்களுக்கு வேண்டுமானால் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் பெற்ற தாயாருக்குத் தன் குழந்தையைத் தெரியாமலா போகும்? அவள் கண்களுக்குத் தெரியாவிட்டாலும் அவள் இதயத்துக்குத் தெரியும்.

என்பதை அருகிலிருந்து பார்க்க அவள் தவித்தாள். ஆனால் முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

ஆலிஸனின் தலையை மழிப்பது உள்படப் பல வேலைகள் இருக்கின்றன என்றும் அதையெல்லாம் பார்க்க அவளுக்குக் கஷ்டமாக இருக்கும் என்றும் சொன்னார்கள்.

"நான்.. நான்.. எனக்கு...." அவளால் சொல்ல முடியவில்லை. திணறினாள். இறுதியில் நர்ஸிடம் கேட்டாள் "...வந்து.. என் பெண்ணின் தலையை மழித்ததும் கொஞ்சம் முடியை எடுத்து வைத்திருந்து எனக்குத் தர முடியுமா?"

மகளின் முடியைக் கொஞ்சம் தர

**சென்ற வாரம்**

**தாரென்ஸன் சொன்னபடி கேட்டு அவள் ஆபரேஷனுக்கு அனுமதி அளிக்கிறாள். அதற்கு முன் தன் பெண்ணிடம் சென்று சற்று நேரம் தன் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருக்கிறாள். அவள் பேசியது ஆலிஸனுக்குக் கேட்காது என்று தெரிந்தும் தொடர்ந்தும் கதைத்துக்கொண்டிருக்கிறாள்.**

# ஒரு தாய் மகள்

21

மெதுவாக நடந்து மகளின் அருகே சென்றாள். மௌனமாக நின்றாள்.

ஆலிஸனின் காதுக்குப் பக்கமாக குனிந்து "கண்ணம்மா..." என்று மென்மையாக அழைத்தாள். தான் கூப்பிடுவது மகளின் உடம்புக்குள் தொலை தூரத்தில் எங்கோ இருக்கும் ஏதோ ஓர் உறுப்புக்குக் கேட்கும், கேட்க வேண்டும் என்று அவள் உள்ளம் பிரார்த்தனை செய்தது. "பேபி, ஐ லவ் யூ. என் கண்ணே! எல்லாம் நல்லபடியாகுமடி, கண்ணம்மா. ஆலி, ஐ. லவ் யூ. நான் மட்டுமில்லை. நாங்கள் எல்லாருமே உன் மீது உயிரை வைத்திருக்கிறோம் அம்மா."

இந்த வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு, அழுதவாறே மகளின் கையையும்

வேண்டும் என்ற பேஜின் கோரிக்கையைக் கேட்டு அந்த நர்ஸ் திகைத்தபோதிலும் அந்தத் தாயின் தாபம் அவளுக்குப் புரிந்தது.

"நிச்சயமாய்க் கொஞ்சம் எடுத்து வைக்கிறோம்" என்று உறுதியளித்தாள். அதன் பின்னரும் ஆலிஸனைப் பிரிந்து செல்லப் பேஜினால் முடியவில்லை. மறுபடியும் மறுபடியும் மகளின் காதருகே குனிந்து, "ஆலி.... என்... கண்ணம்மா... உன் மீது எப்பவும் பிரியமடி, கண்ணே.. எப்பவும்... எப்பவும்.." என்றாள்.

ஆலிஸன் குழந்தையாக இருந்த போது இந்த வார்த்தைகளை அடிக்கடி அவள் சொல்வது வழக்கம். பேஜுக்கு அது ஞாபகம் வந்தது. நினைவற்றுக் கிடக்கும். ஆலிஸனுக்கும், அவளுடைய

அவளுக்காகக் காத்திருந்தான். அவளைப் பார்க்கையில் அவன் இதயம் வலித்தது. எப்படிப்பட்ட நரகத்தில் அவள் உழல்கிறாள் என்பதை அவள் முகமே காட்டியது. பேய் பிடித்த மாதிரி அல்லவா இருக்கிறாள்.

ஆலிஸனின் அறைக்குள் அவள் நுழைந்தபோது, கதவு திறந்து மூடியபோது, ஆலிஸனை அவனும் பார்த்தான். அந்த வினாடியே அவன் இதயம் பிளந்துவிட்டது. அவனுடைய மகள் க்ளோவும் பலத்த காயங்களுடன்தான் கிடக்கிறாள். ஆனால் ஆலிஸனின் அளவுக்குப் பயங்கர மோசமில்லை. டாக்டர்கள் சொன்னதை அவனும் கேட்டிருந்ததால் ஆலிஸன் பிழைப்பது துர்லபம் என்று அவனுக்குத்



தோளையும் காயம் படாமலிருந்த ஒரே ஒரு கன்னத்தையும் வருடினாள்.

எத்தனை வெளுத்துப் போயிருக்கிறாள் குழந்தை. எவ்வளவு சிதைந்து போயிருக்கிறாள்! இருதயம் துடிப்பது மானிட்டரில் தெரியாவிட்டால் அவள் இறந்துவிட்டாள் என்றே பேஜ் நினைத்திருப்பாள். நடந்ததையெல்லாம் இப்போது கூட அவளால் நம்ப முடியவில்லை. ஆலிஸனைப் பார்க்கப் பார்க்க இதயம் வலி எடுத்தது.

"பேபி, நாங்கள் எல்லாரும் உன்னை நேசிக்கிறோம். நீ நல்லபடி குணமடைய வேண்டும். எனக்காக.. அப்பாவுக்காக.. உன் தம்பி ஆண்டிக்காக..."

மகளின் அருகில் வெகு நேரம் நின்றிருந்தாள். நேரமாகிறது என்று சர்ஜன்கள் ஞாபகப்படுத்தினார்கள். ஆபரேஷனின்போது தானும் கூட இருக்கலாமா என்று பேஜ் கேட்டாள். ஆலிஸனுக்கு என்னென்ன செய்கிறார்கள்

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

உடம்பின் ஏதோவொரு கோடியில் அந்த நினைவு தங்கியிருக்கும்.

தன்னைத் தானே அந்தக் கட்டிலிலிருந்து கிழித்து விடுவித்துக்கொள்கிற மாதிரி வலுக்கட்டாயமாக வெளியேறினாள் பேஜ். கண்களிலிருந்து பொங்கிப் பொங்கி வந்துகொண்டிருந்தது கண்ணீர். குழந்தையை மறுபடி உயிரோடு பார்ப்போமோ இல்லையோ என்று நினைக்கும்போதே வேதனை பிடுங்கியெடுத்தது. இல்லை, இல்லை... ஆபரேஷன் மூலம் அவளைக் காப்பாற்றக் கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு மனதைச் திடப்படுத்திக்கொண்டு வெளியே வந்தாள்.

வெராந்தாவில் தாரென்ஸன் தோன்றியது.

"ரொம்ப வருத்தமாயிருக்கிறது பேஜ்" என்று அவள் தோள்களைப் பிடித்துக்கொண்டு சொன்னான். பேஜ் எதுவும் சொல்லவில்லை. வெகு நேரத்துக்கு நின்றவாறே அழுது கொண்டிருந்தாள். அழுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் அவளால்?

முடிவேயில்லாத கொடுமையாக இரவு நீண்டுகொண்டே போயிற்று. அப்படிப்பட்ட ஓர் இரவு அவர்கள் இருவருடைய வாழ்க்கையிலும் வந்ததே கிடையாது.

ஆலிஸனுக்கு ஆபரேஷன் நடந்து கொண்டிருக்கிறது என்பது ஒன்றுதான் அவள் நினைவில் நின்றது. நடுவில் ஒரு நர்ஸ் வந்து சிகிச்சை நல்லபடி நடப்பதாகச் சொன்னாள். ஆனால் இன்னும் பல மணி நேரம் ஆகும் என்று தெரிவித்தாள்.

ஆபரேஷனுக்குச் சம்மதிப்பதாப்

(தாய் தொடர்வாள்.....)

# பிரச்சினைகள் இல்லாது போனால் வட - கிழக்குக்கு கட்டாயம் வருவேன்!


**சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு தன்னால் இயன்ற அளவில் உதவும் விருப்பத்தோடு இலங்கையில் தனது மகனோடு இணைந்து இசை நிகழ்ச்சி நடத்திய பிரபல பின்னணிப் பாடகர் பத்மஸ்ரீ டாக்டர் ஜேசுதாஸ் அவர்களை முரசு சார்பில் சந்தித்தோம். அவரோடு சில நிமிடங்கள்.**

***கே :- ஜேசுதாஸ் அவர்களே, இலங்கைக்கு முதன்முதலில் எப்போது வருகை தந்தீர்கள்?***

ப :- 28 வயதில். அப்போதெல்லாம் இலங்கையின் வடக்குப் பகுதிக்கும் போகக் கூடிய நிலைமை இருந்தது. கலாசாரம், சாப்பாடு என்பவை கூட இந்தியாவைப் போல பிடித்திருந்தது. இப்போது அந்த நிலைமை மாறி வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்குப் போக முடியாமல் உள்ளது கவலையாக உள்ளது. இந்த நிலைமை மாறுகின்றபோது நிச்சயமாக வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு போவேன்.

***கே :- சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வந்தமையை பாராட்டுகிறோம். உதவுவதற்கு உங்களைத் தூண்டிய காரணி எது?***

ப :- சுனாமியின் தாக்கத்திற்குப் பிறகு இரண்டு வாரத்தில் தன்னிப்பட்ட காரணத்துக்கு இலங்கை வந்திருந்தேன். அப்போது சுனாமியின் தாக்கத்திற்குப் பின்னால அவல நிலைமைகளைப் பார்க்கவும், கேட்கவும் முடிந்தது. ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் என்னால் ஆன ஏதாவது ஒரு உதவியைச் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். இது தொடர்பில் மாருதி குமார் அவர்களுடனும் பேசினேன். அவரும் ஒத்துழைத்தார். அவரின் ஏற்பாட்டில் இந்த






உதவியை என்னால் செய்ய முடிந்திருக்கிறது. அதுபோக எனது பாடல்களைக் கேட்டு நான் இத்தனை அளவுக்கு வளருவதற்கு உற்சாகமளித்த நல்ல இரசிகர்கள் கஷ்டப்படும்போது வெறுமனே ஆறுதல் வார்த்தைகளோடு இருந்துவிட முடியாதல்லவா?

***கே :- ஜேசுதாஸ் அவர்களே, எத்தனையாம் ஆண்டு ஒரு பாடகராக அறிமுகமாகினீர்கள்? நீங்கள் பாடிய முதவல் சினிமா பாடல் எது?***

ப :- 1961ஆம் ஆண்டு பாடகனாக சினிமாவுக்குள் வந்தேன். "நீயும் பொம்மை நானும் பொம்மை நினைத்துப் பார்த்தால் எல்லாம் பொம்மை" இதுதான் நான் பாடிய முதல் சினிமாப் பாடல்.

***கே :- தற்போது பல புதிய பாடகர்கள் இருப்பதால் நீங்கள் பாடுகின்ற சந்தர்ப்பங்கள் இல்லாமல் போய்விட்டதா? அல்லது போட்டி நிலைமைகள் அதிகரித்துவிட்டதா?***

ப :- போட்டி என்று எதுவும் இல்லை. காலத்துக்கேற்றபடி பாடல் இரசிகர்களும் மாறிக்கொண்டிருக்கிறார்கள். பழைய பாடல்கள் போல நல்ல சிறந்த பாடல்கள் வருகின்றபோது அதுவும் நீான் பாடினால் நன்றாக இருக்குமென்றால் நிச்சயமாக பாடுவேன். இப்போது 'தேசம்' திரைப்படத்தில் கூடப் பாடியிருக்கிறேன்.

***கே :- உங்கள் மகன் விஜய் ஜேசுதாஸ் பாடுகின்றபோது உங்களின் குரல் சாயல் இருக்கிறது. நீங்கள் அதை எப்படி பார்க்கிறீர்கள்.***

ப :- அவர் எனது மகனாச்சு. உறவுத் தொடர்பு இருப்பதால் எனது சாயல் இருப்பதாக வைத்துக் கொள்ளலாம். ஆனாலும் ஒருவரைப் போல இன்னொருவர் பாட முடியாது.

***கே :- ரி.எம்.சௌந்தரராஜன் அவர்களுக்கு காலம் தாழ்த்தி கௌரவிக்கப்பட்டு விருது வழங்கப்பட்டிருப்பதை எவ்வாறு பார்க்கிறீர்கள்?***

ப :- முன்பெல்லாம் விருதுகள் திறமைகளுக்கே வழங்கப்பட்டன. இப்போது தனிநபர்களை வளர்த்து விடுவதற்காக சில கம்பனிகள் உள்ளன. எனக்கு 7 தடவை ஜனாதிபதி விருது கிடைத்திருக்கிறது. அதுபோல சித்ராவுக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்திருக்கிறது. ஆனால், இன்னும் ஏன் சுசீலாவுக்கு அல்லது ஜானகிக்கு இந்த விருதுகள் கிடைக்கவில்லை. ஆக நல்ல பாடல்களைப் பாடினோம் என்பதை தவிர, மனதுக்கு வேறு விருதுகள் பெரிதல்ல.

***கே :- நீங்களும் எஸ்.பி.. பாலசுப்பிரமணியமும் பின்னணிப் பாடகர்களின் உலகில் கொடி கட்டிப் பறந்தவர்கள். அவரோடு பழகிய ஞாபகங்களை எவ்வாறு நினைவு கூருகிறீர்கள்?***

ப :- முதலில், நானும் அவரும் கலைஞர்களாகப் பழகியதே இல்லை. என்னைக் காணுகின்ற போதெல்லாம் தாஸ் அண்ணா என்று கட்டித் தழுவுவதும் காலில் விழுந்து மரியாதை செய்வதும், அவரின் மீதான எனது கௌரவத்தை உணர்த்தி நிற்கிறது. ஏனென்றால் என்னோடு கூடப் பிறந்த சகோதரங்கள் கூட எனக்கு அந்தளவுக்கு மரியாதை தருவதில்லை. ஆகவே, எஸ்.பி.பி.யின் இந்தப் புனிதமான உறவு வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை.

***கே :- நீங்கள் பாடிய தமிழ்ப் பாடல்களில் இன்னும் உங்கள் முணுமுணுப்புக்குள் இருப்பது எது?***

**இதற்குப் பதிலாக** 'பூவே செம்பூவே' என்ற அந்தப் பாடலை பாடி நம்மைப் பரவசத்தில் ஆழ்த்தினார். அப்போது கேட்ட அதே இனிமை இப்போதும் ஜேசுதாஸிடம் இருப்பது இறைவன் கொடுத்த வரம்தான் என்று நினைத்துக் கொண்டு விடைபெற்றுக் கொண்டோம்.




பத்மஸ்ரீ ஜேசுதாஸை சந்திக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த மாருதி குமார் அவர்களுக்கு முரசு வாசகர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# புலம் பெயர்ந்தவர்களின் பேனா முனை

# மரணத்தின் விலையும் பிரிவின் மகிழ்வும்

பேராசிரியர் அறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜீ

(சென்ற வாரத் தொடர்ச்சி....)

**ஆஸ்** பத்திரியின் முன்னாலான சவப்பெட்டிக் கடைகள் முதல், மரணச் சடங்கை முழுமையாய் குத்தகைக்கு எடுத்து....வயிறு கிழித்து குடல் உருவி...மாலை போட்டு வாசனைத் திரவியம் பூசி...லண்டன் மகன் வந்து சேரும் வரை வைத்திருக்க உதவும் பிரதான வீதியின் பெருங் கடைகள் வரை...சிறுவயதில் பயத்தில் றோட்டில் மறுபக்கமாய் போய் கடப்பான் கியூறியஸ்....

மரணம் வந்தால் மகிழ்ச்சி கொள்ளும் இந்த வியாபாரங்கள்...வைத்தியசாலைக்குள்ளேயே வந்து சேடம் இழுக்கும்போதே, பெட்டி வேணுமோ? என்று கேட்பதாகவும் ஊரில் பேச்சு இருக்கு.

மரண அறிவித்தல் ஈழநாட்டில்.... அளவாய் உறவுகள்... அவர்களுக்குத் தெரிந்தவர்களுக்கு அறிவிப்பதற்காய்... வசதியிருந்தால் முப்பதாம் நாள் எங்காவது தமிழ்ப் பண்டிதர் உபயத்தில் கல்வெட்டும் வரும். கொடுங்கோலர்களை இரக்கத்தின் திருவுருவங்களாய் அன்று முதல் இன்று வரை காட்டும் பொற்காசுப் புலவர்களின் வழித் தோன்றல்கள் வஞ்சகமில்லாமல் புகழ்வார்கள்.

துயர் தரும் மரணம் வாழ்வு தொடரும் நினைவுகள் என்றும் இருக்கும்.

மரணம் வேறிடங்களில் வேறுமாதிரி....பார்சிக்கள்... ஈரானில் இருந்து இஸ்லாமிய ஆதிக்க காலத்தில் இந்தியா வந்தேறிய குடிகள்...இந்திரா காந்தியின் கணவர், தொழிலதிபர் டாட்டா உட்பட பிணம் கோட்டை நடுவில் கழுகுகளுக்கு உணவாய் வைக்கப்படும்.

கங்கை நதியில் உடல்களை மலர்களுடன் சேர்ந்து மிதக்க விடுவது இன்னொரு மரபு. இருந்தும் கங்கை நதியின் தூய்மை பெயர் பெற்றதொன்று.

மம்மியாய் பிரமிட்டுக்களிலும் மட்பாண்டங்களிலும் புதையுண்ட மனிதன் இன்று புதைபொருளாய்....

மரணம் மொத்த வியாபாரமானதில் இருந்து எல்லாமே வேறுபட்டது. விறகுக்குப் பதிலாய் டயர்கள்; பிணத்திற்குப் பதிலாய் உயிர்கள். மயானத்திற்கு பதில் துயில் இல்லங்கள். பிணம் வரும் பின்னே...அழக் கூடாது என்ற அறிவிப்பு வரும் முன்னே.

குண்டுவீச்சில் சிதறி அடையாளம் தெரியாமல்....கூட்டிக் கொளுத்தியது எத்தனை? இறந்தது தெரியாமல் உயிரோடிருப்பதாய் நம்பியது எத்தனை?

மரணம் மலிந்தது. விடுதலைக்கு வித்து என்ற பெயரில்...போராட்டத்தில் சகஜம் என்ற பெயரில், களை எடுப்பு என்ற பெயரில், சமூக விரோதி என்ற பெயரில், இராணுவத்தின் இன அழிப்பு என்ற பெயரில், மரணத்தின் ஏக விநியோகஸ்தர்களாக அங்கீகாரம் பெற்றவர்கள் அநேகர்.

மரணம் சர்வமும் சாதாரணமானது, சகஜமானது. இறந்தவர்களை விட, வாழ்பவர்களுக்கு தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள வேண்டிய தேவை. அழுவதற்கு முன்னால் கூட யோசிக்கவும் அக்கம் பக்கம் பார்க்கவும் வேண்டிய நிலை.

மரணம் புலம் பெயர்ந்தது. பெரும் இண்டஸ்ரியாய் வளர்ந்தது. கல்வெட்டுக்கள் எழுதித் தரப்படும் என்ற பத்திரிகை விளம்பரம் வரைக்கும்...

டொலரிலும் யூரோவிலும் அற்பர்களுக்குப் பவிசு வந்தது. எங்கோ கல்யாண வீடுகளில் கூடி நின்ற போட்டோவில் இருந்து வெட்டிய படத்துடன் முழுப் பக்கமாய் விளம்பரம். மரண அறிவித்தல்களைப் பார்த்தாலே தமிழீழம் மலர்ந்ததும் அந்த நாட்டுக்கு ஐ.நா.அங்கீகாரம் கிடைத்ததும், ஏதோவூர், தமிழீழத்தை பிறப்பிடமாகவும், பெயர் புல நாட்டை வதிவிடமாகவும் கொண்ட தமிழன் உயர் திருவாகி பூலோகமெல்லாம் அகதியாகி முடிந்து, சிவலோகத்திலும் தஞ்சம் அடைந்த விடயமும், அவனது பிள்ளைகள் இறப்பு வீட்டுக்கு வர முடியாமல் உலகின் நாலா திசைகளிலும் சிதறிப் போனதும், அவனது நான்காம் பரம்பரைகளின் பெயர்கள் நியூமரோலஜி கணிப்பில் ஷன், ஷா, ஜா வில் முடிவதுமான உண்மை தெரியும்.

அங்கே போல் இங்கே வீட்டில் வைத்து ஒப்பாரி வைக்க முடியாது. மரணச் சடங்குகளுக்கான மண்டபம் கட்டாயமான பெரும் செலவு. ஆறடி



நிலம் என்னுடையது என்று சொந்தமும் கொண்டாட முடியாது. அது இன்னொரு செலவு. தொகையைக் கேட்டதும் பிடி சாபம் கேட்டு பிடி சாம்பராவது மேல் என்று தோன்றும்.

சொல்லி அனுப்ப போன் போதும். இறுதிக் கிரியைக்கு வருவதைத் தீர்மானிப்பது உறவின் நெருக்கம் மட்டுமல்ல, காலநிலையும் வேலையில்லாத நாளும் கூட. இந்த மரணங்களை நம்பி எத்தனை வியாபாரங்கள். கிரியைக்கான பொருட்கள் விற்கும் கடைகள் முதல் கல்வெட்டுக் கவிஞர் வரை அச்சிடும் அச்சகம் முதல் பூக்கடை வரைக்கும். அறிவித்தல் ரைப் செட்டிங் முதல்....31ஆம் நாள் கேட்டரிங் வரையில்.....மந்திரம் சொன்ன ஐயர் முதல் அறிவித்த வானொலி வரை.....

அதிலும் முக்கியமானது இந்த டெட்லைன் வியாபாரம். பத்திரிகைகளுக்கு டெட்லைன் என்று வைத்ததே இந்த இறப்பு விளம்பரங்களினால்தான் போலும். அச்சுக்குப் போகுமுன் கொடுத்தால்தான் உண்டு. இல்லாவிட்டால் அடுத்த கிழமை வரை பொறுத்திருக்க வேண்டும். தவறியவைகளைப் பொறுக்கலாம் என்று நம்பி வார இடையில் தொடங்கப்பட்ட பத்திரிகைகளும் உண்டு.

பல பத்திரிகைகள் இந்த மரண அறிவித்தலை நம்பித்தான் உண்டு. ஒரே தடவை சுளையான பணம்... மரணம் மட்டுமல்ல, வருடாந்த நினைவஞ்சலிகள். அதற்கு நடுவில் ஆங்காங்கே நெத்தலின் கருவாடு 99 சதம் மலிவு விற்பனை கண்டு திரண்ட மக்கள் கூட்டத்தின் படத்தை செய்(ந்)தியாளர் பிடித்து கடை அதிபரைப் பாராட்ட விரும்புவோரின் நலன் கருதி தொலைபேசி இலக்கத்தையும் தருவார்.

செய்தி எது, பிரசாரம் எது என்று தெரியாத நிலை மாறி, செய்தி எது, விளம்பரம் எது என்று தெரியாமல் குழம்பும், பத்திரிகை வியாபாரம் கருவாட்டு வியாபாரத்தின் தரத்திற்கு வந்ததில் என்ன அதிசயம்?

நயினார் செத்தது நல்லது நல்லது என்று இந்த பத்திரிகைகளும் வியாபாரங்களும் மகிழ்ச்சியில் திளைக்காமல் இருக்கும்? யானை இருந்தாலும் ஆயிரம் பொன், செத்தாலும் ஆயிரம் பொன். தமிழனும் அந்த நிலைக்கு உயர்ந்து விட்டான்.செத்தும் அந்த நிலைக்கு சீதக்காதி மாதிரி.... இருக்கும்போது இயக்கத்திற்குக் கொடுத்தான். இறந்தபோது இழவு வீட்டுச் செலவுக்காய் கொடுத்தான்.

இருந்தாலும் இந்த மரணச் செலவுகள் புலம் பெயர்ந்த நாடுகளில் அதிகமானதும், தவிர்க்க முடியாததுமானவை.

இதனால் புலம்பெயர் வாழ் தமிழர் நலன் கருதி வடக்கிலும் கிழக்கிலும் கொழும்பிலும் வாராந்த மலிவு விற்பனை நடத்தும் மரணத்தின் ஒட்டுமொத்தக் குத்தகையாளர்கள்...தாராள இறக்குமதியாய் புலம் பெயர் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து, ஏகவிநியோகத்தை விஸ்தரித்தால் மரண அறிவித்தல் செலவு குறையும். செய்தியில் இனம் தெரியாத நபர்களால் கொல்லப்பட்ட விசயம் நிச்சயமாக வரும் என்பதால் இறுதிச் சடங்குச் செலவு குறையும். டயர் போட்டுக் கொளுத்த மரண மண்டபச் செலவு குறையும். எச்சரிக்கை விடுக்க.

வேலையையும் காலநிலையையும் காரணம் காட்டி வராமல் போன காரணங்களுடன் இன்னொன்றும் சேரும்....வரத்தான் வெளிக்கிட்டனான் பாருங்கோ. தடையை மீறி வந்தால் என்ரை செத்த வீட்டுக்கும் ஒருத்தரும் வரேலாமல் போயிடும்...விளங்குதுதானே உங்களுக்கு நிலைமை.

தமிழ் மக்களுக்கு சேவை செய்வதும் ஆகிறது. துரோகிகளை ஒழிப்பதும் ஆகிறது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய். சே... ஒரே குண்டில் இரண்டு துரோகிகள். இவ்வாறு தமிழீழத்திலும் பெயர் புலத்திலும் உள்ள துரோகிகளை ஒழித்துக் கட்டினால் இடைக்காலத் தீர்வென்ன, இறுதித் தீர்வுக்கான தடைகள் வேகமாக அகற்றப்பட்டு தமிழீழம் மலர்ந்து சுதந்திரமாய் ஜனநாயகத் தேர்தல் நடந்து, பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் உட்பட்ட கருத்துச் சுதந்திரம் எல்லாம் கிடைத்து, அங்கு பாலும் தேனும் வழிந்தோடி சோதனைச் சாவடித் தொல்லைகள் அற்று, வரிச் சுமைகள் குறைந்து உலகமெல்லாம் சிதறிப் போன தமிழர்கள் தங்கள் குடும்பம், பிள்ளைகளுடன் தமிழீழம் சென்று குடியேறி தற்போதைக்கு இது போதும்; இருப்பினும் டெட்லைன் வருமானம் குறைந்ததால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களும் அதனால் வந்த கவலையைப் போக்க கனடாவில் கட்டாக்காலி நாய்கள் இல்லாததால் காரில் அடிபட்ட றக்கூன் செத்தது நல்லது நல்லது, தமிழ் ஈழத்துக்கு நல்லது நல்லது என்று ஆனந்தக் கூத்தாடாமலா போய்விடுவார்கள்?

*(நன்றி:- www.Thayagam.info)*

**(அடுத்த வாரமும் தொடரும்)**

# சதி வலைக்குள் தமிழ் - முஸ்லிம் உறவு!

## எதிர்காலத்தில் காத்திருக்கும் சுனாமியை மிஞ்சும் பேரழிவு

"முஸ்லிம் தலைவர்களோடு செய்து கொண்ட உடன்பாடு, அது அந்த நேரத்திலேயே செயலிழந்து போட்டுது." - 19.12.2003 அன்று தமிழ்ச்செல்வன்.

"முஸ்லிம்களுக்கும் உரித்தானதே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு" - 14.02.2005 அன்று தமிழ்ச்செல்வன்.

"தமிழர் போராட்டத்திலும் தியாகத்திலும் கிடைக்கும் பலாபலன்களில் முஸ்லிம்களுக்குப் பங்கு கிடையாது." - 13.07.2003 அன்று நாட்டுப் பற்றாளர் நடேசன்.

"முஸ்லிம்கள் ஒரு இனமல்ல. அவர்களுக்கு இனப் பிரச்சினை கிடையாது." - புலிகளின் தத்துவ ஆசிரியர் அன்ரன் பாலசிங்கம்.

"சிங்களப் பேரினவாதத்தின் சதியே தமிழ் - முஸ்லிம் உறவைப் பிளந்தது." - 14.02.2005 தமிழ்ச்செல்வன்.

"மொசாட் போன்ற புலனாய்வு அமைப்புக் களே தமிழ் - முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்தின" - நாட்டுப் பற்றாளர் நடேசன்.

"தமிழர் - சிங்களவர் உறவைப் பிரித்தவர் கள் முஸ்லிம்கள்." - 02.02.2003 உதயன் பத்திரிகை.

இது என்ன குழப்பம். இப்படி இன்னும் எத்தனையோ முன்னுக்குப் பின் முரணான மேற்கோள்களைக் குறிப்பிட்டுக்கொண்டே போகலாம். இவையெல்லாம் தமிழர் போராட்ட வரலாற்றில் அரங்கேற்றப்பட்ட நாடகங்கள். புலிகளை முழுமையாகப் புரிந்துகொண்ட வர்களுக்கு இது ஒன்றும் புதினமல்ல.

ஆனால் தமிழர் உரிமைப் போராட்டத்தின் காரணமாக இத்தகைய பொய்களை இவர்கள் கூறி வந்ததனால் அப்பாவிகளான பொதுமக்கள் இழந்தவை ஏராளம்.

தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என இந் நாட்டில் வாழும் அனைத்துச் சமூக மக் களும் இந்தச் சதிகாரர்களால் ஏமாற்றப்பட்டிருக் கின்றார்கள்.

உலகிலேயே கொடூரமான அமைப்பு என்று பெயரெடுத்தது எல்.ரி.ரி.ஈ இயக்கம். அதேவேளை அதன் தலைவர்கள் முன்னுக்குப் பின் முரணாகவும், பொய்களையும் கூறுவதில் வல்லவர்கள் என்ற பெருமையும் அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது.

புலிகளும் அவர்களது ஆதரவாளர்களும் (பிரதேச மொழி வழக்கில் விசிறிகள் அல்லது வால்கள் என்றழைக்கப்படுவார்கள்) ஆளுக்கு ஆள், இடத்துக்கு இடம், நேரத்துக்கு நேரம் முரண்பாடான விதத்தில் பேசுவதில் பலே கில்லாடிகள்.

கௌசல்யனின் (லிங்கராசா) மரணச் சடங்கிற்காக மட்டக்களப்புக்கு வந்த தமிழ்ச் செல்வனும் அவரது இயக்கத்தின் துறை சார்ந்த தலைவர்களும் நீண்ட நாட்களாக முகாமடித்து அங்கேயே நின்றார்கள்.

தமிழ்ச்செல்வன் அரசாங்கப் படையினரின் ஹெலிகொப்டரில் ஆகாய மார்க்கமாக வந்தார். அவரது உயர் மட்ட உறுப்பினர்கள் அரசாங்கப் படையினரின் பாதுகாப்போடு தரை மார்க்கமாக வந்து சேர்ந்தார்கள்.

சுனாமி கடற் கொந்தளிப்புக்குப் பின் பல காட்சிகள் அரங்கேறுகின்றன. புலிகளும் தம் பக்கத்தில் பல நாடகங்களை அரங்கேற்றி யிருக்கிறார்கள். கொக்கட்டிச்சோலைக்கு வந்த தமிழ்ச்செல்வன் சர்வதேச காதலர்கள் தினமான பெப்ரவரி 14ஆம் திகதியன்று முஸ்லிம்களைச் சந்தித்தார். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்கள்.

இந்தக் கூட்டத்தில் ஏற்கெனவே தயார் செய்யப்பட்டிருந்த வார்த்தை ஜாலங்கள் அடங்கிய அறிக்கையை, தாடியோடும் தொப்பியோடும் அமைதியாக அமர்ந்திருந்த முஸ்லிம் பிரதிநிதிகள் முன்னிலையில் வழமை யான சிரித்த முகத்தோடு சமர்ப்பித்தார் தமிழ்ச் செல்வன்.

ஆனால் வன்னியிலிருந்து கருத்துச் சொல்லும் தமிழ்ச்செல்வனுக்கும், கிழக்குக்கு வந்து கருத்துச் சொல்லும் தமிழ்ச்செல்வனுக்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருந்தது. அதேவேளை சிரிப்பு மட்டும் மாறாததாக இருந்தது.

"சிங்களப் பேரினவாதத்தின் சதியே தமிழ் - முஸ்லிம் உறவைப் பிளந்தது" என்று ஆரம் பித்த தமிழ்ச்செல்வன், உண்மைக்குப் புறம்பான பல கட்டுக்கதைகளையும் அடுக்கிக்கொண்டு போனார். "புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் புலி களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஒரு போதும் முரண்பாடுகள் ஏற்படவில்லை" என்றும் அவர் கூறினார். சகல மக்களினதும் அடிப்படை உரிமைகளையும் மதிக்க வேண்டுமென்பதில் தமது இயக்கத் தலைவர் பிரபாகரன் உறுதியுடன் இருப்பதாகவும் அவர் சொன்னார்.

"விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழர் களுக்கானது மட்டுமல்ல; அது முஸ்லிம் களுக்கும் உரித்தானது. முஸ்லிம் மக்களைத் தாக்கவோ அழிக்கவோ நாம் விரும்ப வில்லை" என்ற கதைகளையும் அவரே சொன்னார்.

தமிழ்ச்செல்வன் கூறிய இந்தக் கோமாளித்தனமான கருத்துக்களை அடியோடு மறுப்பதற்குப் பல விடயங்கள் சாட்சி பகர்கின் றன. முதலில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் புலிகளுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையில் ஒருபோதும் முரண்பாடுகள் ஏற்பட்டதேயில்லை என்று கூறும் தமிழ்ச் செல்வனின் கருத்தை எடுத்துக்கொள்வோம்,

இது முழுப் பூசணிக்காயை ஒரு பிடி சோற்றுக்குள் மறைக்கும் பகீரத முயற்சிதான். ஒரு வகையில் இந்த வருடத்தின் மிகச் சிறந்த கேலியாகவும் இதனை எடுத்துக்கொள்ள லாம்.

புலிகளின் புரிந்துணர்வு உடன்படிக் கையின் பின்னர் வாழைச்சேனை, மூதூர், தோப்பூர், கிண்ணியா, ஹிஜ்ராத், திருமலை, முள்ளிப்பொத்தானை போன்ற பகுதிகள் எரிக்கப்பட்டன. பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் சாம்பராக்கப்பட்டன. பலர் சுட்டும், வெட்டியும், அடித்தும், எரித்தும், குண்டு வீசியும் படுகொலை செய்யப் பட்டார்கள்.

ஜெயந்தியாய, ரிதீதென்ன, ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி, கல்முனை, சம்மாந் துறை, அக்கரைப்பற்று, பொத்துவில், மன்னார் என அங்கொன்றுமிங்கொன்றுமாகப் பலர் கொல்லப்பட்டார்கள்.

வாழைச்சேனையில் அரச சார்பற்ற நிறுவனமொன்றில் பணி புரியும் தமிழ் யுவதியொருவரின் திருமண சமையல் வேலைக்காகச் சென்ற இரு முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். உடல்கள் தெரியா வண்ணம் புதைக்கப்பட்டன. தகவலின் அடிப்படையில் சடலங்களைக் கண்டுபிடித்து ஏற்றிக்கொண்டு வரும்போது வழிமறித்த புலிகள் சடலங்களைக் கீழே இழுத்தெடுத்து டயர் போட்டு எரித்தார்கள். மாவட்ட நீதிபதி, வைத்திய அதிகாரி, மரண விசாரணை அதிகாரி, படை, பொலிஸ் அதிகாரிகள், கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் ஆகியோர் முன்னிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. போர் நிறுத்த சமாதான உடன்படிக்கை அமுலிலிருந்த வேளையிலேயே இக் கொடூரம் நடந்தது. மனித நாகரீகத்தையே தலை குனிய வைத்த இந்தக் கொடுஞ் செயலுக்குத் தமிழ்ச் செல்வனின் பதில் என்ன?

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் புலிகளால் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பத் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். கணவரை இழந்து விதவைகளான நூற்றுக் கும் அதிகமானோர் நிர்க்கதியான நிலையில் இன்னமும் குமுறிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு தமிழ்ச்செல்வன் என்ன பதில் சொல்லப் போகின்றார்?

ஹுசைன் பின் ஹமீத்

நூறு வீதமும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குக் கடத்திக்கொண்டு செல்லப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு புலிகள் என்ன சொல்லப் போகின்றார்கள். முழுக்க முழுக்க புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் முஸ்லிம்கள் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப் பட்டதற்கு யார் காரணம்? மூன்றாவது சக்திகள், இனந் தெரியாதவர்கள் எனப் புலிகள் ஏமாற்றிக்கொண்டிருப்பதை மடையன் கூட நம்பமாட்டானே!

புலிகள் தங்களைப் பலம் பொருந்திய அமைப்பு என்கிறார்களே, உலகிலேயே சிறந்த புலனாய்வுப் பிரிவு தங்களிடம் உள்ளதாகக் கூறுகிறார்களே, அப்படியானால் அவர் களையும் மிஞ்சி வன்முறைகளைத் தூண்டக் கூடிய ஒரு மூன்றாவது சக்தி எப்படி இருக்க முடியும்? அல்லது தமிழ் மக்களின் பகுதி களுக்குள் நடந்த - நடக்கின்ற முஸ்லிம்களுக் கெதிரான வன்முறைகளுக்கு அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் மீதா பழியைப் போடுகிறார்கள்?

**(தொடரும்...)**

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இந்தியாவை அவமதிக்கும் ஜெயவர்த்தனவின் உரை

பார்த்தசாரதியின் முயற்சிகளுக்கு மத்தியில் ஜெயவர்த்தனவோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முன்னோடித் தயாரிப்புகளை மேற்கொள்ளுமாறு இந்திரா காந்தி, அமிர்தலிங்கத்துக்கு விடுத்த அழைப்பு ஜெயவர்த்தனவுக்கு சினத்தை மூட்டியது. ஜெயவர்த்தன அமிர்தலிங்கத்தின் மீது வசை மாரி பொழியத்




தொடங்கினார். ஒரு நாட்டின் தலைவருக்கு அளிக்க வேண்டிய கௌரவத்தை அமிர்தலிங்கத்தைப் போன்ற சாதாரண மனிதருக்கு இந்தியா அளிப்பதாக இலங்கையிலுள்ள சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் குற்றஞ்சாட்டின.

நவம்பர் மாதம் 17,18ஆம் திகதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைச் சந்தித்துப் பார்த்தசாரதி பேச்சுவார்த்தை நடத்தினார். இரு அடிப்படை விடயங்களில் தாம் விட்டுக்கொடுக்கப் போவதில்லையென்று கூட்டணித் தலைவர்கள் பார்த்தசாரதியிடம் தெரிவித்தனர். அதாவது, வடக்கு, கிழக்கு இணைப்பு, வடக்கு - கிழக்குக்குத் தமிழ் பேசும் பொலிஸாரை நியமிப்பது ஆகிய இரு விடயங்களையும் தாம் விட்டுக்கொடுக்கப் போவதில்லையெனக் கூட்டணித் தலைவர்கள் கூறினர். இதே வேளை பாரத்தசாரதியின் அழைப்பின் பேரில் புதுடில்லி சென்றிருந்த தொண்டமானுடனும் அவர் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தினார்.

பொதுநலவாய உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக நவம்பர் மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தன புதுடில்லி சென்றடைந்தார். அவருடன் அவரது சகோதரரான எச்.டபிள்யூ.ஜெயவர்த்தனவும் புதுடில்லி சென்றார். வெளிவிவகார அமைச்சர் ஏ.சீ.எஸ்.ஹமீத் சில தினங்கள் முன்னதாகவே புதுடில்லி சென்றிருந்தார். பொதுநலவாய மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்தியப் பிரதமர்

**மாகாண எல்லைகளுக்கு வெளியேயும் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் இணைப்பு அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கூட்டணியினரின் கருத்தையும் அவர் தெரிவித்தார். அதாவது வடக்கிலுள்ள மாவட்ட அபிவிருத்திச் சபைகளும் கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்ட அபிவிருத்திச் சபைகளும் இணைய அனுமதிக்கப்பட வேண்டுமென்பதே கூட்டணியினரின் கோரிக்கையாகும். அத்துடன் இந்த இணைப்புத் தொடர்பாகச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் யோசனையைக் கூட்டணித் தலைவர்கள் எதிர்ப்பதாகவும் பார்த்தசாரதி எடுத்துக் கூறினார்.**

இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேசினார். ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா ஆதரவளிப்பதாகவும் நாடு பிரிவினையை எதிர்ப்பதாகவும் இந்திரா காந்தி, ஜெயவர்த்தனவிடம் தெரிவித்தார். ஐக்கிய இலங்கைக்குள் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றினைக் காணுமாறு இந்திரா வலியுறுத்தினார். ஜூலையில் இடம்பெற்ற தமிழர் விரோதத் தாக்குதல்களையடுத்து ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட

(அரசியல் தொடர்)

இலங்கைத் தமிழர்கள் தமிழகத்துக்கு அகதிகளாக வந்திருப்பதால் ஏற்பட்டிருக்கக் கூடிய பிரச்சினைகள் பற்றியும் ஜெயவர்த்தனவுக்கு விளக்கினார். இனக் குழப்பத்தினாலும் அகதிகளின் பிரச்சினையாலும் தமிழக அரசியல்வாதிகள் மட்டுமல்ல, தமிழக மக்களும் கொதித்துப் போயுள்ளனரென்று எடுத்து விளக்கினார் இந்திரா காந்தி. தனக்கிருக்கக் கூடிய நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் பதிலாக விளக்கிய ஜெயவர்த்தன, தமிழ்நாட்டுக்கும் இலங்கை வாழ் தமிழர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதால், தமிழர்களுக்குச் சலுகைகள் அளித்தால் அவர்கள் முழு இலங்கையிலுமே ஆதிக்கம் செலுத்துவார்களென்று சிங்கள மக்கள் அச்சம் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

புதுடில்லியில் அசோகா ஹோட்டலிலுள்ள ஜனாதிபதி மாடத்தில் ஜெயவர்த்தன தங்க வைக்கப்பட்டிருந்தார். ஏனைய நாடுகளின் தலைவர்களும் இங்கேயே தங்க வைக்கப்பட்டிருந்தனர். பார்த்தசாரதி இந்த ஹோட்டலுக்குச் சென்று ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேசினார். கொழும்பு முன்வைத்த யோசனைகளுக்குக் கூட்டணித் தலைவர்கள் அளித்த கருத்துக்கள் குறித்துப் பார்த்தசாரதி ஜெயவர்த்தனவுக்கு விளங்கப்படுத்தினார். திருகோணமலைத் துறைமுகம் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கலாமென்றும் ஆனால் அதன் எல்லைகள் மீள வரையறுக்கப்பட வேண்டுமென்றும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் தெரிவித்த கருத்தைப் பார்த்தசாரதி எடுத்துக் கூறினார். மாகாண எல்லைகளுக்கு வெளியேயும் மாவட்ட

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

அபிவிருத்திச் சபைகளின் இணைப்பு அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கூட்டணியினரின் கருத்தையும் அவர் தெரிவித்தார். அதாவது வடக்கிலுள்ள மாவட்ட அபிவிருத்திச் சபைகளும் கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்ட அபிவிருத்திச் சபைகளும் இணைய அனுமதிக்கப்பட வேண்டுமென்பதே அவர்களின் கோரிக்கையாகும். அத்துடன் இந்த இணைப்புத் தொடர்பாகச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் யோசனையைக் கூட்டணித் தலைவர்கள் எதிர்ப்பதாகவும் பார்த்தசாரதி எடுத்துக் கூறினார். தமிழ் பேசுபவர்களை கொண்ட பொலிஸ் பிரிவொன்று அமைக்கப்பட வேண்டுமென்ற யோசனையை கூட்டணித் தலைவர்கள் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. ஆனால் அம்பாறை மாவட்ட மக்கள் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கலாமென்று தமிழர் கூட்டணி தெரிவித்திருந்தது.

சர்வஜன வாக்கெடுப்புத் தேவையில்லையென்ற யோசனையை ஏற்றுக்கொண்ட ஜெயவர்த்தன மாகாணங்களுக்குள் உள்ள மாவட்ட அபிவிருத்திச் சபைகளை மட்டுமே இணைக்க விருப்பம் தெரிவித்தார். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பை அவர் எதிர்த்தார். தமிழ் பேசும் பொலிஸாரைக் கொண்ட பிரிவொன்று ஏற்படுத்துவதற்கான யோசனையையும் அவர் விரும்பவில்லை. ஆனால் பொலிஸாரைப் பொறுத்தவரை ஓரளவு மேலதிக வசதிகளைச் செய்துதவுவதற்கு அவர் இணக்கம் தெரிவித்தார். ஜெயவர்த்தனவின் மாற்று யோசனைகளைப் பார்த்தசாரதி தமிழர் கூட்டணித் தலைவர்களுக்குத் தெரிவித்தார். வடக்கு, கிழக்கிலுள்ள மாவட்ட சபைகளை இணைப்பது மற்றும் தமிழ் பேசும் பொலிஸ் படை ஆகிய இரண்டு அடிப்படை அம்சங்களிலும் விட்டுக்கொடுக்க முடியாதென்று அமிர்தலிங்கம் ஒரேயடியாகக் கூறிவிட்டார். பேச்சுவார்த்தை முயற்சிகள் தோல்வியடையும் கட்டத்தை எட்டின. தான் சென்னைக்குத் திரும்பிச் செல்லப் போவதாக அமிர்தலிங்கம் மிரட்டினார். சென்னை செல்ல வேண்டாமென்றும் புதுடில்லியிலேயே தங்கியிருக்குமாறும் பார்த்தசாரதி அமிரைக் கேட்டுக்கொண்டார்.

இலங்கை அரசாங்கத்தையும் தமிழர் தரப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கூட்டிவர இந்தியா பகீரத முயற்சிகளை எடுத்தபோதிலும் இலங்கையில் இந்தியா இராணுவத் தலையீட்டை மேற்கொள்ளக் கூடுமென்ற அச்சம் இலங்கை அரசியல் உயர் மட்டங்களில் பரவலாக நிலவியது. ஜனாதிபதி ஜெயவர்த்தன, பிரதமர் பிரேமதாசா, அமைச்சர்கள் லலித் அதுலத் முதலி, காமினி திசாநாயக்கா ஆகியோரிடமும் இந்த அச்ச உணர்வு மேலோங்கியிருந்தது. இலங்கையைக் கைப்பற்றுவதற்கு இந்தியாவுக்கு ஒரு மணித்தியாலம் எடுக்கும். ஆனால் அனைத்துத் தமிழர்களையும் கொல்வதற்குச் சிங்களவர்களுக்குப் பதினைந்து நிமிடங்கள் மட்டுமே போதும் என்று சிரேஷ்ட அமைச்சர்களிலொருவரான காமினி திசாநாயக்கா ஒரு தடவை கூறியிருந்தார்.

(தொடர்ந்து வரும்....)




**வ**ணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!

நாட்டில நடக்கிற தில்லுமுல்லுகளைப் பாத்தால் ஆரோக்கியமாயில்லை. திரும்பவும் தேர்தல் வந்திடுமோ எண்டு பயமாக் கிடக்கு. நாட்டு மக்கள் சுனாமியால பாதிக்கப்பட்டும் அரசியல் நடவடிக்கைகளை வெறுத்தும் இருக்கிற இந்தச் சூழலில அரசியல்வாதிகள் படுத்திற பாடு, சொல்லி வேலையில்லை போங்கோ. இவங்கள் கடைசியில நாட்டைக் குழப்பி தேர்தல் அப்பிடி இப்பிடி வந்தால் மகாஜனங்களே வாக்கு மட்டும் போட்டு விடாதயுங்கோ. நீங்கள் திரும்பத் திரும்ப வாக்குப் போடுவியள் எண்டுதான் துணிச்சலாக் குழப்புறாங்கள். அமைதிச் சூழலை குழப்புறவையளை நிராகரிச்சீங்கள் எண்டால் இதுக்கு ஒரு முடிவு கிட்டும்.

***சின் :-*** *கௌசல்யன் கொலை தொடர்பில் மட்டு - அம்பாறை புலிப் பொறுப்பாளர்கள் தலைமையிட்ட விளக்கம் கேட்டிருக்கினமாம். அதாவது கௌசல்யனுக்கு ஏன் பாதுகாப்பு ஏற்பாடு செய்து கொடுத்து அனுப்பவில்லையென்று. ஆனால் பதிலின்னும் தரப்படவில்லையாம். உங்களுக்கு எப்பிடிப் படுகுது.*

**மன் :-** கௌசல்யன் செத்து இப்ப நீண்ட நாளாச்சு. அதுக்குப் பிறகு ரெண்டு கொலை நடந்திட்டுது. இப்பவும் உதைப் பற்றிக் கதைக்கிறதில என்ன அர்த்தமிருக்கு? ஏன் பாதுகாப்பு வழங்கவில்லையெண்டால் வன்னி அதுக்கு என்ன சொல்லுது? பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கயில்லை. அதனால பாதுகாப்புக் கொடுக்கயில்லை. இதுக்கு மேலயும் விபரம் தேவையெண்டால் எங்கட மதியூகியார் எழுதிற 'கௌசல்யன் கொலையின் பின்னணி' தொடர்பான ஆர்ட்டிக்கலைப் பாக்கச் சொல்ல வேண்டியதுதான்.

ஆனால் ஒண்டு மட்டும் உண்மை. தலைமையிட்டக் கேள்வி கேட்கிற அளவுக்குப் பொடியங்கள் ஊர் உலகத்தைத் தெரிஞ்சுகொள்ளத் தொடங்கிவிட்டாங்கள் எண்டது, வெரி குட். போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இதையெண்டாலும் செய்திருக்கே. அது வரையில மகிழ்ச்சி, சந்தோசம்.

***சின் :-*** *என்ன நீங்களும் அவையளைப் போல சடைஞ்சு போட்டியள்? பட்டெண்டு ஒரு பதில் சொல்லுவியள் எண்டெல்லே நினைச்சன். அது சரி, எங்கட கூட்டமைப்பு எம்.பி.மார் பார்ளிமெண்டுக்கு முன்னால போட் புடிச்சுக்கொண்டு நிண்ட அழகைப் பார்க்கணுமே! எப்பிடி அவையளின்ர ஒற்றுமை?*

**மன் :-** ம்...நல்ல ஒற்றுமை. உந்தக் கூட்டமைப்புல மொத்தம் இருபத்திரெண்டு பேர் பா.உ.வா இருக்கினம். ஆனா போட் பிடிக்க பதினைஞ்சு பேர்தானே நிண்டிச்சினம். மிச்சப் பேர் ஏன் வரயில்லை. அதிருக்கட்டும் கடந்த மூன்று வருட காலத்துக்குள்ள புலிகள் அப்பாவியா இருந்திச்சினம். அரசுதான் இல்லாத பொல்லாப்பையெல்லாம் செய்துச்சுதோ. அட, ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் எண்டால் ஒரு ஆக்ரோஷம் வேண்டாமோ. கடமைக்குப் பிடிக்குமாப் போல பிடிச்சுச்சினம். ஜோசப்பும் சம்பந்தரும் மாவையரும் சிரிச்சுக்கொண்டே "தங்கட தலையெழுத்து" எண்டு கண்ணால பேசின விதமிருக்கே அதுதான் பொலிற்றிக்ஸ். அந்த போர்ட்டுகளை எழுதிக் குடுத்தவைக்கு சிரிப்பெண்டால் சிரிப்பு, அப்பிடியொரு சிரிப்பாம். அடுத்த நாள் ரெண்டு தினசரிப் பேப்பர்களிலையும் முன் பக்கத்தில படத்தைப் போட, அதைப் பாத்துப்போட்டு, "பாத்தியோ! வெங்காயங்கள் எப்பிடி வெய்யிலில நிக்குதுகள்" எண்டு வன்னியில பொறுப்பா இருக்கிற ஒருவர் மற்றவையளுக்குச் சொல்லிச் சிரிச்சாராம். "நாங்கள் இத்தினை வருஷமா ஆயுதம் வச்சுப் போராடியே ஒரு மண்ணும் முடிவில்லாமக் கிடக்கு. இவை பிரிஸ்ரல் போர்ட்டில எழுதிப் பிடிச்சி பு....கப் போகினம்" எண்டாராம்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர் அப்பிடியெண்டால் நீங்கதானே உப்பிடி நிக்கச் சொன்னனீங்கள்" எண்டதுக்கு, "அதொண்டுமில்ல, இவங்களுக்கு வேலை காணாது. இங்க வந்து கோவில் மாடு மாதிரித் தலையை ஆட்டிப்போட்டுப் போறாங்கள். அதுதான் சின்ன டெஸ்ட் பண்ணினனான்" எண்டாராம்.

நானுந்தான் கேக்கிறன், இவை உப்பிடி ஸ்கூல் பிள்ளையளாட்டம் நிண்டிச்சினமே! நிண்டு தங்கட கோரிக்கைகளுக்கு என்ன தீர்வு கண்டிச்சினம்? ஒண்டுமில்லை. மாறாக மற்ற பா.உ.க்களின்ர பரிகாசத்துக் குத்தான் ஆளாகிச்சினம்.

அதையும் சொல்லிறன். மற்றைய பா.உ.க்கள் இவையின்ர கூத்தை கொஞ்சங்கூட கணக்கில்லையே எடுக்கயில்லை எண்டதுதான் அவமானமான விஷயம். அதுபோக இவைக்கு ஜால்ரா அடிப்பம் எண்டு சரடுவிட்ட மற்ற ரெண்டு பேர், அவைதான் இராதாகிருஷ்ணனும் மகேஸ்வரனும் கடைசிக் கட்டத்தில குப்புற விழுந்து காலை வாரி விட்டிட்டினமாம். மிஸ்டர் மகேஸ் வந்தால் தம்மைக் கடந்து வாகனத்தில போற ஏனைய எம்.பி.மாரை ஒரு பிடி பிடிப்பார் எண்டு நம்பினவையாம். ஆனால் கடைசி நேரத்தில நல்ல நீண்ட கம்பியாப் பாத்து நீட்டிவிட்டாராம்.

***சின் :-*** *ஐயையோ போதும் போதும் நிப்பாட்டுங்கோ. அம்மா.... ஒரு கதைக்குக் கேட்டால் உப்பிடி வண்டவாளத்தை சுனாமி மாதிரி பிரட்டிக் கொட்டிறியள்..... கிளாலியில சிப்பாய் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதைப் பற்றி என்ன சொல்றீங்கள்?*

**மன் :-** அது தவறுதலாக நடந்த சம்பவமில்லை. பல மாதங்களுக்கு முன்னதாகவே சில பழக்க வழக்கம் இருந்திருக்கலாம். ஜனாதிபதி இடைக் காலம் தொடர்பாக பேச முடியும் எண்டு அறிவிச்சவுடன, அதை எப்பிடிக் குழப்புறதெண்டு போட்ட திட்டந்தான் இந்த துப்பாக்கிச் சூடு. இந்த வெங்கிணாந்திகளும் வழமையான மாதிரித் தானே எண்டு போயிட்டுதுகள் எண்டு நினைக்கிறன். எந்த இடத்தில வச்சு சுடுபட்டாங்கள், அது யுத்த நிறுத்த மீறலா? இல்லையாவெண்ட விசாரணையை கண்காணிப்புக் குழு இன்னும் துப்புத் துலக்கிக் கொண்டிருக்கு. இன்னும் துப்புக் கிடைக்கயில்லை. துப்புக் கெட்டதுகள் துப்பு துலக்கினா துப்பு துப்பரவாக் கிடைக்காது தெரியுமோ? சும்மா கண்துடைப்புக்கெல்லோ துப்புத் துலக்கினம். செத்தவன் கதையும் செத்துப் போச்சு. புலிகள் சுட்டுச்சினம். சிப்பாய் செத்திச்சுது. அதுவும் அதிக இரத்தம் வெளியேறியதாலதான் அந்த இடத்திலயே இறப்பு நிகழ்ந்திருக்கு. எப்படி ரிசல்ட்?

***சின் :-*** *ஓ.கே...ஓ.கே...பேசாம நீங்கள் மரண விசாரணை அதிகாரியாகப் போகலாம். அந்த மாதிரி ரிப்போர்ட் தாறியள். நன்றியுங்கோ.....*

**மன்னவரும் சின்னவரும்**

கணவன், மனைவியிடம் Indifferent ஆக நடந்துகொள்வதுதான் குடும்ப வாழ்க்கையில் சிக்கல்களின் ஊற்றுக்கண். மனைவியை ஒரு பொருட்டாகவே மதிக்காத கணவர்கள் என்னவெல்லாம் செய்வார்கள் என்பதற்கு ஒரு சின்ன உதாரணம்.

அவர், ஒரு கல்லூரிப் பேராசிரியர். மாலை நேரம் கல்லூரியில் வகுப்பெடுத்துக்கொண்டிருக்கும்போது ஒரு ஃபோன் கால் வருகிறது. மறுமுனையில் எரிச்சலும் விரக்தியுமாகப் பேசியது அவர் மனைவிதான்!

"வீட்டில் மனைவி என்று ஒருத்தி இருப்பதையே மறந்துவிட்டீர்களா....? இன்று மாலைப் பத்திரிகைகளையாவது பார்த்தீர்களா? நான் இறந்து போய்விட்டதாகச் செய்தி வந்திருக்கிறது."

'நான் இருக்கிறேனா, செத்தேனா என்று கூடத் தெரியாமல் அப்படி என்ன அலட்சியம்?' என்பதை இப்படி மனைவி கேட்க....அந்த விரக்தியைக் கூடப் புரிந்துகொண்டு ஆறுதல் சொல்லக்கூடிய நிலையில் இல்லை கணவர். மனைவி கேட்பதற்கு எதையாவது சொல்லியாக வேண்டுமே என்று கணவர் இப்படிப் பேசினார்.

"அப்படியா....? நீ செத்துப் போய்விட்டாயா? அது இருக்கட்டும். நீ இப்போது எங்கிருந்து பேசுகிறாய்? நரகத்திலிருந்தா? சொர்க்கத்திலிருந்தா?"

கதையை விடுங்கள். நிஜத்தில் இன்று நம் நாட்டில் பல வீடுகளில் நடப்பது என்ன?

- 'என் மனைவிதானே....நான் என்ன சொன்னாலும் அவள் கேட்பாள். செய்வாள்' என்று கணவர்கள் செயற்படுகிறார்கள். மனைவி அறவே வெறுத்து ஒதுக்கும் விஷயங்களைச் செய்தால் கூட, அவளை எப்படியாவது சமாளித்துக்கொள்ளலாம் என்கிற எண்ணம்! உண்மையில், No husband can take this wife for granted. மனைவியும் மனுஷிதான். அவளுக்கும் அபிப்பிராயங்கள் இருக்கின்றன.

அதற்காக மனைவியின் அபிப்பிராயப்படிதான் கணவன் நூறு சதவீதம் வாழ வேண்டும் என்று நான்

# கொடுங்கள்...... கிடைக்கும்!

சொல்லவில்லை! குறைந்தபட்சம் குடும்பம் சம்பந்தப்பட்ட எந்த முக்கிய முடிவு எடுப்பதாயிருந்தாலும், உங்கள் மனைவியின் அபிப்பிராயத்தை நீங்கள் காது கொடுத்தாவது கேட்கலாம் இல்லையா?


"சம்சாரம் அது மின்சாரம்" என்று ஒரு பாட்டு உண்டல்லவா? அது ரொம்ப ரொம்ப உண்மை! எப்படி!

எனக்குத் தெரிந்த இளைஞன் ஒருவன் கிராமத்திலிருந்து வேலை தேடி பெங்களூர் வந்தான். வாடகைக்கு ரூம் எடுத்துத் தங்குவதற்கு அவனுக்கு வசதியில்லை. அதனால் இன்ஜினீயரிங் கல்லூரியில் படிக்கும் இன்னொரு நண்பனின் ஹாஸ்டல் அறையில் தங்கினான். அங்கே.... ஃபேன், ரேடியோ, ரி.வி. என்று எல்லாமே அக்கு அக்காகப் பிரித்துப் போடப்பட்டிருந்தன.

கிராமத்திலிருந்து வந்த இளைஞனுக்கு எது என்ன என்று கூட விளங்கவில்லை. அவன், எதையோ தொட 'ஷாக்' அடித்திருக்கிறது. அவன் பயந்துவிட்டான். மாலை, கல்லூரி முடிந்து ஹாஸ்டல் திரும்பிய நண்பனிடம் இந்த இளைஞன், 'ஷாக்' அடித்த விவகாரத்தைச் சொல்ல, அவன் நேரம் கிடைக்கும்போதெல்லாம் மின் உபகரணங்கள் பற்றி இந்த இளைஞனுக்குச் சில மாதங்கள் சொல்லிக் கொடுத்திருக்கிறான். அதன் பிறகு, இந்தக் கிராமத்து இளைஞனுக்கு மின் உபகரணங்கள் மீது ஈடுபாடு வர, இப்போது எந்த மின் அணு உபகரணங்களும் இவனுக்கு 'ஷாக்' கொடுப்பதில்லை.

எந்தக் கனெக்ஷன் கொடுத்தால் ரேடியோ பாடும்? என்ன செய்தால் தேவை இல்லாத சத்தங்களைப் போக்க முடியும் என்றெல்லாம் தெரிந்துகொள்ள ஆரம்பித்ததும், அந்தக் கிராமத்து இளைஞனுக்கு இந்த மின் அணு உபகரணங்களே ஒரு பெரிய ஆச்சரிய சுரங்கமாக மாறிவிட்டது.

கணவன்மார்களே! மனைவி கூட



ஒரு வகையில் மின் அணு உபகரணம் மாதிரித்தான். புரிந்துகொண்டு நடந்தால், அவளிடமிருந்து அற்புதமான இசைமயமான, சிலிர்ப்பூட்டும் தோழமை நமக்குக் கிடைக்கும்.

உங்கள் மனைவி உங்கள் மீது அன்பு மழை பொழிய வேண்டுமானால், அதற்கு ஒரே வழி - நீங்கள் உங்களின் மனைவி மீது அன்பு மழை பொழிய வேண்டும்!

'இல்லை சுவாமி உங்களுக்குத் தெரியாது. என் மனைவி சாதாரணப்பட்டவள் இல்லை. அவள் கத்தினால் நாலு வீட்டுக்குக் கேட்கும். சண்டை போட ஆரம்பித்தால் வீடு தலைகீழாகக் கவிழ்ந்துவிடும். அவள் மீது நான் எப்படி அன்பு மழை பொழிவது?' என்று யாராவது ஒரு சிலருக்குக் கேள்வி தோன்றினால்...

இதோ இந்த உதாரணத்தைப் பாருங்கள்! சிகரெட்டை முதன்முதலில் தொழிற்சாலையில் உற்பத்தி செய்து வர்த்தக ரீதியாகச் சந்தைப்படுத்த ஆரம்பித்த ஆரம்பக் கட்டம் இது.

"சே...இதைப் போய் யார் காசு கொடுத்து வாங்குவார்கள். குடலைப் புரட்டும் துர் நாற்றம் அடிக்கிறது. சாம்பல் விழுந்து வீட்டைக் குப்பையாக்குகிறது. இதை விற்கவே முடியாது. நாகரீகமான மக்கள் யாரும் இதைச் சும்மா கொடுத்தால்கூட சீண்டமாட்டார்கள்" என்று பல தொழிலதிபர்கள் சிகரெட்டைக் கைகழுவிவிட்டார்கள். ஆனால், சில சிகரெட் கம்பெனி முதலாளிகள் மட்டும் மனதைத் தளர விடவில்லை.

'சிகரெட் பிடித்தல் ஆண்மையின் அடையாளம். வெற்றிபெற்றவர்கள் கையில் இருப்பது, வேகத்தோடு செயற்படும் இளைஞர்கள் உபயோகிப்பது' என்று சிகரெட் பற்றி ஒரு கருத்தை மக்களிடம் பரப்பிவிட்டால், மக்கள் சிகரெட் வாங்க ஆரம்பித்துவிடுவார்கள் என்று நினைத்தார்கள். அதே மாதிரியே விளம்பரமும் செய்தார்கள். மக்களும் சிகரெட்டால் ஏற்படும் துர்நாற்றம், குப்பை, உடல் நலக்கேடு என்று அத்தனையையும் மறந்துவிட்டார்கள். இன்று பலரால் சிகரெட் இல்லாமல் ஒரு அரை மணி நேரம் கூட இருக்க முடிவதில்லை.

மோசமான சிகரெட்டையே நாம் விரும்பும் அளவுக்கு, அதற்கு அடிமையாகிப் போகும் அளவுக்கு சிகரெட் கம்பெனி முதலாளிகள் நம்மை மாற்றிவிட்டார்கள். இல்லையா?

ஒரு பொருளை நாம் விரும்புவதற்கும் வெறுப்பதற்கும் நமது பார்வை ஒரு முக்கிய காரணம் என்பதைச் சொல்லத்தான் சிகரெட் பற்றிச் சொன்னேன்.

உங்கள் கணவன் அல்லது மனைவி மோசமானவர் என்று உங்கள் மனதில் அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தால் கூடப் பரவாயில்லை. Conditioning of Mind மூலம் உங்கள் வாழ்க்கைத் துணையை நீங்கள் காதலிக்க முடியும்! சிகரெட் கம்பெனி முதலாளிக்கு உங்கள் மூளை மீது இருக்கும் ஆளுமை, உங்கள் மூளை மீது உங்களுக்கு இல்லை என்று சொல்லாதீர்கள்!

உங்கள் மனைவி அல்லது கணவர் யாராக இருந்தாலும், நிச்சயமாக அவர் அன்பு இல்லாதவர் இல்லை! நீங்கள் அன்பு செலுத்துங்கள்! நிச்சயம் அது உங்களுக்குத் திரும்பக் கிடைக்கும்!

**நன்றி: சுவாமி சுகபோதானந்தா**

(தொடர்ந்து வரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 109க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**எம்.பரமேஸ்வரி, நெலுவ த.வி, பண்டாரவளை.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. க. நிரோஷிதா, இராமகிருஷ்ண வீதி, களுதாவளை-3, களுவாஞ்சிக்குடி.
2. திருமதி மலர் கனகசிங்கம், 141, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
3. எஸ்.வி.ஜெகநாதன், 18-2/5, கொலிங்வூட் பிளேஸ், கொழும்பு - 06.
4. ப. பத்மராதிகா, ஏழாலை கிழக்கு, ஏழாலை, யாழ்ப்பாணம்.
5. நா. கணநாதன், 60, சந்தை சுற்று வட்ட வீதி, வவுனியா.
6. ஜே. ரஞ்சிதமலர், ப.நோ.கூ. சங்கம், சூடுவெந்தபுலவு, பாவற்குளம்,
7. யூ. செல்லத்தம்பி, கோவில் வீதி, கல்முனை.
8. ச. பாலசூரியன், 18/5, குடியிருப்பு, வவுனியா.
9. திருமதி, பி.எஸ். ராணி, பொது நூலகம், சங்கானை.
10. பீ.ஜே. குருஸ், தங்கநகர், கிளிவெட்டி, மூதூர்.

## குறுக்கெழுத்துப் போட்டி 111

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | 6 | ■ | 7 | 8 |
| 9 | 10 | 11 | ■ | 12 |
| 13 | 14 | 15 | ■ | 16 |
| 17 | ■ | 18 | ■ | 19 |
| 20 | 21 | ■ | 22 | ■ |

**இடமிருந்து வலம்**

1. மலையும் மலை சார்ந்த இடமும் இவ்வாறு அழைக்கப்படும்.
7. மாசு (திரும்பியுள்ளது).
9. திரிகடுகத்தில் ஒன்று (குழம்பியுள்ளது).
13. வெயில் காலத்தில் பயன்படும். பிரபலமானவர்களுக்கும் உண்டு. (குழம்பியுள்ளது).
20. ஓசை.

**மேலிருந்து கீழ்**

1. எம்.ஜி.ஆர். நடித்த நூறாவது திரைப்படம் (தலைகீழ்)
2. அடையாளம் (குழம்பியுள்ளது).
4. காவல்.
8. தோல் வாத்தியக் கருவி ஒன்று.
11. சிறுவன் - எதிர் பால் (குழம்பியுள்ளது).
22. ஐம்பெரும் பூதங்களில் ஒன்று.

## குறுக்கெழுத்துப் போட்டி 109 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ஆ | 2 த | 3 ள | 4 ம் | ■ |
| 5 ம் | 6 ட | 7 வி | ■ | 8 கா |
| 9 ட | 10 ம் | 11 மா | 12 ற | ■ |
| 13 ம | ■ | 14 ம் | 15 ம | 16 ஸ் |
| 17 ற | 18 ம் | ■ | 19 ம் | ■ |
| 20 ம் | 21 ம | 22 இ | 23 ம் | ■ |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 08.03.2005க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி;

**குறுக்கெழுத்துப் போட்டி இல-111**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல. - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

85

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்:........................
கையொப்பம்: ..................

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:
08-03-2005

அனுப்ப வேண்டிய முகவரி-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சேலை?
ஊரெழு வாசகிக்கு அதிர்ஷ்டம்!
83

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

சர்மிளா சிவலிங்கம்
அம்மன் கோவிலடி, ஊரெழு கிழக்கு, ஊரெழு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

# இதுதான் காதலா.....!

"நட்பு என்னும் பந்தத்தில் உன்னை, என் இதயத்தோடு சங்கமம் செய்துகொண்ட நாளைப் பற்றி எழுதவா? இல்லை அன்றிலிருந்து இன்று வரை நாம் கொண்ட ஊடலைப் பற்றி எழுதவா? எதை எழுதுவது சொல்லு. இப் பிரிவு எமக்குள்; உனக்குக் கிடைத்த சர்வதேச விருது என்று நினைத்தா இதை நீட்டினாய். கார்மேகத்தினுள் செல்லும் வெண்ணிலா முழுமையாக மறைந்து மாய்வதில்லை. இடையிடையே கர்ச்சித்துவிட்டுத்தான் வலம் வரும். அது போல் இன்று மறையும் எம் நட்புறவு, நாளை ஒரு நாள் இடையிடையே கர்ச்சித்து வலம் வரும்.....

இவ்வாறு நீண்டுகொண்டு செல்லும் ஆட்டோகிரா∴ப்பின் கடைசிப் பக்கத்தில் எழுதியிருந்த தன் காதலி றிபானாவின் உள்ளக்கிடக்கையை ஒருவாறு கண்ணீர் மல்க வாசித்துக்கொண்டிருக்கும் பொழுது.....

"மகன் றியாஸ"ம், ஜெம்சித்தும் வந்திக்கிறாங்க" என்று உம்மாவின் அன்புக் கட்டளை வர, அடிபணிந்தவனாய் "ம் வாறன்" என்று ஏக்கப் பெருமூச்சோடு சென்று அவர்களை வரவேற்றான் ஜஹான்.

இன்றும் தன் வாடிய இதயத்திற்குக் குளிர் நீராய் றிபானாவின் செய்திகள் ஏதும் வந்திருக்குமோ? என சந்தேகம் கொண்டவனாய் முதலில் கேள்விக் கணைகளை றியாஸிடம் தொடுத்தான் ஜஹான்.

"றியாஸ் றிபானாவைச் சந்திச்சாயா? இறுதியாய் என்ன சொன்னாடா?"

"சொறிடா ஜஹான், றிபானாவைச் சந்திக்கல. ஆனா, நாளைக்கு, பல்கலைக் கழகத்தில படிக்கிற றிஸ்விக்கும் றிபானாவுக்கும் றிஜிஸ்டராம். றிஸ்விர படிப்பு முடிந்ததும் கல்யாணமாம் என்று றிஸ்வியின் கூட்டாளி அஸ்முல் சொன்னான்டா."

றியாஸின் வார்த்தை முடியும் முன்பதாகவே நடுக்கம் கொண்டான் ஜஹான். இதயத்தில் சுடு சாம்பலைத் தூவியது போன்ற உணர்வு; அவன் மனம் கொந்தளித்தது.

"அப்ப என்னை லவ் பண்ணினது?"

"சரி, ஜஹான் கவலைப்படாதே! அவ இல்லன்டா உனக்கு வேறவள் கிடைக்க மாட்டாளா!" றியாஸ் கூறியவனாய்....

"அப்ப நாங்க போய் வாறம். ஒரு வேலையா வந்தோம். உன்னைப் பாா்ப்போம் என்றுதான் இங்கு வந்தோம். சரியா..."என்று கூறியவர்களாய் விடைபெற்றுச் சென்றார்கள்.

ஜஹானுக்கு நெருப்பை விழுங்கியது போன்ற உணர்வு. ஓவென்று அழ வேண்டும் போல் இருந்தது. ஆனால் அவன் ஆண் பிள்ளை. சகித்துக்கொண்டான். ஏன்? என் இதயத்தை ஓட்டில் போட்டு வறுக்கின்றாள் என்று அவனது மனம் பதைபதைத்தது. யோசனை அதிகம் வந்தது.

ஜஹானுக்கு யோசனை அதிகம் வந்தால் இன்றைய இளைஞர்களைப் போன்று தற்கொலை, சிகரெட், போதைவஸ்துக்கள் என்பவைகளுக்கு அடிமையாவதில்லை. மாறாக, களிமண்ணினால் இடைக்கிடையே கம்புகளை அடுக்கிக் கட்டப்பட்ட அந்தக் குடிசைக்குள் ஒட்டுப் போடப்பட்ட பாய்த் துண்டு கிடக்கின்றது. அதில் சில நேரம் உறங்குவான்.

பாய்த் துண்டை விரித்து உறங்க எத்தனித்தான். எவ்வாறு உறங்குவது? அவனது மனதில் றிபானா உறங்கிக் கிடக்கின்றாள் அல்லவா? அழுவதற்கும் முடியவில்லை. கண்ணுக்குள் றிபானா பற்றிய நாடகம் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான துன்பச் சிறையில் கடந்த அவனது வாழ்க்கை பற்றிய மனக் குறிப்பைத் தோண்டினான்.

அன்று திங்கட்கிழமை. வானத்தின் காதலை பூமி ஏற்க மறுத்ததால், வானம் ஓவென்று அழுத மாதிரி மழை பெய்து கொண்டிருந்தது. குற்றமில்லை; காரணம் அது மாரி காலம். அன்றுதான் றிபானா மத்திய கல்லூரிக்கு வந்தாள். தான் படிக்கும் வகுப்பில் எத்தனையோ அழகு சொர்க்கம் ஜொலிக்கும் பெண்கள் இருந்த போதும் மனதைத் திருடியவள் றிபானா தான். றிபானா பொது நிறமுடையவள். அவளைவிட குணத்தில் மிகைக்க யாருமில்லை என்பதுதான் அதற்கான காரணம்.

அரைச் சுவர், அதனைச் சுற்றிக் கம்பிகளினால் அடைக்கப்பட்ட ஒரு அழகான வகுப்பறையில் நாளாந்தம் றிபானாவின் பழக்கம் அதிகரித்தது. றிபானா அவனோடு பழகுவதைக் கண்டு சில மாணவர்கள் பொறாமைப்படுவார்கள். அவன் வேறு நண்பிகளுடன் கதைத்தால் அவனோடு றிபானா, ஊடல் கொள்வாள். இவ்வாறு அவர்களுடைய சில நாள் நட்பு வகுப் பறையில் தொடர்ந்து வளர்ந்துகொண்டிருந்தது.....

பெப்ரவரி 14இல் காதலர் தினம் வந்தது.



காதலர் தினத்தில்தான் றிபானாவின் பிறந்த நாளும். காதலர் தினமும் றிபானாவின் பிறந்த நாளும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் மாதிரி. நினைக்கும் போது நெஞ்சுக்குள் மகிழ்ச்சி.

அவளை வாழ்த்துவதற்காக வாழ்த் தட்டையுடன் பரிசுப் பொருளையும் எடுத்துக் கொண்டு பின்னேர டியூசனுக்குச் சென்றான். றிபானாவும் அவளது இணை பிரியா தோழி ஆயிஷாவும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவனைக் கண்டதும் பேச்சுக்கு முற்று புள்ளி வைத்துவிட்டு, எழுந்து பக்கத்து கொட்டகைக்கு வந்தாள் றிபானா. வழமை போன்று பிறந்தநாள் வாழ்த்தை தெரிவிக்க....

"Wish You many happy returns of the day றிபானா என்றான்".

"தேங்ஸ் ஜஹான்" என்று கூறியவளின் முகத்தில் ஏதோ சலனம் இருந்தது.

"என்ன றிபானா இன்டைக்கு ஒன்ட பொறந்த நாள். பெரும் சலனத்துடன் இருக்கின்றாய். என்ன பிரச்சினை சொல்லு."

"அது வந்து...உங்கட்ட நீண்ட நாளா ஒன்று கேட்கணும் என்டிருந்தேன். அதுதான் இப்ப கேட்க....பயமா இருக்கு."

"பயப்படாம சொல்லு றிபானா. என்ன கேக்கப் போறாய், சொல்லு.... சொல்லு..... சொல்லு....."

"தன்னுடைய பலத்த போராட்டத்துக்கு விடை தருவதற்காகக் குனிந்து நிலத்தை தன்னுடைய கால் பெருவிரலினால் கீறு போட்டுக்கொண்டவாறே.....

"நான் உங்கள காதலிக்கிறேன். உங்கட விருப்பத்தை சொல்லுங்க." என்றவாறே முகத்தில் வடிந்த வியர்வைத் துளிகளை கைக்குட்டையினால் துடைத்தாள் றிபானா.

அவனும் தன் காதலை சொல்லத்தான் இருந்தான். அவள் முந்திவிட்டாள். இருந்தும் நந்தவனத்தில் தேரோட்டுவது போன்ற உணர்வு. பன்னீரில் குளிக்கின்ற நினைப்பு. தானும் இவ்வுலகில் ஒரு காதலன் என்ற இறுமாப்போடு காதல் வானில் பறந்தான் அன்று.

அவர்களுடைய காதல் வகுப்பறை, வகுப்பறை முற்றத்து மரம், டியூசன் கிளாஸ் என்று ஒவ்வொரு நாளும் வளர்ந்து கொண்டே சென்றது.

அவர்களுடைய காதலுக்கு இடையில் வரும் வில்லன் ஊடல்தான். காரணம் அவன் வேறு பெண்களோடு கதைப்பது றிபானாவுக்குப் பிடிப்பதில்லை. றிபானா அடிக்கடி கூறும் வார்த்தை இதுதான்.

"இஞ்சாருங்க நம்மல இந்த உலகத்துல எந்த சக்தியும் பிரிக்காது. நம்மட காதல் ஜெயிக்கும். இதற்கு நீங்கதான் உடந்தையாக இருக்கணும்."

இவ்வாறு தொடர்ந்த காதல் பயணத்தின் முடிவுக்கான நாள் நெருங்கியது. அதுதான் பிரிவுநாள் - பிரியாவிடை அன்றைய காலைப் பொழுதில் வழமை போல் இருவரும் ஒற்றைப் பனை மரத்தின் கீழ் சந்தித்தார்கள்.

"ஜஹான் இன்டையில இருந்து நாம பிரியப் போகிறோம். நீங்க நல்லா பரீட்சை எழுதணும். பல்கலைக்கழகம் செல்லணும். ஏன்டா பல்கலைக்கழகத்துக்கு போனாதான் எங்க வாப்பாவும் விரும்புவாங்க. வீட்டார் சம்மதத்தோடு கல்யாணம் நடக்கும்." என்று தொடர்ந்து கதைத்துக்கொண்டாள். ஆனால் ஜஹான் பதிலுக்குப் பேச முடியாமல் மௌனித்தவனாய் கண்ணீர் ததும்ப அவ்விடத்திலே அமைதியாக நின்று கொண்டிருந்தான். இருவரும் கட்டிப்பிடித்து அழ வேண்டும் போல் இருந்தது. எப்படி அழுவது, அது பாடசாலை அல்லவா?

நாட்கள் நகர்ந்தன. பரீட்சை முடிந்தது, பெறுபேறு வந்தது. இறைவன் அமைக்கவில்லை. அவன் நன்றாகப் படித்தான். ஆனால் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை. றிபானாவுக்கும் அப்படித்தான்.

அவன் ஏழை என்பதால் பணமும் இல்லை. அந்தஸ்தும் இல்லை. உயர் படிப்பும் இல்லை. அவனுக்கு உரித்தானது ஒரு களிமண் சுவரினால் அடைக்கப்பட்ட ஒரு குடில்; பாசத்துக்கு என வயது போன உம்மா. இரண்டும்தான் அவனது சொத்து.

அவளுக்கோ மாடமாளிகை, பணக்காரக் குடும்பம். பல்கலைக்கழகம் கிடைக்காவிட்டாலும், திருமண கழகத்தில் நுழையச் செய்ய படித்த மாப்பிள்ளை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நாளைக்கு ரெஜிஸ்டர் வேறு.

அப்படித்தான் இந்த உலகத்தில். ஏழைகளுக்குக் காதல் சொந்தமில்லை. பெண்பிள்ளைகள் ஏழை இளைஞர்களை இவ்வாறுதான் குழப்பிவிட்டு வேடிக்கை பார்ப்பார்கள். இருந்தும் றிபானா, அவட வாப்பாட சொல்லுக்குக் கட்டுப்பட்டு ஏன் ரெஜிஸ்டருக்கு சம்மதித்தாள்....

இவ்வாறு நேர்முகப் பரீட்சையில் பல கேள்விகளைக் கேட்பதைப் போல மனம் குழம்பிய குட்டையாகிற்று. குப்புறப் படுத்தவனின் முதுகில் யாரோ தடவுவதைப் போல் இருந்தது. திரும்பிப் பார்த்தான் ஜஹான். என்ன ஆச்சரியம். மேகத் திரைக்குள் ஒளிந்து போவதற்காய் புறப்பட்ட நிலவு அவன் கண் முன்னால் நின்ற மாதிரி றிபானா நின்று கொண்டிருந்தாள். ஆச்சரியத்தால் சற்றே நிமிடம் தலை சுற்றிப் போனான்.

**-பொத்துவில் தாஜஹான்**

"ஜஹான் நீங்க நினைப்பது போல நான் வேறு ஒருத்தனுக்குப் போக மாட்டேன். காதலை வாழவைக்கப் பிறந்தவள் நான். உம்மா வாப்பா குடும்பத்தை விட்டு, வந்திருக்கிறேன். நான் எப்படி உங்களை வெறுப்பேன். பள்ளிக் காலத்தில் இதயத்தை தந்துவிட்டுச் சொல்லிக்கொள்ளாமல் போய்விடுவேனா? எனக்கு நீங்கதான் வேணும்...நீங்கதான் வேணும் ஜஹான்..."ஓவென்று கட்டியணைத்து அழுதாள் றிபானா.

சந்தோஷத்தில் இருவரும் மெய்மறந்தார்கள்.

*(யாவும் கற்பனை)*

# கண் கெட்டபின்...!

கரிகாலன் அவர்களுக்கு,

உமக்கு மரியாதை கொடுக்கத் தேவையில்லைத்தான். ஆனால் நீர் என் பழைய காதலியின் தந்தை என்பதற்காக சிறிதளவாவது அதைக் கொடுக்கிறேன். பிழைத்துப் போகவும். உம்முடைய மகள் உமாவை நான் பல வருடங்களாக உயிருக்குயிராக நேசித்தேன். அவளும் அப்படித்தான். காதலுக்குக் கண்ணில்லை. அதனால்தான் அந்தஸ்தில் பல மடங்கு உயர்ந்த உம் மகளை வங்கியில் சம்பளம் வாங்கும் நான் காதலித்தேன். உமா என்னை உயிராக நினைத்தாள். நாங்கள் எந்தத் தடையோ தடங்கலோ இல்லாமல் நீலவானில் நிம்மதியாகச் சிறகடித்துப் பறந்து திரிந்தபோதுதான் உம்முடைய கார் டிரைவர் எங்களைப் பார்த்துவிட்டான். விசுவாசமான அவன் விஷயத்தை உம்மிடம் சொல்லி விவகாரமாக்கிவிட்டான். நீரும் உம்முடைய பண பலத்தினால் என் வேலைக்கு உலை வைத்தீர். மணமாலை மயக்கத்திலிருந்த உமாவை ஆலையில் சிக்கிய கரும்பு போல அடித்துத் துவைத்தீர். வேலையிழந்து வேதனையால் வெந்து நொந்து போன என்னைக் கண்டு கைக்கொட்டிச் சிரித்தீர். எங்களின் தூய்மையான காதலைத் துண்டாடிவிட்டு, நீர் மட்டும் நிம்மதியாக பஞ்சணையில் துயில்கொள்ளலாமென்று நினைக்காதீர். அடிபட்ட இந்த வேங்கை பழி வாங்காமல் விடாது. நான் வசதியில்லாதவன்தான். ஆனால் வலிமை மிக்கவன். தனம் இல்லாதவன்தான். ஆனால் தன்மானம் உள்ளவன். உமது மகள் ஒரு ரம்பையோ, ஊர்வசியோ அல்ல. உமது மகளை விட அழகான, அறிவுள்ள ஒருத்தியை என்னால் கைப்பிடிக்க முடியும். ஆனால் காதலை மதிக்கும் எனக்கு உமது மகளின் உண்மையான அன்பை மிதிக்க ஆசையில்லை. எனவே இப்போது சொல்லுகிறேன். நன்றாக மனதில் இருத்திக்கொள்ளும். இன்னும் இரண்டு வாரத்துக்குள் உமது மகளை நான் கைப்பிடிப்பேன். உம்முடைய அந்தஸ்து கௌரவத்துக்கு ஊறு விளைவிப்பேன். ஊரே சிரிக்கும் வண்ணம் உமது மானத்தை வாங்குவேன். இது சத்தியம். முடிந்தால் உமது பண பலத்தால் என் மனப் பலத்தை தகர்த்து - என்னை வெற்றிகொள்ள முயற்சித்துப் பாரும்!

"அறிவழகன் -

கடிதத்தை தபால் பெட்டியில் போட்டுவிட்டு மனச்சுமை இறங்கியவனாக வீட்டை நோக்கி நடந்தான் அறிவழகன்.

மறுநாள் - வாசிகசாலை செல்வதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டு வீதியில் நடந்து சென்றான். அப்போது அந்த விலை மதிப்புள்ள வெளிநாட்டு சொகுசுக் கார் அவனை உரசியவாறு நிற்க, அதிலிருந்து கரிகாலன் இறங்கினார்.



-பாலா.சங்குபிள்ளை, ஹட்டன்.

"மிஸ்டர் அறிவழகன், உங்கக்கூட பேசணும். கொஞ்சம் என் கூட காரில் ஏறுறீங்களா?"

"............"

"பயப்படாதீங்க. எல்லாம் நல்ல விஷயம்தான். இப்படி என் அருகே உட்காருங்க. நான் உங்களுக்கு வச்ச பரீட்சையில நீங்க பாஸாகிட்டீங்க. அதாவது எனக்கு மாப்பிள்ளையா வர்றவர் அந்தஸ்துல, பணத்துல பெரியாளாயில்லாட்டியும் பரவாயில்லை. பொறுமைசாலியா எந்தத் துன்பத்தையும் எதிர்நோக்குற தைரியசாலியா இருக்கணும். உங்களோட வேலைக்கு வினை வச்சேன். அடுத்தடுத்து தொல்லைகள் கொடுத்தேன். ஆனா ரொம்ப அமைதியாயிருந்தீங்க. வேறொருத்தனாயிருந்தா இந்நேரம் என் பொண்ணையே கடத்தியிருப்பான். ஆனா, நீங்க கண்ணியத்தை கைவிடலை. இனி நீங்க கவலைப்படத் தேவையில்லை. ஆண் வாரிசில்லாத எனக்கு என் சொத்துக்களை பாதுகாக்கவும், என் மகளை கண் போல காக்கவும் நீங்க கிடைச்சிட்டீங்க. நாளைக்கே நீங்க உங்க அப்பா, அம்மாவோட பொண்ணு கேட்க வரலாம்! என்ன சரிதானா....?"

கரிகாலன் பேசிக்கொண்டே போனார். அறிவழகனோ ஒரு வார்த்தை கூடப் பேச முடியாதவனாக ஊமையாக இருந்தான். அவனைப் பொறுமைசாலி, அமைதியானவனென்றெல்லாம் கரிகாலன் பாராட்டுகிறார். ஆனால் ஆத்திரத்தால் அறிவு மழுங்கி, அவரை மிக மோசமாக ஏசி, ஒரு கடிதத்தை நேற்றுத்தான் தபாலிலிட்டிருக்கிறான். அந்தக் கடிதம் இன்று மாலையோ அல்லது நாளையோ அவர் கைக்கு எட்டப் போகிறது. அப்புறம் என்ன நடக்கும்? 'கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை,' என வாழ்நாள் முழுதும் கவலைப்படுவதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும்?

*(அனைத்தும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# தீய எண்ணங்கள் அழிவைத் தரும்!

சில சமயங்களில், மற்றவர்கள் இன்னொருவரை நசுக்க, கீழே தள்ளப் பார்ப்பார்கள். அந்த ஒருவரின் எதிர்பார்ப்புக்கள், கனவுகள் மற்றும் எதிர்கால வாழ்க்கை ஆகியவையெல்லாம் வீணற்றுப் போகின்றன.

தீய எண்ணங்களை உள்ளடக்கிய ஒருவர், மற்றவரை எள்ளி நகையாடும்போதும் இதர வழிகளில் பரிகாசம் செய்யும்போதும் தன்னையும் அறியாமல், தனக்கே அழிவைத் தேடிக்கொள்ள முயற்சிப்பார்.

எந்தக் காரணங்களாக இருந்தாலும் சரி, ஒருவர் தன்னை முன்னேற்றிக்கொள்ள முயற்சிகள் செய்து, வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமாக இருக்க முயற்சிக்கும்போதுதான் அனைவரது தாக்குதல்களுக்கும் ஆளாக நேரிடுகிறது.

சில சமயங்களில் இத் தாக்குதல்களை நேரடியாக எதிர்கொள்ளும் தேவை ஏற்படுகிறது. ஆனால் ஒரு நீண்ட கால அளவில் எதிர்கொண்டு சமாளிக்கும்போது அது தோல்வியாவதில்லை.

இம்மாதிரியான மனிதர்கள், ஒருவருக்கு குறிப்பாக என்னதான் செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள்? ஒருவர் தன் வாழ்க்கையில் கீழ் நோக்கிச் செல்லும் நிலையினைக் குறைக்க இவர்கள் முயலுவார்கள்.

**"ஓஷோவின் பொன் மொழிகள்" என்ற நூலிலிருந்து....**

**நுளம்புக் கடிக்கு என்ன செய்கிறீர்கள்?**

-து.பிரபாஹர், ஹப்புத்தளை.

சொறிந்துகொள்கிறேன்.

**மகேஸ்வரன் எம்.பி.யைக் கூப்பிட்டு 'டோஸ்' கொடுத்திருக்கிறாரே ஐ.தே.க. தலைவர்?**

-கே.கிருஷ்ணா, வவுனியா.

ஆனானப்பட்ட வன்னித் தலைமையின் 'டோஸ்'களையே சமாளித்து, எம்.பி.யாகிப் பிழைத்தவர் அவர். ஐ.தே.க.வுக்கும் ஆதரவாய் நாலு துள்ளுத் துள்ளிச் சமாளித்துவிட்டு, 'யாவாரத்தை'த் தொடர்வார் அந்தத் தமிழ் விண்ணர்!

**கில்லி, மதுர, திருப்பாச்சி வரிசையில் 'சுக்ரன்' படமும் மாபெரும் வெற்றி பெறுமா?**

-எம்.எம்.இர்.'.பான், குருநாகல்.

தன் அப்பாவை விஜய் கூட அந்தளவுக்கு நம்புவதில்லை.

**கவிதை?**

-கோபி பிரியா, மொறகொல்ல.

கண்ணுக்குள் புகுந்து மனதுக்குள்ளிருந்து வெளியேறும் வார்த்தைகள்.



சானியா

**எல்லா வெளிநாடுகளும் "பேச்சு வார்த்தையைத் தொடங்குங்கள்" என்று பொத்தம் பொதுவாகச் சொல்கிறார்களே தவிர, "அவர்கள் கேட்டபடியே இடைக்கால நிர்வாகத்தைக் கொடு" என்று அரசாங்கத்தை நெருக்குகிறார்களில்லையே? போதாக்குறைக்கு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளச் சம்மதிப்பதும், "கொலைகள் செய்யாதே, சிறுவர்களைப் படைக்குச் சேர்க்காதே" என்று கூப்பாடு போடுவதுமாக அல்லவா இருக்கிறார்கள்! இதனால் எங்கள் தரப்பில்தான் ஏதோ பிழையிருக்கிறது என்றல்லவா ஆகிவிடும்?**

-கு.ரமணன், கொழும்பு - 06.

கொஞ்சம் பொறுங்கள். "அடி" கொடுக்க எல்லாம் சரியாய் வரும்!

**ஒவ்வொரு ஊரிலுமிருந்து மண் எடுத்து தன் காதலியின் பொம்மை செய்வதாக ஒரு பாட்டைக் கேட்டிருக்கிறீர்கள் தானே? உங்கள் காதலியின் பொம்மை செய்வதானால் எங்கிருந்து மண் எடுப்பீர்கள்?**

-ந.கனகலிங்கம், பொகவந்தலாவ.

தலையில் இருந்து.

**மனிதர்கள் தவறுகள் செய்யக் காரணம் என்ன?**

-இ.கமால்தீன், ஏறாவூர் - 03.

தப்பித்துக்கொள்ளலாம் என்ற தவறான எண்ணம்தான்!

**ஒருசில சாமியார்கள் செய்யும் தவறால் எல்லாச் சாமியார்களையும் எள்ளிநகையாடுவது சரியா?**

-பி.ராதாகிருஷ்ணன், கொட்டாஞ்சேனை.

சாமியாராகப் போய் குடும்ப வாழ்க்கையை நினைத்துக்கொண்டிருப்பதை விட, குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டு சாமியை நினைத்துக் கொள்பவர்களுக்கே என் மரியாதை.

**இந்தியா புலிகளுடனான போரில் சூடு கண்ட பூனை என்றும், திரும்பவும் ஈழப் பிரச்சினையில் தலையிடுவதை நினைக்கக் கூடாது என்றும், ஐந்து வருடங்களுக்கு முன் டில்லியில் எடுத்த தீர்மானத்திற்கு மாறாக, இலங்கை அரசாங்கத்துடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள எத்தனிக்கக் கூடாது என்றும் மிரட்டல் தொனியில் நம் பத்திரிகைகள் இந்தியாவை எச்சரிப்பதால் என்ன விளைவு ஏற்படும்? இந்தியா பணிந்து விடுமா?**

-அன்ரன் செல்வராஜ், கொழும்பு - 05.

இந்தியா என்ன செய்யும், சர்வதேசம் என்ன செய்யும் என்பதைப் பற்றியெல்லாம் நமக்கென்ன? 'எந்தக் கொம்பனையும் எதிர்ப்போம்' என்ற வீரப் பெருமிதம் ஒன்று போதாதா? நாங்கள் சொல்வதை மீறி ஒப்பந்தம் கிப்பந்தம் செய்தால் யுத்தம் மூளும். அதற்கு வெளிச்சக்திகள்தான் காரணம் என்றால் நம் மக்கள் சந்தோசமாக அழிவுகளைச் சகித்துக்கொள்ள மாட்டார்களா! நம் வீரத்தை எண்ணி இறும்பூதெய்தியபடியே அவலங்களை, போரின் வதைகளை மக்கள் தாங்கிக் கொள்ளலாம். அவலங்கள் இருந்து கொண்டிருந்தால், அதைச் சொல்லிப் புலம்பும் இன்பமும் கிடைத்துக் கொண்டேயிருக்கும். போருக்குள் வாழ்வதே வீரப் பெருமிதல்லவா!

**புலிகளும் பேராசிரியரும் எவ்வளவுதான் கிடுக்கி போட்டுக் கிண்டினாலும், கூட்டமைப்பு எம்.பி.க்களை இயக்க முடியாமலிருக்கிறதே! தேர்தல் நேரம் பொங்கிய இனவுணர்வெல்லாம் வடிந்து தங்கள் தங்கள் பாட்டைப் பார்த்துக் கொண்டால் போதும் என்று ஆகிவிட்டார்கள். எதனால் இப்படி ஆனார்கள்?**

-எஸ்.அஹமட் இப்ராஹீம், ஏறாவூர் - 03.

விடுங்கள். வெந்த புண்ணில் வேல் பாய்ச்ச வேண்டாம்.

## சிந்தியா பதில்கள்

**த்ரிஷாவின் புன்னகை, சினேகாவின் பார்வை, சோனியாவின் பாந்தம், சதாவின் துடுக்கு, அஸினின் துறுதுறுப்பு ஆகியவற்றோடு ஒரு காதலி கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறேன். இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?**

-ஆர்.ஆர்.மூர்த்தி, வட்டகொடை.

நன்றாக இழுத்துப் போர்த்திக்கொண்டு கனவு காண வேண்டும்.

**கடைசியில் எல்லோருக்கும் ஆறடி நிலம்தானே சொந்தம்?**

-மணிவேல் ருத்ரா, மாத்தளை.

இல்லை. பக்டீரியாக்கள்தான் சொந்தம்.

**இந்தியாவின் புதிய டெனிஸ் நட்சத்திரம் சானியா மிர்ஸா பற்றி?**

-எம்.எஸ்.எம்.பாஹிர், வெலிகம.

"நடிகைகளை விட அழகாயிருக்கிறீர்களே..... யாராவது படத்தில் நடிக்கக் கூப்பிட்டால் போவீர்களா?" என்று நிருபரொருவர் கேட்டதற்கு, "விளையாட்டைப் பற்றி மட்டும் கேளுங்கள், வீட்டிலே கண்ணாடி இருக்கிறது" என்று பதில் சொன்ன புத்திசாலித்தனம் பிடித்திருந்தது.

**தடைக் கற்களைப் படிக் கற்களாக்குவது எப்படி?**

-ஆர்.கோபிநாத், கம்பளை.

அந்த ஊரில் ஒரே ஒரு துணிக் கடைதான் இருந்தது. அதில் நல்ல வியாபாரம் நடந்தது. கடைச் சொந்தக்காரன் மகிழ்ந்திருந்தான். திடீரென ஒருநாள் அவனுக்குச் சோதனை வந்தது. அவனது கடைக்கு வலது பக்கத்தில் இன்னொரு துணிக் கடை வந்துவிட்டது. விற்பனை சற்றுக் குறைந்தாலும், அவன் மனதைத் தேற்றிக் கொண்டான். வலது திசையிலிருந்து வருகிறவர்கள், வலது பக்கக் கடையில் துணி எடுத்துக்கொள்ளட்டும். இடது பக்கமிருந்து வரும் வாடிக்கையாளர்கள் எல்லாம் என் கடைக்குத்தானே வருவார்கள்....."

இப்படி அவன் மனதைத் தேற்றிக் கொண்ட சில நாட்களிலேயே பேரிடியாக இடது பக்கமும் ஒரு துணிக் கடை முளைத்தது. இப்போது இரு பக்கக் கடைகளிலும் வியாபாரம் அமோகமாக நடந்தது. நடுவில் இருந்த இவன் கடைக்கு யாரும் வருவதில்லை.

சிறிது யோசித்த அவன், இந்தத் தடைக் கற்களையே படிக் கற்களாக மாற்றினான். அதாவது, தன் கடையின் பெயர்ப் பலகையை இப்படி மாற்றினான்: "பிரதான வாயில்" - இதுதான் அவனது கடையின் புதிய பெயர். இப்போது வருகிறவர்கள் நினைத்தார்கள் - மூன்றும் ஒரே கடைதான் போலிருக்கிறது. நடுவில் இருப்பதுதான் பிரதான வழி என்று அவன் கடையில் நுழைந்துகொண்டிருந்தார்கள்.

(அப்பாடா! நீண்ட நாட்களாக நீதிக் கதை எங்கே என்று கேட்டுக்கொண்டிருந்த ஹப்புத்தளை மனோ கோபாலனும் இந்தப் பதிலைப் பார்த்துக்கொள்ளவும்.)

## இலக்கிய நயம்

"சாவுகளும் நிற்குதில்லை. இந்த ஹர்த்தால், கடையடைப்புகளும் நிற்குதில்லை" என்று சத்தமாகச் சொல்லியபடியே சமையலறைக்குள் பாத்திரங்களை உருட்டிக் கொண்டிருந்தாள் சங்கவி.

எழுதிக்கொண்டிருந்த மிதுலன் குற்ற உணர்வோடு பேனையை மூடி வைத்து

# "உரிமை பெறத் தகு தலைமை - மக்களுக்கு உபத்திரவம் தரும் வல்லாண்மையிடம் மாட்டிக்கொண்டது"



விட்டு எழுந்து சமையலறை நோக்கிப் போனான். "என்னப்பா, ஏதாவது உதவி செய்ய வேணுமே?" என்று மெல்லக் கேட்டான். சங்கவி இவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் பாத்திரங்களைக் கழுவுவதில் ஈடுபட்டாள். "கடைக்குப் போய்ச் சாமான் எதுவும் வாங்க முடியவில்லை. இன்றைக்கு என்ன சமைப்பதென்றும் தெரியவில்லை.... இருக்கிற கரைச்சலுக்கு மேலால கடையை அடையுங்கோ, சோகத்தைக் கொண்டாடுங்கோ என்றும் ஆக்கினை வேற....."

**தருவது முழுநிலவன்**

சலிப்புடன் கையைத் தூக்கி நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொண்டாள்.

"எழுச்சி ஊர்வலங்கள், ஹர்த்தால்கள், கடையடைப்புகள், சோக முழக்கங்கள் எல்லாம் எதிர்காலச் சந்தோச வாழ்க்கையை அமைக்க என்று சொல்லிச் சொல்லி இன்று சாதாரண சனத்தைக் கடுமையாகத் தண்டிப்பதாகவே மாறிவிட்டன" என்று சொல்லியபடி கழுவிய பாத்திரங்களை நீர் வடியுமாறு அடுக்கி வைத்தான் மிதுலன்.

"சண்டையை நிறுத்தியிருக்கிறம் எண்டு சொல்லிக்கொண்டும் எதுக்காகச் சனத்தை வதைக்க வேணும்?"

"சண்டையை நிறுத்தியிருக்கிறது சனத்துக்காக இல்லை. அவரவர் அடுத்த கட்டத்துக்குத் தயார்படுத்திக்கொள்ளுறதுக்காகத்தான்!"

சங்கவி கைகளைச் சேலை முந்தானையில் துடைத்தபடியே அவனருகில் வந்து அடங்கிய குரலில் சொன்னாள், "யுத்தத்தால் ருசி கண்டவர்கள், அது இல்லாத சாதாரண வாழ்க்கையை நம்ப முடியாதவர்கள் எப்போதும் மக்கள் மனதில் விரோதத்தை ஊட்டிக்கொண்டே இருக்கிறார்கள். விரோதியையும் நிலைமைக்குத் தக்கவாறு உருவாக்கியபடியே இருக்கிறார்கள். அவர்கள் மேல் விரோதத்தை ஏற்றியபடி தன் சண்டை மூலமான இருப்புக்கு வழியுண்டாக்கிய வண்ணமிருக்கிறார்கள்....."

"அதனால்தான் குரோதமான பேச்சுக்களையும் கொலைகளையும் அதன் சாட்டில் ஊர்வலங்கள், ஹர்த்தால்களையும் நடத்தி மக்களை உருவேற்றிய நிலையில் வைத்திருக்கிறார்கள் என்கிறாயா? தேசியத்திற்கு எதிரானவர்கள் செய்யும் ஹர்த்தால்களுக்கும் நம்மவர்களின் ஹர்த்தால்களுக்கும் வித்தியாசமில்லை என்கிறாயா?" மிதுலன் சிரித்தபடியே அவளைப் பார்த்துக் கேட்டான்.

"எங்கட நாளாந்த வாழ்க்கையை ஸ்தம்பிக்க வைச்சுத்தான் தங்கட இருப்பைக் காட்ட வேண்டியது முக்கியமான பிறகு, தோழர் ஊர்வலமென்ன, துரோகி ஊர்வலமென்ன, எல்லா ஊர்வலங்களும் விரோதி ஊர்வலங்கள்தான்!"

"அப்போ, கொல்லப்பட்டவர்களுக்கான நியாயத்தை எப்படிக் கேட்பது?"

"யார் யார் கொலைகளைத் தடுக்க வேண்டிய ஸ்தானத்திலிருக்கிறார்களோ, அவர்கள் எல்லார் முன்னிலையிலும் போய் நியாயத்தைக் கேட்டுவிட்டுப் போகலாம். ஆனால், 'உங்களுக்காகச் செத்து விடுதலை எடுத்துத் தரவே நாங்கள் இருக்கிறோம்' என்று சொல்லிக் கொள்கிறவர்கள், தங்களில் ஒருவர் செத்தவுடன் மக்களை ஊர்வலம், கடையடைப்பு என்று வதைப்பது ஏன்? இப்படிச் சோகத்தைத் திணித்து, சோகத்தை உருவாக்கி மக்கள் மேல் சுமத்திக் கொண்டிருக்கிறவர்களை நினைத்தால்தான் அருவருப்பாயிருக்கிறது" என்று முகத்தைச் சுளித்தபடி வெளியே வந்தாள் சங்கவி.

மிதுலனும் கூடவே வந்தான்.

"எங்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள உறுதியான ஒரு தலைமை தேவையாயிருந்தது உண்மைதான். ஆனால், அது உறுதியை மட்டுமே கொண்டு மக்களை உபத்திரவங்களுக்குள் தள்ளிவிட்ட ஒரு வல்லாண்மையிடம் போய் மாட்டிக்கொண்டுவிட்டது."

"எதிரியைப் பிரமாண்டமாக்கி, விடுதலை என்பதையும் வேறெதையும் யோசிக்காதளவுக்குச் சுயநலமானதாக்கி, விரோதம் என்ற சேற்றுக்குள் சிக்குப்பட்டு மீள முடியாத ஆவேசத்தில் எல்லா நலங்களையும் வாழ்வையும் இழந்தவர்களாகிவிட்டோம். யாரை நோவது?" என்று சலிப்போடு கூறினாள் சங்கவி.

"யாரை நோவது? நமக்கு வாய்த்த தலை சரியில்லை என்பதுதானே உண்மை. ஓட்டுபவன் சரியாக இருந்திருந்தால், வண்டி பள்ளம் மேடுகளில் விழுந்து புரண்டு, ஏற்றிச் சென்றவர்களையெல்லாம் துன்பத்துக்குள்ளாக்கித் தொலைத்துவிடாமல் வழியை இனிதாக்கியிருக்க முடியும். வண்டிக்குள் இருப்பவர்கள் போக வேண்டிய இறுதி இடத்தைத் தவிர வேறெதையும் பார்க்க விரும்பாதவர்களாக, வண்டியோட்டியிடமே எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டு, நொந்து குடலறுபட்டு, பலரை இழந்தும், இருப்பவர்களைத் தற்குறிகளாக்கியும் வீரப் பயணம் போவதான பிரமையில் வீழ்ந்து பட்டுக்கொண்டிருக்கிறோம்.

*கால் பார் கோத்து, நாலத்து*
*இயக்கும் காவற் சாகாடு*
*கைப்போன் மாணின், ஊறு*
*இன்றாகி ஆறு இனிது படுமே*
*உய்த்தல் தோற்றான் ஆயின்,*
*வைகலும் பகைக் கூழ்*
*அள்ளற்பட்டு, மிகப்பல்*
*தீ நோய் தலைத் தலைத் தருமே.*

*(புறம் : 185)*

# உங்களது நெல்லை ஏன் குறைந்த விலைக்கு விற்பனை செய்கிறீர்கள்?

**இது நீங்கள் வியர்வை சிந்தி உழைத்துப் பெற்ற அறுவடையாகும்!**

**இதனை விற்பதற்கு அவசரப்படாதீர்!**

**இடைத் தரகர்களின் ஏமாற்று வேலைகளுக்குள் அகப்படாதீர்கள்!**

## இம்முறை பெரும்போகத்தின் சகல அறுவடைகளையும் உறுதிசெய்யப்பட்ட விலைக்கே வாங்க அரசு தயார்!



அரசாங்கத்தின் நெல்லைக் கொள்வனவு செய்யும் தேசிய வேலைத்திட்டத்துடன் இணைந்துகொள்ளுமாறு விவசாய மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.



உறுதிசெய்யப்பட்ட விலைக்குக் குறைவாக நெல்லை விற்காதீர்கள்!

## ஒரு கிலோ நாடு 15.50

## சம்பா மற்றும் சிகப்புப்பச்சை 16.50

(யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட - கிழக்குப் பகுதிகளில் 1/= ரூபா கூடுதலாக வழங்கப்படும்.)



மேற்படி விலைக்கு தரமான நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு அரிசி ஆலை உரிமையாளர்களும் தயாராக உள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**கமத்தொழில், கால்நடைகள், காணி, நீர்ப்பாசனத்துறை அமைச்சு மற்றும் கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு**


# மைக்கல் ஃபாரடே (1791 - 1867)

## உலகை வியக்க வைத்தவர்கள்

இது மின்சார ஊழி. இந்த ஊழியைச் சில சமயம் விண்வெளி ஊழி என்றும் சில சமயம் அணு ஊழி என்றும் அழைப்பர். எனினும், விண்வெளிப் பயணம், அணு ஆயுதங்கள் ஆகியவற்றின் உள்ளார்ந்த முக்கியத்துவம் என்னவாக இருப்பினும் அவை நமது அன்றாட வாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடவில்லை. ஆனால், மின்சாதனங்களை நாம் அன்றாடம் இடை விடாமல் பயன்படுத்துகிறோம். உண்மையைக் கூறுவதாயின், நவீன உலகில் எந்த ஒரு தொழில் நுட்பமும், மின்சாரத்தின் பயன்பாட்டைப் போல் நம் வாழ்வில் ஊடுருவிப் புகுந்து பரவியிருக்கவில்லை.

மின்சாரத்தை நம் வயப்படுத்துவதற்குப் பல அறிஞர்கள் அருந் தொண்டாற்றியிருக்கிறார்கள். சார்லஸ் அகஸ்டைன் டி கூலோம்ப், அலெக்சாண்டிரோ, வால்ட்டா கோமகன், ஹான்ஸ் கிறிஸ்டியன் ஊர்ஸ்டட், ஆண்டிரியோ மாரி ஆம்பியர் ஆகியோர் அவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர்கள். மற்றவர்கள் அனைவரையும் விட கோபுரம் போல் உயர்ந்து நிற்பவர்கள் மைக்கேல் ஃபாரடே, ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல் ஆகிய இரு பெரும் பிரிட்டிஷ் விஞ்ஞானிகளே ஆவர். இவ்விரு விஞ்ஞானிகளின் பணியும், ஒருவர் பணியை மற்றவர் பணி முழுமையாக்கும் வகையில் அமைந்திருந்த போதிலும், இவ்விருவரும் எந்த வகையிலும் உடனிணைந்து பணியாற்றியவர்கள் அல்லர். இவர்கள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட சாதனைகளே இந்தப் பட்டியலில் அவர்கள் உயர்ந்த இடத்தைப் பெறுவதற்குப் போதுமான தகுதிகள் எனலாம்.

இங்கிலாந்திலுள்ள நியூவிங்டனில் 1791ஆம் ஆண்டில் மைக்கேல் ஃபாரடே பிறந்தார். ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தமையால் இவர் பெரும்பாலும் தாமாகவே கல்வி பயின்றார். தமது 14ஆம் வயதில் புத்தகம் கட்டுமானம் செய்வதிலும், புத்தகம் விற்பனை செய்வதிலும் ஒரு பயிற்சியாளராகச் சேர்ந்தார். அப்போது ஏராளமான நூல்களைப் படிப்பதற்கு இவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. இவர் தம் 20ஆம் வயதில் புகழ்பெற்ற ஆங்கிலேய விஞ்ஞானி சர் ஹம்ஃப்ரி டேவி என்பவரின் சொற்பொழிவுகளைக் கேட்டார். அதிலிருந்து அறிவியலில் இவருக்கு ஆர்வம் பிறந்தது. தம்முடைய ஆர்வத்தை விளக்கி இவர், டேவிக்குக் கடிதம் எழுதினார். இதன் விளைவாக டேவியின் உதவியாளராக இவருக்கு வேலை கிடைத்தது. சில ஆண்டுகளுக்கு இவர் தாமே சொந்தமாகப் பல கண்டுபிடிப்புகளைச் செய்யலானார். இவர் கணிதத்தில் புலமை பெற்றிருக்கவில்லையென்றாலும்,



மைக்கேல் ஃபாரடே

பரிசோதனை இயற்பியலறிஞர் என்ற முறையில் இவர் ஈடிணையற்றவராகத் திகழ்ந்தார்.

மின்சாரவியலில் தமது முதலாவது முக்கியமான புத்தமைப்பினை ஃபாரடே 1821ஆம் ஆண்டில் செய்தார். அதற்கு ஈராண்டுகளுக்கு முன்னர், அருகிலுள்ள கம்பியில் ஒரு மின்னோட்டம் பாயுமானால் ஒரு காந்தத் திசை காட்டியின் முள் (Magnetic Compass) ஒரு பக்கமாகத் திரும்பும் என்பதை ஊர்ஸ்டட் கண்டறிந்திருந்தார். இதிலிருந்து, காந்தத்தை நிலையாகப் பொருத்தி வைத்துவிட்டால், கம்பி இயங்கக் கூடும் என ஃபாரடே ஊகித்தார். அந்த ஊகத்தின் அடிப்படையில் ஆராய்ச்சி செய்து புதுமையான சாதனம் ஒன்றை உருவாக்குவதில் அவர் வெற்றி கண்டார். இந்தச் சாதனத்தில், கம்பியின் வழியாக ஒரு மின்னோட்டம் பாய்ந்து கொண்டிருக்கும் வரையிலும் ஒரு காந்தத்தின் அருகாமையில் ஒரு கம்பி தொடர்ந்து சுழன்றுகொண்டே இருந்தது. ஃபாரடே கண்டுபிடித்த இந்தச் சாதனந்தான் முதலாவது மின்சார மோட்டார் ஆகும். ஒரு பருப்பொருளை இயங்கச் செய்வதற்கு ஒரு மின்னோட்டத்தைப் பயன்படுத்திய முதலாவது சாதனம் இதுவாகும். ஃபாரடேயின் இந்தச் சாதனம் இன்று பத்தாம் பசலியாகத் தோன்றியபோதிலும், இன்றைய உலகில் பயன்படும் மின்சார மோட்டார்கள் அனைத்திற்கும் இதுதான் மூதாதை என்பதில் ஐயமில்லை.

இந்தக் கண்டுபிடிப்பு மாபெரும் முன்னேற்றமாக அமைந்தது. ஆனால், அந்நாளில் பழைய வேதியியல் மின்கலங்கள் வாயிலாகவே மின்சார உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. மின்சார உற்பத்திக்கான வேறு சிறந்த முறை எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, மின் உற்பத்திக்கான வேறு முற்போக்கான முறை கண்டுபிடிக்கப்படாதிருந்த வரையில் ஃபாரடே கண்டுபிடித்த மின்சார மோட்டாருக்கு நடைமுறையில் பயன்பாடு மிகக் குறைவாகவே இருந்தது. காந்தத்தைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் முறையொன்று இருக்க வேண்டும் என்று ஃபாரடே உறுதியாக நம்பினார். அத்தகைய முறையினைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டார். நிலையாக இருக்கும் ஒரு காந்தம், அருகாமையிலிருக்கும் ஒரு கம்பியில் ஒரு மின்னோட்டத்தைத் தூண்டாது என்பது அறியப்பட்டிருந்தது. ஆனால், ஒரு கம்பி வளையத்தினுள் ஒரு காந்தத்தைச் செலுத்தினால், அந்தக் காந்தம் இயங்கிக் கொண்டிருக்கும் வகையில் அந்தக் கம்பியில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருக்கும் என்பதை 1831ஆம் ஆண்டில் ஃபாரடே கண்டுபிடித்தார். இந்த விளைவுக்கு "மின்காந்தத் தூண்டல்" (Electrimagnetic Induction) என்று பெயர். இந்தத் தூண்டலைக் கட்டுப்படுத்தும் விதியினையும் ஃபாரடே கண்டுபிடித்தார். இந்த விதி "ஃபாரடே விதி" (Faraday Law) என அழைக்கப்படுகிறது. இந்த விதியைக் கண்டுபிடித்தது, ஃபாரடேயின் மிகப் பெரிய தனிச் சாதனை எனக் கருதப்படுகிறது.

(வியப்புக்கள் தொடரும்....)

---

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
-காதில பூ கந்தசாமி-

டும்.....டும்...டும்....டும்....டும்...டும்..... இதனால் ஊரிலுள்ளவையளுக்கெல்லாம் சொல்லிக்கொள்ளுகிறது என்னவெண்டால், உங்கள் பெயர்களை நேரத்துக்குப் பதிவு செய்துகொள்ளுங்கோ.....இன்னும் கொஞ்சப் பேருக்குத்தான் உந்த அதிர்ஷ்டம் அடிக்கப்போகுது. ஆகையால தாமதிக் காதயுங்கோ. அவசரம் அவசரம்.....இது மிகவும் அவசரம்.....

டும்....டும்...டும்...இந்த வேண்டுகோளா னது கா.பூ.வின்ர காட்டுக் கத்தல் எண்டு நினைச்சுப் போடாதயுங்கோ. இது காட்டுக்க இருந்து வந்த கட்டாயமான வேண்டுகோள்... அதுவும் தேசியத் தலைவர் தன்ர சோத்துக் கையாலேயே நாலு விரலுக்கு நடுவால பேனையைப் பிடிச்சு மூண்டாவது ஒற்றைக்கும் பதியிற அளவுக்கு அழுத்தமா எழுதித் தந்த வேண்டுகோள் எண்டதை மக்களின்ர பெயரால அறிவிக்கிறோம்.....டும்...டும்....டும்....

என்ன...? நான் இவ்வளவு தொண்டை கிழியக் கத்திறன். ஒருத்தரும் அரசியல் பணியகத்தை நோக்கி தலைதெறிக்க ஓடாமல் விடுப்புப் பாக்கிறாங்கள். ஒருவேளை நான் எனக்கு வந்த மெஸேஜ்ஜை சரியாச் சொல்லாம எங்கட ஊடகங்கள் மாதிரி ஒண்டை ரெண்டா உளறிப்போட்டனோ! இருக்காதே! கா.பூ தலையைச் சுத்தி மூக்கைத் தொடுகிறட மாதிரிச் சுத்திவளைச்சு நளினமாச் சொன்னாலும் விசயத்தைச் சொல்லிப் போடுவனே. அதாலதான் அவரும் தன்ர கையெழுத்தில் எழுதி நேரே என்ர பெக்ஸ்ஸுக்குப் போட்டவர். ஆகா.....அவர் கவனியுங்கோ எண்டு சொன்னாலே கதையை முடிக்கிறதுக்கு ஆக்கள், நான் நீயெண்டு அடிபடுகிறாங்கள். நான் என்னடாவெண்டால் அவர் எழுத்தில போட்டதயே சரியாச் சொல்லயில்லைப் போல இருக்கே! நான் சொல்லிறது சரியோ, பிழையோவெண்டு யாரிட்டையும் அபிப்பிராயம் கேக்கப் போனாலும் என்னிட்ட ஒரு விதமாச் சொல்லிப்போட்டு அவரிட்ட அவிச்சுப் போடுவாங்கள். அப்புறம் எனக்கு தாறதாச் சொல்லியிருக்கிற அந்த சாட்டிபிக் கேற்றும் கிடைக்காமப் போயிடுமோ......

என்னடாப்பா வம்பாப் போச்சுது அவர்ர அறிவித்தலைச் சொல்லிறன் எண்டு பொறுப்பெடுத்துப்போட்டு..... இப்ப பயித்தியம் பிடிக்கும் போல இருக்கு.....அவரிட்டையே. கேக்கலாமெண்டால்..... அவர், என்ன நோக்கத்தில உந்த அறிவித்தலைச் சொன்னவரெண்டதையே மறந்திருப்பார். அவரை ரென்சனா வச்சுக்கொள்ளிறதே பொட்டருக்கு வேலையாப் போச்சு.

ஆ......இப்ப ஞாபகம் வந்திட்டுது... அதுதானே பாத்தன். எனக்கே...எப்பிடி உந்த மிஸ்டேக் வந்ததெண்டு..... கா.பூ. தலையைச் சொறியிறான் எண்டு விடுப்பே பாக்கிறியள்? இப்ப பாருங்கோ, தாறன் கடுக்காய்.

டும்.....டும்...மகா ஜனங்களே.....நான் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லப்போறன். அதாகப்பட்டது தேசியத் தலைவற்ர ஒப்பத்தோடை ஒரு சிலருக்கு மாத்திரம் வழங்கப்படுகிற தேசப்பற்றாளர் பட்டம் அல்லது மாமனிதர் பட்டம் உது ரெண்டுக்கும் இப்ப கிராக்கி அதிகரிச்சுட்டுது. இதுவரைக்கும் உந்தப் பட்டத்தை மிக.....மிக....மிக... முக்கியமானவையள்தான் பெற்றவை. இப்ப இதுக்காக பேராசிரியர்மாரும் போட்டி போடுகினம். அது மட்டுமில்லை, கூத்தமைப்பு எம்.பி.மாருக்கும் அதன் மேல ஒரு குறியாயி ருக்கு. அட உந்தச் சுப்பனுக்கு குடுத்தாலும் மிஞ்சிமிஞ்சிப் போனாலும் கொஞ்சமாவது மிஞ்சும் எண்டுதான் யோசிப்பியள். உங்கட அந்த துக்குனூண்டு நப்பாசையிலையும் மண்ணை அள்ளிப் போட்ட சம்பவந்தான் தலைவற்ற மாமாவுக்கு - அதுதானுங்கோ வதனி அக்காவின்ர தேப்பனாருக்கும் தேசப்பற்றாளர் பட்டம் கொடுக்கப்பட்டிருக்கு. இப்ப தெரியுதோ வில்லங்கம் எங்க ஆரம்பிக்குதெண்டு. இனி உந்தப் பட்டம் அவையளுக்கு பொண்ணு குடுத்த அல்லது மாப்புள்ளை குடுத்த மாமனார் மாமியாருக்கும் வழங்கப்படப்போகுது. அப்பிடிப் பாத்தாலே கணக்கை உங்கட ரெண்டு கையையும் மடிச்சு எண்ணிப் பாருங்கோ. அதையும் தாண்டி எதிர்காலத்தில ஏனைய உறவு களுக்கும் உந்தப் பட்டம் குடுக்கிறது சம்பந்தமாக அடுத்த தடவை அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வரயுக்க, அவர் கள்ளுக் குடிக்காம நிதானமா இருக்கேக்க பரிசீலிக்கிறதுக்கும் திட்டமிடப்பட்டிருக்கு. ஆகையால இயக்கத்தில் கிட்டத்திலையோ, தூரத்திலையோ உறவு வச்சிருக்கிறவையும் உறவு வைக்க விரும்பிறவையும் உந்த பட்டம் வழங்குகிற பரிசீலனையில முன்னுரிமை வகிப்பினம். ஏனையவை நீண்ட காலத்துக்குச் சகிப்புத் தன்மையை வெளிக்காட்டினால் அதையும் ஒரு தகுதியாகக் கருதுவினம் அதில்லாமல் உங்களுக்கு பல விசேட தள்ளுபடிகளும் உண்டு. ஆகவே மகா ஜனங்களே! என்ர முகத்தைப் பாத்துக் கொண்டிருக்காம பின்னங்கால் பிடரியில அடி பட்டாலும் அது யாரோ விடுதலைக்காக விரட்டிறான் எண்டு நினைச்சுக்கொண்டு ஓடுங்கோ....விண்ணப்பப் படிவங்களை நிரப்பி கையில குடுக்க முடியாட்டியும் ஒப்பீஸுக்க வீசி எறிஞ்சுபோட்டு வாங்கோ.... டும்.....டும்....டும்...டும்....

யாவும் கலப்படமற்ற கற்பனை

---

# இந்த வாரம் உங்கள் பலன்

(03.03.2005 தொடங்கி 08.03.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கும்பம் - சூரியன், வெள்ளி, மேடம் - இராகு, மீனம் - புதன், மிதுனம் -சனி, கன்னி - வியாழன், துலாம் - கேது, தனு - செவ்வாய். சந்திரன் விருச்சிகம், தனு, மகரம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்), தொழில் கஷ்டம், அன்னியர் உதவி, பிரயாண மிகுதி, தேக சுகம் பாதிப்பு, பெரியோர் சகாயம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)
தொழில் நன்மை, பண வரவு, உயர்ந்த நிலை, உறவினர் தொல்லை, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)
தொழில் அலைச்சல், மனக் கலக்கம், செலவு மிகுதி, அன்னியர் நட்பு, உத்தியோகக் கஷ்டம், கடின உழைப்பு, மாணவர் கல்வி மாற்றம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் உயர்ச்சி, பண வரவு, செலவு மிகுதி, மனக் குழப்பம், குடும்ப நன்மை, சுபகாரிய நன்மை, உத்தியோக சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)
தொழில் மந்தம், வீண் பிரயாசம், செலவு மிகுதி, உயர்ந்தோர் நட்பு, வெளியிட வாழ்க்கை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், புதிய கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)
தொழில் நன்மை, காரியானுகூலம், தூர இடப் பயணம், வெளியிட வாழ்க்கை, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்வு, வெளியிடக் கல்வி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)
தொழில் மந்தம், செலவு மிகுதி, பணியாளர் தொல்லை, கடன் பயம், குடும்ப கஷ்டம், உத்தியோக சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)
தொழில் பலிதம், வரவு மிகுதி, மனக் குறை நீங்கும், பிரயாண மிகுதி, கவனக் குறைவு, பொருள் கஷ்டம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம் :- 06.

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)
தொழில் நன்மை, வரவு மிஞ்சிய செலவு, தூர இடப் பயணம், அன்னியர் உதவி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழில் கலக்கம், எதிர்பாராச் செலவு, கடன்படல், உறவினர் உதவி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் மகிழ்ச்சி, பண வரவு, காரியானுகூலம், உறவினர் உதவி, மனக் குறை நீங்கும், உத்தியோக சிரமம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.


**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)
தொழில் பலிதம், பணக் கஷ்டம், வீண் துயர், தேக சுகம் பாதிப்பு, வைத்தியச் செலவு, குடும்ப கலகம், உத்தியோக பயம், பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)




# செக்கிங்

அண்மையில் நடந்து முடிந்த ஈராக்கிய தேர்தல் முடிவுகள் எப்படியாகும் என்று அனைவரும் எதிர்பார்த்திருக்கையில், இங்கு காணப்படுவது தேர்தலுக்கு முன் நடந்த ஒரு நிகழ்வே. அமெரிக்க ஆதிக்கத்துக்குக் கீழ் இருக்கும் ஈராக்கிய முதியவர் ஒருவரை, அமெரிக்க இராணுவத்தின் 503ஆம் படையணியைச் சேர்ந்த ஒரு இராணுவச் சிப்பாய் சோதனை செய்யும் காட்சியே இது. இக் காட்சியைப் பார்க்கும்போது நமக்கும் 'ஞாபகம் வருதே.....ஞாபகம் வருதே.....'!



# அனர்த்தம்



படத்தைப் பார்க்கும்போது சுனாமியின் தாக்கம் போல் தெரிகிறதா? இல்லவே இல்லை. இது பருவகால மாறுபாடு காரணமாக கடும் மழையினால் பெருக்கெடுத்த வெள்ளமே. அமெரிக்காவைக் கடுமையாகத் தாக்கிய இப் பருவ மழையானது அமெரிக்காவின் கரையோர மலைப் பிரதேசங்களில் இருந்து வழிந்து ஓடும் வேகத்தில் கரையோரப் போக்குவரத்துச் சாலையை இரண்டாகப் பிரித்துக் காட்டுகிறது. தொடர்ந்து 8 மணித்தியாலங்கள் ஓடிய வெள்ளத்தினால் அமெரிக்காவின் கரையோரப் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது. ஓடிவந்த வெள்ளம் வீசிவிட்டு சென்ற கல்லைப் போக்குவரத்துப் பொலிஸாரும், இராணுவமும் உடைத்து அகற்றும் காட்சியே இது.

# பனிமூட்டம்


உலகில் அனைத்து இடங்களிலும் தற்போது பருவ காலங்கள் திடீர் மாற்றங்களைக் காட்டுகின்றன. அந்த வகையில் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் திடீரென்று ஏற்பட்ட உறை பனியே இது. இத் திடீர் உறை பனியின் தாக்கத்தால் பாதையில் பயணித்துக்கொண்டிருந்த அனைத்து வாகனங்களும் முன்னேறிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. வாகனத்தில் இருந்தவர்கள் கூட இறங்கிச் செல்ல முடியாமல் தவித்தனர். தொடர்ந்து ஏற்பட்ட பனிப் பொழிவானது 16 மணித்தியாலங்கள் நீடித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும்போது 'The Day After Tomorrow' என்ற ஆங்கிலத் திரைப்படமே எமது ஞாபகத்துக்கு வருகிறது.




# இரவில்



இரவு விடுதிகளில் கேளிக்கை, களியாட்டங்களுக்கு அளவேயில்லை. அந்த வகையில் இரவு விடுதி ஒன்றில் நடந்த களியாட்டத்தின் உச்சக் கட்டமே இது. மது அருந்தும் கோப்பை போல வடிவமைக்கப்பட்ட நீர்த் தடாகம் ஒன்றிலே பெண்களும் ஆண்களும் அரை நிர்வாணக் குளியலை மேற்கொள்கிறார்கள். நாகரீகம் வளர்ந்த விதத்தினை நினைத்துப் பெருமைப்படும் எமக்கு இந்தப் பெருமையும் சேரத்தான் வேண்டும்.



# திருகாணி



இது ஒரு பல் வைத்தியரிடமிருந்து கிடைக்கப்பெற்ற எக்ஸ்ரே பிரதியாகும். பார்வைக்கு ஒரு மண்டையோடு போலத் தோன்றினாலும் மண்டை ஓட்டுக்குள் ஒரு ஆணி இருப்பது கண்ணுக்குத் தெரிகிறதல்லவா?. பற்றிக்லோயர் என்ற 23 இளைஞன் 4 அங்குலம் நீளமுடைய இரும்பு ஆணி ஒன்றை துப்பாக்கி மூலம் தனது நாடிப் பக்கமாகச் செலுத்தி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார். ஆயினும் சில பாரிய காயங்களுடன் காப்பாற்றப்பட்டுள்ளார் என்பது இங்கு குறிப்பிட்ட தக்கது. நினைத்தாலே மெய் சிலிர்க்கிறது அல்லவா?

# சத்து

படத்தில் காணப்படுவது ஓகெஸ்ட்ரா இசைக்கருவி போலத் தோன்றினாலும் இது கடற்புழுக்களால் அமைக்கப்பட்ட கூடு ஆகும். இதில் விசேட அம்சங்கள் என்னவென்றால், கடல் புழுக்கள் அமைக்கும் இக் கூடுகளில் மிக அதிகளவிலான புரதம் மற்றும் விற்றமின் சத்துக்கள் நிறைந்து காணப்படுவதாகும். ஆயினும் இக் கூடுகளை மனிதர்கள் உணவுக்குப் பயன்படுத்த, தயங்குகிறார்கள். தயக்கம் வேண்டாம். உடனே பயன்படுத்துங்கள்.